

# அய்யா தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் வாழ்க்கையில்...



ஆசிரியர்

டாக்டர். இராசம்மாள் பா. தேவிதாஸ்



விடுதி பிரார்த்தனைக்கு பின்பு அய்யா அவர்கள் பேசியபோது

அய்யா தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள்

வாழ்க்கையில்...

LIBRARY
108914
T4·4 4136 AVI
3IN5

# அய்யா தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் வாழ்க்கையில்...

டாக்டர் (திருமதி) இராசம்மாள் பா. தேவதாஸ்

(DEEMED UNIVERSITY)
108914
LIBRARY
T4·44136 AVIw
31N5

அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் . 641 043

முதற் பதிப்பு மே 1995

103914

விலை ரூ. 30/-

T4.44136AVIw
31N5

*வெளியிடுவோர் :*
பதிவாளர்
அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 043

அச்சிட்டோர் :
சாரதாலயா அச்சகம்
அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள்
கோயமுத்தூர் - 641 043

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| | அணிந்துரை | |
| 1. | அய்யா அவர்களைத் தினமும் காண்கிறோம் கண்டுகொண்டே இருக்கிறோம் | 1 |
| 2. | ஆண்டவன் அருள் | 7 |
| 3. | ஆயிரங்காலத்துப் பயிர் - மகளிர்க் கல்வி | 12 |
| 4. | தூய்மையுறுக | 25 |
| 5. | அன்பு | 29 |
| 6. | தியாகம் | 35 |
| 7. | அர்ப்பணம் | 41 |
| 8. | பக்தி | 45 |
| 9. | உழைப்பு | 49 |
| 10. | ஆக்கம் | 53 |
| 11. | ஊக்கம் | 56 |
| 12. | வாய்மை | 59 |
| 13. | எளிமை | 64 |
| 14. | அகிம்சை | 70 |
| 15. | அனுதாபம் | 75 |
| 16. | பொறுமை | 79 |
| 17. | அஞ்சாமை | 84 |
| 18. | நம்பிக்கை | 90 |

பக்கம்


| | | |
|---|---|---|
| 19. | விவேகம் | 95 |
| 20. | தலைமைக் குணம் | 97 |
| 21. | அழகு உணர்வு | 102 |
| 22. | காலம் தவறாமை | 106 |
| 23. | சிந்தனைத் திறன் | 110 |
| 24. | கடமையாற்றுதல் | 114 |
| 25. | நகைச்சுவை | 119 |
| 26. | முன்னேற்றத்தில் தீராத ஆர்வம் | 122 |
| 27. | மனிதர்களை மாண்புற உருவாக்குதல் | 129 |
| 28. | மனிதரை மதித்தல் | 133 |
| 29. | பாராட்டும் பண்பு | 136 |
| 30. | எச்செயலிலும் சமத்துவம் | 140 |
| 31. | சான்றாண்மை | 143 |
| 32. | உயர்ந்த எண்ணங்கள் | 148 |
| 33. | வெற்றியைச் சாதிக்கும் பாங்கு | 155 |
| 34. | நிலைத்த புகழ் | 162 |

# முன்னுரை

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றபடி பெறற்கரிய மானிட பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும், பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடியைச் சேருவதற்கு, நற்குண நற்செய்கையால் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெறுகின்றவர், தெய்வ நிலையை அடைகின்றவர் பிறர்வாழ வழிகாட்டுகின்றவர். அவர்களைத் தெய்வமாக வழிபடுகின்றோம்.

அமரர் அய்யா டாக்டர் அவினாசிலிங்கம் அவர்கள், மனிதருள் மாணிக்கமாய், அன்பின் உருவாய், உண்மையின் உறைவிடமாய், எளிமைக்கு இலக்கணமாய், நேர்மைக்கு எடுத்துக்காட்டாய், பிறர் நலம் பேணும் பண்பாளராய். ஆண்டவன் அருளை அனுதினமும் பெற்றவராய், நாட்டுக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்விற்காகவும், குறிப்பாக, மகளிர் கல்விக்காகவும், தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட தியாகச் செம்மலாய் வாழ்ந்தார்கள்.

அய்யா அவர்கள் சுதந்திரம் அடைந்த சென்னை மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சராக

இருந்தபொழுது, ராணி மேரி கல்லூரியில் மனையியல் பாடத்தைக் கற்பிக்கும் முதல் ஆசிரியையாகப் பணி செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது சுதந்திரத் தினக்கொடியை ஏற்ற, அய்யா அவர்கள் கல்லூரிக்கு வந்த பொழுது, முதன் முதலாக அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது அவர்களிடம் நான் விரைவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று மனையியல் உயர் பட்டம் பெற்றுத் திரும்ப விழைகிற என் தணியாத ஆர்வத்தை எடுத்துரைத்தேன். அவர்களும் எனக்கு நல்லாசி கூறி ''விரைவில் வெற்றியுடன் தாயகம் திரும்பி நாட்டுக்காக உழைக்க வேண்டும்'' என்று சொன்னார்கள். அப்பொழுது அவர்களிடம், ''மனையியல் கல்லூரி ஆரம்பித்தீர்களானால் நான் வந்து பணிபுரிகிறேன். அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்று உறுதியளித்தேன்.

ஆண்டவன் அருளால், அமெரிக்காவில் சிறப்பாக என் கல்வியை முடித்து டாக்டர் பட்டத்துடன் 1950-ம் ஆண்டு ஜுன் மாதம் நாடு திரும்பினேன். மத்திய அரசிடம் நான் ஏற்றுக் கொண்டிருந்த ஒப்பந்தத்தின்படி நான் அவர்கள் தரும் பணியை ஐந்து ஆண்டுகளாவது செய்ய வேண்டும். அய்யா அவர்களின் ஆசிபெறப்பார்த்த போது, அவர்கள், ''டெல்லியில் ஐந்து ஆண்டுகள் என்ற கடமையை நிறைவேற்றிவிடுங்கள். அதற்குப் பிறகு கோவையில் கல்லூரி ஆரம்பிக்க வந்து விடுங்கள்'' என்று கூறினார்கள். அவ்வாறே எங்கள்

மனையியல் கல்லூரி 1957-ம் ஆண்டு உருவாகியது. அன்று முதல் அய்யா அவர்கள் இம்மண்ணுலகை விட்டுச் சென்ற நாள் வரையிலும் 34 ஆண்டுகள் அவர்கள் தலைமையில் தொடர்ந்து பணிபுரியும் பெரும் பாக்கியத்தைப்பெற்றேன்.

அய்யா அவர்கள் தான் ஆரம்பித்த, நடத்திய ஒவ்வொரு முயற்சிக்கும் 'ஆண்டவன் அருள்' என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்கள், பக்தியோடு, சிரத்தையோடு பணி செய்ய வேண்டும் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தார்கள். ''ஆற்றலுக்கு எல்லை உண்டோ? ஏன் எதற்கும் அஞ்சவேண்டும்? தைரிய மாகச் செயல்படுங்கள்'' என்பார்கள். ''உங்களில் சிலபேராவது நாட்டுக்கு உழைக்க அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். நமக்கு பணம் பெரிதல்ல, காசு பெரிதல்ல, அன்பு தான் பெரிது. அன்பைக் கொடுங்கள்'' என்றும் ''அன்னையின் பிள்ளை களாகிய நீங்கள் அன்னையின் அரவணைப்பில் ஆனந்தமாக இருப்பீர்கள்'' என்றும் வாழ்த்திக் கொண்டேயிருப்பார்கள்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கிணங்க, அய்யா அவர்களிடம் அனுதினமும் நான் பெற்ற ஆசியையும், அய்யா அவர்களின் நற்குணங்களையும் அனைவரிடமும் எடுத்துரைத்துப் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறேன். அய்யா அவர்களிடம் கண்ட சில நல்லிணக்கங்களைப் பிறருக்கு எடுத்துரைக்க வேண்டுமென்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

'எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்'

என்ற பாரதியாரின் பாடல்படி என் எண்ணங்களை மாதந்தோறும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் 'விஞ்ஞானச்சுடர்' என்ற எங்கள் மாத இதழிலேயே வழங்கி வந்தேன். அந்தக் கட்டுரைகளே இன்று இந்த நூலாக வெளிவருகிறது.

அய்யா அவர்களுடைய வாழ்க்கை, பண்புகளும் பக்தியும் நிறைந்த ஆழ்கடல் போன்றது. அவர்களுடைய ஆன்மீகத் தாக்கத்திற்கு ஆளாகிய நான் என் உணர்வுகளில் ஒட்டிய ஒரு சில குண நலங்களையே இந்நூல் மூலமாக விவரித்திருக்கிறேன். நம் இளைஞர்களின் ஒழுக்கத்தையும், வீரத்தையும் வளர்க்க இந்நூல் உதவிடுமென மனமார நம்புகிறேன்.

இந்நூலுக்கு அன்புடன் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் அணிந்துரை அளித்திருக்கிறார்கள். அய்யா அவர்கள்பாலும், எங்கள் நிறுவனங்களின்பாலும் அவர்களுக்குள்ள அன்பு பெரிது. வள்ளல் அவர்களின் கைகளில் அள்ளிக்கொடுக்கப்படும் எதுவும் முழு வெற்றியைத்

தரும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் இன்முகத்துடன் வழங்கியிருக்கும் அணிந்துரை வாழ்த்துரையாகவே அமைந்துவிட்டது. அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை அச்சிலேற்ற பல்லாற்றாலும் உதவி செய்த எங்கள் பதிவாளர் டாக்டர் சரோஜா பிரபாகரன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரித்ததாகும். அச்சுப்பிழையின்றித் திருத்தி நூலைப்பதிப்பிட உதவிய திரு. ப. நாகேந்திரனுக்கும் நன்றி.

இந்நூலைத் தமிழக மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இராசம்மாள் பா. தேவதாஸ்
வேந்தர்
அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 043

# அணிந்துரை

மதிப்பிற்குரிய டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் தமிழகம் தந்த தவப்புதல்வருள் ஒருவர். ஐயா என்றே அனைவராலும் அழைக்கப்படும் அளவுக்குச் சீரிய பண்பாளர்.

நாட்டு விடுதலைப் போராட்டத்திலும், விடுதலைக்குப் பின் அவர்கள் தமிழக அரசில் மேற்கொண்ட அமைச்சுப் பொறுப்பிலும் ஆற்றிய பணி மிகப் பெரிது.

கல்விச் செம்மல் என்று நாடு போற்றும் ஐயா அவர்கள் தமிழ் மொழியின்பால் கொண்ட ஆர்வம், திருக்குறளைப் பரப்புவதற்கு அவர்கள் செய்த பணிகள் எல்லாம் வரலாற்றில் இடம் பெறுபவை.

டாக்டர். ராஜம்மாள் பா. தேவதாஸ் அவர்கள் மதிப்பிற்குரிய தி.சு. அவினாசிலிங்கம் ஐயா அவர்களால் உருவாக்கப்பெற்ற சிறந்த கல்வி மேதை.

ஐயா அவர்கள் கோவையில் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை நிறுவியபோது மத்திய அரசாங்கத்தில் பெரும் பதவியில் இருந்த டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் கல்லூரிக்குப் பொறுப்பேற்றுச் செம்மையாக நடத்தி அதைப் பல்கலைச்கழக அந்தஸ்துக்கு உயர்த்தி (DEEMED UNIVERSITY) ஐயா அவர்களே அதன் வேந்தராக இருந்துச் செயலாற்றும் வகையில் சிறப்பான பணிபுரிந்தார்கள்.

சென்னை ராணி மேரி கல்லூரியில் படித்த நாட்களில் சிறந்த மாணவியாக விளங்கிய திருமதி ராஜம்மாள் தேவதாஸ், சுதந்திர அரசு அமைந்தபோது அமெரிக்க நாட்டுக்கு அரசு ஆதரவு பெற்றுச் சென்றார்கள். டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் தமது வாழ்க்கையைக் கல்விக்காகவே அர்ப்பணித்தவர்கள்.

அவரது குடும்பத்தார் திருப்பத்தூரைச் சேர்ந்தவர்கள். அவருடைய தந்தையார் பெரிய குடும்பத்தைப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வந்தவர். குழந்தைகள் அனைவருக்கும் உயர் பயிற்சியும் படிப்பும் அளித்துச் சிறந்த கல்வியாளர்களாக ஆக்கினார். அவர்களது தாயாரைச் சென்ற 20 ஆண்டுகளாக அடிக்கடி பார்க்கும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். காவல் துறையில் இருந்த திரு தேவதாஸ் அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களை அடிக்கடி பார்த்திருக்கிறேன். டாக்டர் ராஜம்மாள் குமாரர் டாக்டராகப் பயின்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்த போதும், பின் ஆஸ்திரேலியாவில் இருந்த போதும் அவரோடு எனக்குத் தொடர்பு உண்டு. இளம் வயது முதற் கொண்டே அவரை நன்கு அறிவேன்.

அமரர் அவினாசிலிங்கம் ஐயா அவர்களது கல்விப்பணி கோவை ராமகிருஷ்ண வித்யாலயம், கோவை மனையியல் கல்லூரி என்று இரு பகுதிகளாக அமைந்தது. ராமகிருஷ்ண வித்யாலயம் இப்போது ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பொறுப்பில் நன்கு இயங்குகிறது.

அவினாசிலிங்கம் மனையியல்பல்கலைக்கழக வேந்தராக இருக்கும் டாக்டர் ராஜம்மாள் பா. தேவதாஸ் அவர்கள் ஸ்ரீஅவினாசிலிங்கம் ஐயா அவர்கள் வாழ்க்கையை அன்பு, வாய்மை, தூய்மை, அகிம்சை, பக்தி எளிமை, காலம் தவறாமை, முன்னேற்ற ஆர்வம் முதலிய 34 கோணங்களிலிருந்து பார்த்துச் சிறப்பாக இந்த நூலை எழுதியுள்ளார். இராமகிருஷ்ண பரமஹம்சர், காந்தியடிகள், விவேகானந்தர், ஐயா அவர்கள் முதலியோர் வாழ்க்கையிலிருந்து இந்த நல்ல பண்புகளுக்கு மேற்

கோள்கள் காட்டி விளக்கியிருக்கிறார்கள். இளம் மாணவ, மாணவிகளுக்குப் படிப்பதற்கும், அவர்களுடைய வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள் அமைவதற்கும் உதவக்கூடிய நல்ல நூலைத் தந்திருக்கிறார்கள் இது யுவ ஆண்டு, ஐயா அவர்களின் உன்னதக் குறிக்கோள்களைப் பின்பற்றக்கூடிய யுவர்களும் யுவதிகளும் இந்த யுவ ஆண்டு முதல் உருவாக வேண்டும் என்பது என் பிரார்த்தனை.

அழகாகவும், அருமையாகவும் இந்த நூலை உருவாக்கியிருக்கிற டாக்டர் ராஜம்மாள் பா. தேவதாஸ் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

101 அண்ணா சாலை
கிண்டி
சென்னை - 32

நா. மகாலிங்கம்

# 1. அய்யா அவர்களைத் தினமும் காண்கிறோம் - கண்டுகொண்டே இருக்கிறோம்

தேவரீர் அய்யா டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் 1903-ம் ஆண்டு, புத்தர் பிறந்த நாளாம் மே மாதம் ஐந்தாம் தேதி பிறந்தார்கள். 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி இப்பூவுலக வாழ்க்கையை நீத்து இறைவனின் திருவடியை அடைந்தார்கள். அவர்கள் நம்மை விட்டுச் சென்று நான்கு ஆண்டுகள் கழிந்து விட்டாலும், அவர்களைத் தினமும் காண்கிறோம்; கண்டுகொண்டே இருக்கிறோம். அவர்கள் நல்லாசி எப்பொழுதும் எங்களை வழிகாட்டி வருகிறது.

முடிவில்லாத மௌனமும், கண்களுக்கெட்டாத தூரமும் அய்யா அவர்களுடைய பரம வாழ்க்கையாகிவிட்டது. ஆனால் விடியற்காலையில் அவர்கள் எழும்பும் 4.30 மணி முதல் அவர்களுடைய குரல் எங்களை அழைத்துச் செயல்படப் பணிக்கிறது. தினமும் காலையில், நாங்கள் அளிக்கும் செண்பகப்பூ, மல்லிகை, ரோஜா, சாமந்தி, மருவு ஆகியவை அடங்கிய பூங்கொத்தின் மணத்திலும், அழகிலும் ஒன்றிய அய்யா அதை முகர்ந்து, பாராட்டி, விரும்பி அணிந்து கொள்வதை நினைத்து, அப்பூக்களில் அவர்களைக் காண்கிறோம். அவ்வப்போது சாரதாலயத்தில் இடம் பெறும் மலர் அலங்காரக் காட்சிகளைக் கண்டு ரசிப்பதிலும், திருகோவிலிலும், கமிட்டி அறையிலும், கூட்டங்கள் நடத்தும் அரங்குகளிலும் அத்தகைய மலர் அலங்காரங்களில், அவர்களுடைய மகிழ்ச்சியைக் காண்கிறோம்.

அய்யா அவர்கள் அமரராகி விட்ட செய்தி கிடைத்ததும் எங்களுக்கு ஆறுதல் கடிதத்தை உடனே அனுப்பிய அந்நாள் குடியரசுத்தலைவர் உயர்திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்கள் அய்யா அவர்களிடம் வைத்திருந்த மதிப்பிலும் பாசத்திலும், அய்யா அவர்கள் விட்டுச் சென்ற தலைமைப் பொறுப்பை, அவர்கள் சார்பாக ஏற்று நடத்திய திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் எங்களோடு பரிவுடனும், அன்புடனும், ஆலோசனை நடத்தும் போதும் அய்யா அவர்களைக் கண்டோம். வித்யாலயத்தில் தவத்திரு சோமானந்த சுவாமிகளும், தவத்திரு தன்மயானந்த சுவாமிகளும் காட்டும் அன்பிலும், டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுடைய அன்பிலும், பண்பிலும் அய்யா அவர்களைக் காண்கிறோம்.

சாரதாலயத்தில் அய்யா அவர்கள் பாதங்கள் பட்ட இடங்களிலும், உயர்ந்தோங்கி நிற்கும் கட்டிடங்களின் அமைப்பிலும் அவர்களைக் காண்கிறோம் சாரதாலயத்தில் அன்னையின் திருக்கோயில் வழிபாட்டில், அய்யா அவர்களின் பக்தி நிறைந்த முகம் காட்சியளிப்பதைக் கண்டு களிக்கிறோம்.

மாதந்தோறும் அய்யா ஆர்வமுடன் படித்து ரசித்த 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' (Readers' Digest) இதழில் அவர்கள் விரும்பும் கட்டுரைகளில், அவர்களின் மலர்ந்த முகம் தோன்றுகிறது. எங்கள் வெளியீடுகள், கடிதங்களில் குறிப்பிட்ட வாசகங்களைப் படித்துப் பாராட்டும் பாங்கில் அய்யாவின் அன்பு முகம் தெரிகிறது. தொலைபேசியின் மணி ஒலிக்கும் போதெல்லாம் அய்யா அவர்களின் குரலைக்

கேட்கிறோம். எங்களின் ஒவ்வொரு முயற்சி துவங்கும்போது அய்யா அவர்கள் தந்த ஆசியிலும், முயற்சியின் முடிவில், வெற்றியுடன் முடித்த செய்திகளைக் கேட்கும் ஆர்வத்திலும் அவர்களைக் காண்கிறோம். தமது அறையின் சோபாவில் அமைதியாக அமர்ந்து மணிக்கணக்கில் ஆழ்ந்த சிந்தனை யிலும், தியானத்திலும் இருந்த காட்சியை அந்த சோபாவில் தொடர்ந்து காண்கிறோம்.

அய்யா அவர்கள் தன் படங்களை எங்கும் மாட்டக் கூடாது எனவும் ஸ்ரீ குருமகராஜ் போன்ற பெரியோர்களின் படங்களைத் தான் நமது நிறுவனங்களில் வைக்க வேண்டும் என்றும் கூறினார்கள். அவர்கள் இவ்வுலகத்தைவிட்டுச் சென்ற அன்று அவர்களுடைய படம் ஒன்று கூட மாட்டு வதற்கில்லாத நிலையில் இரவோடு இரவாக அவர்கள் திருவுருவங்கொண்ட படத்தைத் தயார் செய்த, எப்போதும் நம்முடைய நிகழ்ச்சிகளில் ஈடுபடும் புகைப்பட நிபுணர் கண்ணனுடைய பாசத்தில் அய்யா அவர்களுடைய அன்பு மிளிர்கிறது.

அய்யா அவர்கள் இவ்வுலகத்தில் இருக்கும்போது, நாங்கள் கிறிஸ்துமஸ் விழா, அன்னை விழா, பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழக மானியக்குழு மனையியல் பயிற்சிகள் ஆகியவற்றிற்குச் செய்திருந்த ஏற்பாடுகளை நிறையப் பாராட்டுவார்கள். அவற்றை நினைவுகூர்கையில் அவர் களை நாங்கள் காண வைக்கிறது. அவினாசிலிங்கம் அறக் கட்டளையின் நிறுவனங்கள் தழைத்து ஓங்கித் தொண்டுபுரிய வழிவகுத்தார்கள். அதில் தொடர்ந்து உதவி புரிய டாக்டர் குழந்தைவேலைத் தேர்ந்தெடுத்து நம் பல்கலைக்கழகத்

திற்கும் முதல் பதிவாளர் ஆக்கினார்கள். நானும் அவரும் ஒரு மனதுடன் ஒத்துழைத்து அய்யா அவர்களின் லட்சியங்களைக் காப்பது கண்டு பலமுறை மனம் உவந்து பாராட்டியிருக்கிறார்கள். இப்பொழுது நானும் டாக்டர் குழந்தைவேலும் பல திட்டங்களைக் குறித்துக் கலந்தாலோசிக்கும் போது அய்யா அவர்களைக் காண்கிறோம். நம் அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள் திரு. டி.கே சண்முகானந்தம், திரு. செங்கோட்டுவேலன், திருமதி தனலட்சுமி அம்மாள், திரு. ஞானதுரை (பாபு), டாக்டர் சி. கோபாலன், டாக்டர் கோதாவரி கமலநாதன், டாக்டர் லக்ஷ்மி சாந்தா ராஜகோபால் அவர்கள் காட்டும் பரிவுணர்ச்சியில் அய்யா அவர்கள் தெரிகிறார். அக்கா லெக்ஷ்மி மேனன் அவர்களின் பெரிய மனத்தில் அய்யா அவர்கள்பால் வைத்திருந்த பாசம் மகத்தானது. அவர்களும் அமரராகி அய்யா அவர்களைச் சேர்ந்து விட்டார்கள்.

ஆரம்பம் முதல் உழைக்கும் திரு ரவீந்திரநாதன், திரு. ரங்கநாதனுடைய உழைப்பிலும், டாக்டர் சரோஜா பிரபாகரன், டாக்டர் நிர்மலா கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் சந்திரமணி, டாக்டர் ராமதிலகம், டாக்டர் விஜயலட்சுமி புருஷோத்தமன். டாக்டர் பார்வதி ஈஸ்வரன், டாக்டர் உஷா சந்திரசேகர், டாக்டர் ஜெயா, டாக்டர் சத்தியவதி முத்து, டாக்டர் சீதாலட்சுமி, டாக்டர் சி.வி.ஆர். இந்திரா. திருமதிகள் து. லலிதா, சுபாஷினி, பி.எஸ். சரோஜா, ஓ. விஜயலட்சுமி, ராதிகா, துளசிபாய், ஆர். ராஜலட்சுமி ஆகியோரின் அன்பிலும், அவர்கள் அய்யா அவர்களைக் கண்டு உபசரிக்க முடிந்ததை வாழ்க்கையில் பெரும்பேறாகக் கருதுவதைக் கூறும் போதும் அய்யா அவர்கள் காட்சி தருகிறார்கள். கிருஷி விஞ்ஞான் கேந்திரத்தில் டாக்டர் முத்தையா மனோகரன், சிரமிக் வித்தியாபீடத்தின் இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி, திரு பாலசுப்பிரமணியம் ஆகியோருடைய அன்பு நிறைந்த பொறுப்புணர்ச்சியில் அய்யா அவர்களின் தோற்றம் தெரிகிறது.

அய்யா அவர்கள் சாரதாலயத்திற்கு வந்து காரை விட்டு இறங்கும்போது அவர்களுக்கு ஓடிவந்து வணக்கம் சொல்வார்களே ஆரம்பப் பள்ளி மாணவ மாணவியர், அவர்களது மாசற்ற முகங்களில் அய்யா அவர்களைக் காண்கிறோம்.

'எத்தனை ஜென்மங்கள் வந்து பிறந்தாலும்' என்ற அய்யா அவர்கள் விரும்பும் பாடலைக் கேட்கும் போதும், அவர்கள் வாழ்த்திய 'நல்ல பிள்ளைகளை'க் காணும்போதும், அவர்கள் விரும்பும் கட்டுரை, கவிதை, வரலாறுகளைப் படிக்கும்போதும், விடுதி மாணவியர் மகிழ்ச்சியோடு இருப்பதைக் காணும்போதும், விடுதிக் காப்பாளர்களாகிய டாக்டர் சரோஜா பிரபாகரன், திருமதி ஜெயா ஆகியோரை மனமாரப் பாராட்டும் போதும், திருமதி ஜனகமாயா, திருமதி வசந்தா பரத்வாஜ் ஆகியோர் பக்தியோடு ஏற்பாடு செய்யும் பஜனை, பூசைகள், கூட்டங்கள் மற்றும் நற்பணிகளில் எல்லாம் அய்யாவைக் காண்கிறோம்.

குருடி மலையின் காட்சியிலும், குன்னூரில் உள்ள நந்தவனத்தில் மலரும் நல்ல பூச்செடிகளிலும், தோட்டத்தில் நடக்கும்போதும், அய்யா அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியின் புன்னகையில் அய்யாவின் காட்சி கிடைக்கிறது. கண்ணியத்துடனும், பொறுமையுடனும் கடைசி நாட்களைக் கழித்த பாங்கிலும், நோயின் வலி,வேதனை எதையும் தெரிவிக்காமல் சகித்துக் கொண்ட பாணியிலும், வாழ்க்கையில் கடின உழைப்பிலும், சாதனையிலும் அய்யாவைக் காணமுடிகிறது. 'ஆண்டவன் அருள்' என்று அனைத்தையும் ஏற்றுக்கொண்டு வாழ்க்கை ரதத்தை நேர்மையாகச் செலுத்திய செம்மலின் மன உறுதியில் காண்கிறோம்.

வித்யாலயத்தில் ஆலமரத்தடியில் தூய்மையான வெள்ளையுடையுடன் சிவப்பழமாக நெற்றியில் திருநீருடன் தேவாரம், திருவாசகம், திருக்குறள் படித்து எங்களுக்

கெல்லாம் காலை சிற்றுண்டித் தந்த நினைவு நிரந்தரமானது. அந்த ஆலமரம் தான் அய்யா அவர்களின் இறுதி யாத்திரைக்கும் இடமளித்தது. அந்தக்காட்சி எங்களை விட்டு அகலாமல் எங்கள் உள்ளத்தில் அய்யாவைக் காட்டிக் கொண்டே இருக்கிறது.

இறந்தவர்கள் மறைந்து விட்டார்கள், திரும்பவும் காணமுடியாது என்பது எங்களைப் பொறுத்தவரை உண்மையில்லை. அய்யா அவர்களை ஒவ்வொரு நிமிடமும் பார்க்கிறோம். வெளிச்சத்திலும், இருட்டிலும், துன்பத்திலும், இன்பத்திலும், மேட்டிலும் பள்ளத்திலும் எப்படி வாழ வேண்டுமென்று விரும்பினார்களோ, அவ்வாறு நடந்து கொள்ளுவதில் அவர்களைக் காண்கிறோம்.

---

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

— *திருக்குறள்*

---

# 2. ஆண்டவன் அருள்

அய்யா டாக்டர் தி.சு.அவினாசிலிங்கம் அவர்கள் வாழ்க்கையில் 'ஆண்டவன் அருள்' என்ற உண்மை உயிரோட்டத்துடன் நிறைந்து இருந்தது. எந்த முயற்சியைத் துவங்கினாலும், நடத்தினாலும் ஊழியர்களை வாழ்த்தினாலும், 'ஆண்டவன் அருள்' என்று வர்ணிப்பது அவர்களுடைய வாழ்க்கை நியதியாக இருந்தது. 1957-ஆம் ஆண்டு திரு அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியை ஆரம்பித்து வைக்க வந்த அன்றைய துணைக் குடியரசுத் தலைவரும் பின்னாள் குடியரசுத் தலைவருமான டாக்டர் சர். இராதாகிருஷ்ணன் அய்யா அவர்களின் வரவேற்புரையைக் குறித்து பேசும்போது "திரு அவினாசிலிங்கம் அவர்கள் இந்த உரையில் சுமார் 20 தடவைகளுக்கு மேல் 'ஆண்டவன் அருள்' என்று கூறியிருக்கிறார்கள். அந்த தெய்வ நடத்துதல் தான் அவர்களின் தியாகம், சேவை, வெற்றிகளுக்கு அடிப்படை" என்று கூறினார்கள். அய்யா அவர்கள் மறைவுக்கு சிறிது நாட்களுக்கு முன்பு கடைசியாக நடந்த இராமகிருஷ்ணமிஷன் வித்யாலய வைர விழாவில் நிறைவுரையை ஆற்றிய, அய்யா அவர்களின் நீண்டகால நண்பரும், சுதந்திரப்போராட்டக் காலத் தோழருமான முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்களும், "அய்யா அவர்கள் இத்தனை சேவைகளைச் செய்த பிறகு தாம் எதையும் செய்ததாகக் குறிப்பிடாமல், யாவும் ஆண்டவன் அருள் என்றும், சக ஊழியர்களின் பணியென்றும் எவ்வளவு பணிவுடன் குறிப்பிட்டார்கள்!" என்று எடுத்துக்காட்டி அய்யா அவர்களின் தியாகத்தை வியந்து மனமாரப் பாராட்டி வாழ்த்தினார்கள்.

அய்யா அவர்களின் எண்பதாவது வயது நிறைவு நினைவாக, அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்கள்

தத்துவங்களையும், அவர்களுடன் உழைத்த நண்பர்கள், ஊழியர்கள், முன்னாள் மாணவர்களிடம் கேட்டுச் சேகரித்துப் பதிப்பித்த புத்தகத்திற்கு என்ன தலைப்பு தரலாம் என்று அய்யா அவர்களை நான் கேட்டபொழுது, ''ஆண்டவன் அருள்'' என்று போடுங்கள் என்று கூறினார்கள். அந்த அருமையான படைப்பு அப்படியே ஆண்டவனருளால் 'ஆண்டவன் அருள்' என்று அச்சிடப்பட்டு மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்களால் 9.9.1984 அன்று வெளியிடப்பட்டது. அய்யா அவர்களின் வாழ்க்கையைப் போற்றும் அனைவரும் அவர்கள் வாழ்க்கையைப் பின்பற்றி நடக்க வேண்டிய இன்றைய இளைஞரும் படித்து பயன்பெற வேண்டிய நூல் அது.

ஆண்டவன் அருள் இருந்தால்தான் ஆண்டவனை வணங்கி வழிபட முடியும் என்பதை ''அவனருளால் அவன் தாள் வணங்கி'' என்று திருவாசகம் காட்டுகிறது. ஆண்டவன் அருளைப் பெரிதும் போற்றிய வைஷ்ணவ ஆழ்வாரும் 'ஆண்டவனைத் தினமும் போற்றி வணங்கி வழிபாடு செய்யும் ஆர்வத்தை அவன் அருள் பொழிந்து தரட்டும்' என்று வேண்டினார்கள்.

''சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் செப்பநா அமைத்தேன்
வந்தனை செய்ய தலை அமைத்தேன் கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன் மெய்யரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசர்க்கு இவையான் விதித்தனவே''

என்ற பொன் வண்ணத் திருவந்தாதி பாடலுக்கேற்ப நம்மை உலகில் படைத்தது அவனை வணங்க வேண்டும் என்பதை அய்யா அவர்கள் அடிக்கடி நினைவு கூர்வார்கள்.

ஆண்டவன் அருள் என்பது தான் என்ன? ஆண்டவன் அருள் என்பது ஆண்டவனிடத்தில் செலுத்தப்படும், விவரிக்க முடியாத அற்புதமான கருணையும், சக்தியும், ஈர்ப்பும் நிறைந்த ஒரு மகத்தான பொலிவு ஆகும். அது சுதந்திரத்தைக் கட்டுப்பாட்டுடன் இணைத்து ஆண்டவனுடைய அளவற்றக் கருணையுடன் இலவசமாகக் கிடைப்பது. அது ஆண்டவனே உகந்து அளிப்பது. அதை ஓர் உரிமையாகவோ பிறப்பு வழி வந்த சொத்தாகவோ (birth right) எடுத்துக் கொள்ள முடியாது. ஆண்டவனே கைம்மாறு கருதாமல், ஆசியாகக் கொடுப்பது தான் ஆண்டவன் அருள். இதை நம்மாழ்வார் ''ஆண்டவன் நம் உள்ளங்களைக் கவரும் கள்வன். அவன் அருளால் அவன் நம்மை அவன் வலையில் சிக்க வைத்து ஆசை, பற்றுகளையெல்லாம் அறுத்தெறிந்து அவனையே நினைத்துக் கொண்டிருக்க வைக்கிறான்'' என விவரிக்கிறார்.

ஆண்டவன் அருள் எல்லையற்றது. வலிமை நிறைந்தது. அளவில்லாதது. அதை எதனாலும் யாராலும் குறைக்க முடியாது. ''ஆண்டவன் ஒரு குழந்தை தன் தாயின் மார்பில் சாய்ந்து கொள்வதுபோல் தன் தொண்டர்களைப் பிடித்துப் பற்றி கொள்கிறான். அவர்களைத் தன்னை விட்டுப் போக விடமாட்டான். அவன், அவர்கள் உள்ளங்களிலும், வெளியிலும், அருகிலும் செயலாற்றும்போதும், தூங்கும்போதும் எப்போதும் இருக்கிறான். அவர்கள் தோள்களில் சாய்ந்து கொள்வதிலும், அவர்கள் நாவில் உறைவதிலும் பேரானந்தம் அடைகிறான். அவர்களுடைய கண்களின் மணியில் அவன் காணப்படுகிறான். அவர்கள் புருவங்களின் மத்தியில் அவன் இருக்கிறான். அவர்கள் உச்சந்தலையில் அவன் அமர்ந்திருக்கிறான்'' என்று நம்மாழ்வார் பாடுகிறார். இதுவல்லவோ ஆண்டவன் அருள்!

ஆண்டவனுடைய அருள்செல்வம் இல்லையென்றால், வேறு எந்தச் செல்வம், படை இருந்தாலும் பயனில்லை

என்பதை மகாபாரதக் கதையே காட்டுகிறது. யுத்தத்தில் வெற்றியைக் காக்கத் துரியோதனனும், அர்ஜுனனும், கிருஷ்ண பரமாத்மாவின் உதவியை நாடித் துவாரகைக்குச் செல்லுகிறார்கள். அர்ஜுனன் தூங்குவது போல் தோற்ற மளித்த கிருஷ்ணனின் காலடியில் நிற்க, துரியோதனன் தலை மாட்டில் அமர்ந்து இருக்கிறார். கிருஷ்ணன் கண் விழித்ததும் அர்ஜுனனைத் தான் முதலில் பார்க்கிறார். ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்கப் பார்த்திபனும் ''கிருஷ்ணா எனக்கு உன்னருள் ஒன்றே போதும்'' என்று சொன்னான். துரியோதனனோ, கிருஷ்ணனுடைய படைபலம் முழுவதையும் கேட்டான். ஏற்கனவே பாண்டவருடைய படையைவிட அதிகமாக இருந்த அவன் படை மேலும் பெருகியது. ஆனாலும் என்ன பயன்? அர்ஜுனன்தான் வென்றான். உலகில் செல்வம், உறவினர், பலம், பதவி, புகழ் அனைத்தும் இருந்தாலும், ஆண்டவன் திருவருள் இல்லையேல் பய னில்லை. ஆகவே மற்ற எல்லா செல்வங்களையும் விட ஆண்டவனருள் என்ற செல்வம் ஒன்றுதான் நமக்குத்தேவை. அதுதான் அய்யா அவர்கள் வாழ்க்கையில் மணிமகுடமாக இருந்தது. அதைத் தேடி நாடிப் பற்றிக் கொள்ள வேண்டும்.

பகவத் கீதையிலும் பகவான் கிருஷ்ணன் கூறுகிறார், ''எல்லோருக்கும் நான் ஒரே மாதிரி இருக்கிறேன். அனைவரும் எனக்குச் சமம். அனைவருக்கும் - பாவிகளுக்கும் நல்லவர்களுக்கும் - நான் முக்தி தருகிறேன். எனக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று இல்லை. யார் என்னை மனமார ஆன்ம சுத்தியுடன் கோபிகளைப்போல் உண்மையாக வழிபடுகிறார்களோ அவர்கள் உள்ளங்களில் இருக்கிறேன். அவர்களும் என் உள்ளத்தில் இருக்கிறார்கள்''. இதுதான் ஆண்டவன்அருள். ஏசுநாதரும் 'ஆண்டவனருளால் தான் நீங்கள் ரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்' என்று சொன்னார்.

இத்தகைய ஆண்டவன் அருள் எப்படி எப்படியெல்லாம் நம் சாரதாலயக் குடும்பத்தைக் காத்து உயர்த்தி வந்துள்ளது

என்பதற்கு அய்யா அவர்கள் வாழ்க்கையே பெரிய சான்று.

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே-நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே-அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே''

என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க நல்லவரும், வல்லவரும் ஆகிய அய்யா அவர்களுக்குரிய ஒப்பற்ற குணங்களில் ஒன்றாகிய ஆண்டவன் அருள் நம்பிக்கையைப் பற்றி தெரிந்து கொள்வது எல்லோருக்கும் பயன்தரும். ஆண்டவன் அருளால் தொடர்ந்து ஆன்மீக வழியில் ஈடுபட்டு உயர்வோம்.

---

வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

— *திருக்குறள்*

---

# 3. ஆயிரங்காலத்துப்பயிர் - மகளிர்க் கல்வி

(கற்களும் கருத்துக்களும் காட்டுபவை)

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தைச் சேர்ந்த நமக்கு அய்யா அமரர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் சாரதாலயத்தை, ஆயிரங்காலத்துப் பயிராக அளித் திருக்கிறார்கள். எண்ணங்களும் வாழ்க்கை முறைகளும், தனிநபருக்கும் தலைமுறைக்கும் பயன்தர வேண்டுமென்ற அரிய நோக்கத்துடன் சுயநலமின்றி அடுத்தடுத்து வரும் பல சந்ததிகளுக்குப் பயனாகும் வண்ணம் தமது நிறுவனங் களுக்கு அடிகோலிட்டார்கள்.

1954-ஆம் ஆண்டில், சாரதாலயம் என்ற புனிதப் பெயரால் அரசு கொடுத்த நிலத்தில் இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்திலிருந்து சுவாமிகளுடன் அப்பூமியின் மண்ணை எடுத்து வந்து தூவி, வழிபாட்டுடன் பூமிபூசை செய்து அஸ்தி வாரம் தோண்டப்பட்டது. எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஆசியோடு பல்லாயிரம் ஆண்டு நிலைத்து நிற்கும் இக்கல்விக் கூடத்திற்கு, அடித்தளம் நாட்டினார்கள் அன்றுமுதல் கட்டிட வேலைகள் துரிதமாயின. இன்னும் கட்டிடப்பணி முடிந்தபாடில்லை. தொடர்ந்து நடந்து கொண்டே யிருக்கிறது.

கட்டிடங்கள் தான் எப்பேர்பட்ட கட்டிடங்கள்? கருங் கல்லால் கம்பீரமாகக் கிரேக்க தேச கட்டிடக்கலைப்பாணியில் அதிக வலிமையுள்ள அமைப்புகளாகக் கட்டப்பட்டுள்ளன.

நெடுங்காலத்திற்கு இடிசல், கீறல், ஒழுகல், கறைப்படுதல் ஆகியவை இல்லாமல் அய்யா அவர்களின் மனவலிமையைக் காட்டுவதுபோலத் தோற்றமளிக்கின்றன. வருங்கால தலைவிகளுக்கு நிலைத்தக் கல்வியை தருவதற்காக - முதன்முதலில் அடிக்கல் நாட்டப்பட்ட கட்டிடம் சாரதாலய வளாகத்தில் நடுநாயகமாக அமைந்திருக்கும் ஆலயம் தான். கண்கவர் தோற்றமுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இவ்வாலயத்தை 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ம் தேதி இராமகிருஷ்ண மடத்தின் மூத்த சுவாமிகளில் ஒருவரான தவத்திரு யதீஷ்வரானந்தா சுவாமி அவர்கள் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தார்கள். வழிவழியாக உலகம் உள்ளளவும், காலையிலும், மாலையிலும் வழிபடவரும் மாணவியரின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தும் வகையில் ஆலயத்தின் தோரண வாயிலின் இருபுறங்களிலும் மனித நாகரிகம் துவங்கிய காலத்திலிருந்து, நமது நாட்டில் வாழ்ந்த சான்றோர்களின் அருள்வாக்குகள் பளிங்குக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. வலதுபுறத்தில் ஆங்கிலத்தில், உபநிடதத்தில் துவங்கி அண்ணல் காந்தியடிகளின் அருள்வாக்கு வரை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளைத் தாண்டி வந்து மிளிர்கின்றன. இடது பக்கத்தில் தமிழிலக்கியம், பக்தி புராணங்களிலுள்ள சான்றோர்களின் வாசகங்கள் அருள்மாரி பொழிந்து கொண்டிருக்கின்றன. ஆயிரங்காலத்துப்பயிருக்கு வேண்டிய ஊட்டத்தைக் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து அழியாமல் வந்த கருத்துக்களை அவை அளிக்கின்றன. அவை பின்வருமாறு:

வலப்பக்கம்

*Lead me from evil to good*
*Lead me from darkness to light*
*Lead me from death to immortality* - **Upanishad**

*Thy right to work only but*
*Never to the fruits thereof.* - **Gita**

*From meditation does wisdom spring*
*Without meditation wisdom wares* - **Buddha**

*The kingdom of God is within you*
*What is a man profited if he*
*Shall gain the whole world*
*And Lose his own soul?* - **Jesus Christ**

*A king speech forgiveness is*
*Better than aims followed by injury* - **Quran**

*He who has faith has all*
*He who lacks faith lacks all* - **Sri Ramakrishna**

*Arise, Awake and stop not till*
*the Goal is reached* - **Swami Vivekananda**

*Non violence, truth, non thieving*
*Continence, non-boarding, manual labour*
*Control of the tongue, fearlessness*
*Tolerance to all religions, spirit of Swadeshi*
*Non-observance of untouchability*
*These eleven shall be our vows* - **Mahatma Gandhi**

**இடப்பக்கம்**

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறு கண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

— *திருவள்ளுவர்*

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே

— *அப்பர்*

உயர்வற உயர்நலம் உடையவன் யவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன் அவன்
துயரறு சுடர்அடி தொழுதெழு என் மனனே
வீடுமின் முற்றவும், வீடு செய்து உம்முயிர்
வீடுடை யானிடை, வீடுசெய்ம் மினே

— *நம்மாழ்வார்*

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

— *திருமூலர்*

நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற
மறப்பயன் விளைக்குறும் வன்மை அன்றரோ
இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம்எனல் சூரர் ஆவதே

— *கம்பர்*

ஒன்றாகக் காண்பதே காட்சி புலன்ஐந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம் - என்றுந்தான்
சாவாமல் கற்பதே கல்வி தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்

— *ஔவையார்*

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே

— *தாயுமானவர்*

அடுத்தடுத்துக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் பெயர்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள தெய்வீக வாசகங்களும் படிப்போர் உள்ளங்களை எக்காலத்திலும் இம்மையிலும் மறுமையிலும் வலுப்படுத்தக் கூடியவை.

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள்/ திறந்துவைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வாசகம் |
|---|---|---|---|
| திருக்கோயில் | அய்யா அவர்களும் மாணவியரும் | விஜயதசமி 1-6-1955 | — |
| | தவத்திரு சுவாமி யதீஷ்வரானந்தா | 23-12-1956 | — |
| அப்பனருள் | மாண்புமிகு டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் துணைக் குடியரசுத்தலைவர் | — | — |
| | மாண்புமிகு திருமதி லெக்ஷ்மிமேனன், மத்திய அரசு வெளிவிவகாரத் துறை அமைச்சர் | 24-7-1957 | — |
| அன்னையருள் | சுவாமி மாதவானந்தா செயலாளர் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் | 8-6-1958 | ''நின்கடன் அடியேனையும் தாங்குதல் என்கடன் பணி செய்து கிடப்பதே'' - அப்பர் |
| | டாக்டர் ராஜேந்திர பிரசாத் குடியரசுத்தலைவர் | 10-8-1960 | |

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள் திறந்து வைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வசாகம் |
|---|---|---|---|
| கலைமகள் இல்லம் (விடுதி) | டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் | 2-8-1957 | பெருகலாம் தவம் பேதமை தீரலாம்<br>திருகலாகிய சிந்தை திருந்தலாம்<br>பருகலாம் பரமாய தோர் ஆனந்தம்<br>மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே<br>- அப்பர் |
| | டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார், துணைவேந்தர் சென்னை பல்கலைக்கழகம் | 11-3-1960 | அன்பும் அறனும் உடைத் தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது<br>- திருக்குறள் |
| | டாக்டர் பஞ்சாபராவ் எஸ். தேஷ்முக், மத்திய விவசாயத்துறை அமைச்சர் | | |
| திருமகள் இல்லம் (விடுதி) | திரு நா.ம.ரா. சுப்பராமன் அவர்கள் தலைமையில் திரு தி.சு. தண்டபாணி செட்டியார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது | 30-10-1960 | இல்லதென் இல்லவள் மாண் பானால் உள்ளதென்<br>இல்லவள் மாணாக் கடை<br>- திருக்குறள் |

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள்/ திறந்து வைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வாசகம் |
|---|---|---|---|
| திருமகள் இல்லம் | டாக்டர் ஜாகீர் உசேன் துணை குடியரசுத்தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது | 2-7-1963 | அன்பிலார் எல்லாந் தமக் குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு - திருக்குறள் |
| விவேகானந்தர் அரங்கு | மாண்புமிகு திருமதி. இந்திரா காந்தி தலைமை: பெருந்தலைவர் காமராஜ் | 21-6-1965 | — |
| மலைமகள் இல்லம் (விடுதி) | திருமதி ரத்னஜோதி திருஞானசம்பந்தம் செட்டியார் தலைமையில் திருமதி ருக்மணி கோவிந்தராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. | அக்டோபர் 1964 | பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் - திருக்குறள் |
| | மாண்புமிகு டாக்டர் சுசிலா நாயர், மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் | 3-7-1966 | மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற - திருக்குறள் |
| | டாக்டர் நா. மகாலிங்கம் தலைவர், சக்தி நிறுவனங்கள் | | |

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள்/ திறந்து வைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வாசகம் |
| --- | --- | --- | --- |
| கண்ணகி இல்லம் (மனைநிர்வாகப் பயிற்சி) | டாக்டர் ரால்ப் டபிள்யு கம்மிங்ஸ் | 18-7-1966 | பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண் டாகப் பெறின் - திருக்குறள் |
| உயர்நிலைப் பள்ளி | சென்னை மாநில அமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது | | இந்தக் கல்வி நிலையங்களின் ஸ்தாபகரின் தந்தையார் திருப்பூர் க. சுப்பிரமணிய செட்டியார், தாயார் பழனி அம்மாள். இவர்கள் இருவர் பெயராலும் திருப்பூரில் முறையே ஆண்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளியும் பெண்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளியும் நிறுவப்பட்டு நடந்து வருகின்றன. இந்த அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்கள் அனைத்திற்கும் அவர்கள் அன்பும் அவர்கள் பொருளுமே அடிப்படையாக இருக்கின்றன. அவர்கள் அன்பு பெரிது. |

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள்/ திறந்து வைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வாசகம் |
|---|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி | | | அவர்கள் அன்பும் ஆசியும் இப் பள்ளிக் குழந்தைகளின் பால் என்றும் இருந்து காப்பாற்றுமாக. தந்தையின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக இக்கட்டிடம் அவர்பெயரில் அவர்மக்களாலும் பேரன் பேத்திமார்களாலும் அன்புடன் கட்டப்பெற்றன. |
| | இந்திய துணைக்குடியரசு தலைவர் ஸ்ரீ வி.வி. கிரி அவர்களால் திறக்கப் பட்டது. | 1-4-1968 | |
| நிவேதிதா இல்லம் (அனைத்துலக விருந்தினர் இல்லம்) | *In commemoration of 60th Birthday of Founder Sri T.S. Avinashilingam* | | உள்ளுவ தெல்லாம் உயர்வு உள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து — திருக்குறள் |

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள்/ திறந்து வைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வாசகம் |
|---|---|---|---|
| நிவேதிதா இல்லம் | *Foundation laid by Sri C. Subramaniam, Minister for Food and Agriculture Government of India* | | |
| | *Dr. Guy B. Baird Rockefeller Foundation* | 19-1-1970 | |
| *Avinashilingam Nursery school* | *Dr. Gladys B. Chalkley Former Dean of Home Economics, Ohio State, University, USA.* | 3-2-1971 | ஓடிவிளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா நீதி உயர்ந்த மதி, கல்வி-அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்<br>— மகாகவி பாரதியார் |
| ஆராய்ச்சிக் கூடங்கள் | தலைமை ; திரு நெ.து. சுந்தரவடிவேலு துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம் | 29-1-1975 | *To make a great India the whole secret is organisation accumulation of wills*<br>— **Swami Vivekananda** |
| நூல்நிலையம் | சுவாமி வீரேஷ்வரானந்தா தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் | 19-4-1978 | *Concentration is the only method of education. You have to teach yourself. Your growth must come from India.*<br>— **Swami Vivekananda** |

| கட்டிடங்கள் | அடிகோலிட்டவர்கள்/ திறந்து வைத்தவர்கள் | ஆண்டு/தேதி | வாசகம் |
|---|---|---|---|
| *Sri Avinashilingam Eightieth Birthday Commemoration Library and Creativity Centre for Children* | *Hon'ble Smt. Margaret Alva, Minister of State for Youth Affairs, Sports and Women and Child Development, Government of India* | 18-10-1987 | *Creative art is the Bridge between Home and the World* — **Tagore** |
| *Communication Centre for Audio Video Lesson Production* | *Hon'ble Thiru C. Subramaniam, Governor of Maharashtra* | 22-12-1990 | |

இங்கனம் பல கட்டிடங்களும் அந்தந்த ஆண்டின் விஜயதசமி அன்று கட்டிட வேலை ஆரம்பித்து, அநேகமாக ஒரு விஜயதசமி அல்லது மற்றொரு நன்னாளில் திறந்து வைக்கப்பட்டு ஆலமரத்தின் விழுதுகள் போல் பெருகி வருகின்றன.

கட்டிடங்களும் அமைப்புகளும் பல நூற்றாண்டுகளுக் கென்று திட்டமிட்டு முடித்திருக்கும் பாங்கு விவரிக்க முடியாத வலிமை கொண்டவை. அவற்றில் வாழ்ந்து, வளர்ந்து, மலரும் மாணவியருக்கு அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் தரவேண்டிய கல்வியின் நோக்கங்கள் எப்படியிருக்க வேண்டும் என்று அய்யா அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

உயர் கல்வியின் நோக்கங்கள்

1. அனைத்துத்துறைகளிலும் நீதிபோதனைகள், சமூக ஒழுக்கக்கோட்பாடுகளைப் பின்பற்றுதல்.
2. வயது வந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி மூலம் மகளிருக்கு அவர்களின் நிலை ஆகியவற்றைப்பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்
3. அனைத்துத்துறைகளிலும் மாணவியர் எல்லா நிலை களிலும் வளர்ச்சி அடைய வாய்ப்புகளை அளித்தல்.
4. உயர்கல்வி, ஆராய்ச்சி, சமுதாயச் சேவை ஆகிய வற்றில் மாணவியர் உயர்நிலை அடைய உதவுதல்.
5. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலுள்ள மாணவி யர் கல்வி கற்கும் வாய்ப்பை அளித்து, அகில இந்திய நிலையை உருவாக்கித் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்த்தல்.
6. அறிவியல், கலையியல், நுண்கலையியல் ஆகிய துறைகளில் முனைவர் பட்டமும் அதற்கு மேலுள்ள பட்டங்களும் பெற ஏற்றக் கல்வியை அளித்தல்.

7. மகளிர், குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவி புரியும் பாடத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

8. ஆராய்ச்சியின் முடிவுகளைச் சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படும் வகையில் பரப்புதல்.

இந்த உயரிய நோக்கங்களைச் செயல்படுத்த இந்திய பண்பாட்டின் அடிப்படையில் நிலைபெற்றக் கல்விக்கு அய்யா அவர்கள் வழிகாட்டினார்கள். அந்த அடிப்படையில் அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களில், இறைவழிபாடு தலையாய இடத்தைப் பெற்றிருக்கிறது. கல்வித்திட்டங்கள் சமுதாயத்தோடு இணைந்தனவாகவும் சேவையுணர்ச்சி தருவனவாகவும் உள்ளன. மாணவியர் சுற்றிலும் உள்ள கிராமங்களிலும் குடிசைப்பகுதிகளிலும் எழுத்தறிவுத்திட்டங்களையும், தாய், சேய் நலத்திற்கான திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றனர். உயர் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் இறைமை, தேசிய, பன்னாட்டு அமைப்புகளின் நாட்கள் ஆகிய விழாக்களைக் கொண்டாடிப் பயன் அடைகின்றனர். சாரதாலயத்திலுள்ள மழலைக்கல்வி முதல் டாக்டர் (முனைவர்) பட்டப்படிப்பு அமைப்புகள் வரை அவினாசிலிங்கம் நிறுவனங்கள் அனைத்திற்கும் உயிர் நாடியாக இருக்கும் கருத்து, அவை ஆயிரங்காலத்துப்பயிர் என்பதே.

---

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

— *திருக்குறள்*

# 4. தூய்மையுறுக !

அமரர் அய்யா அவர்களின் வாழ்க்கையில் கடைப் பிடித்து வாழ்ந்து காட்டிய வழிமுறைகள் பல. அவற்றுள் 'தூய்மை' தலையாயது. அவர்களுடைய தோற்றத்தில், எண்ணங்களில், சொற்களில், செயல்களில் அனைத்திலும் தூய்மை, ஒளி வீசிக்கொண்டேயிருந்தது. அதிகாலையில் 4-4.30 மணிக்குள் துயிலெழுந்து, குளித்து, நெற்றியில் திருநீறு பூசித்தூய வெண்கதர் வேஷ்டி சட்டை அணிந்து, தியானத்தில் அமர்ந்து பரம்பொருளின் திருவடிகளில் ஒன்றாகி விடும் காட்சி, அருகிலிருப்பவர்களையும் திண்மைப்படுத்தும்.

அய்யா அவர்கள் உறைந்து வாழ்ந்த அறைகள், அமரும் ஆசனங்கள், படிக்க எழுதப் பயன்படுத்திய சாதனங்கள், உணவு உண்ணும் இடம் ஆகிய அனைத்திலும் தூய்மை துலங்கும். உணவோ, நீரோ, வேறு பண்டங்கள் எதுவாகிலும் மேசையிலோ, தரையிலோ சிதறினால் உடனே அந்த இடத்தைத் தூய்மைப்படுத்துவார்கள்.

கதிரவன் தன் ஒளியால் சுற்றிலும் துலக்கம் தருவது போல், அய்யா அவர்களும் கருத்திலும், பேச்சிலும், பணி புரிவதிலும் தூய்மையை வெளிப்படுத்திக் கொண்டே தூய்மையின் விளக்கமாக விளங்கினார்கள். அவர்கள் சந்நிதியில் தூய்மையைத் தவிர வேறு எண்ணத்திற்கே இடமில்லை.

சுற்றுப்புறச் சூழலில் தூய்மை வேண்டும் என்பதை வலியுறுத்தப் பல வேளைகளில் தானே தரையிலுள்ள தாள் போன்ற குப்பைகளை எடுத்து மாணவியர், மாணவர்,

ஆசிரியர் உள்ளங்களில், சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப்பதில், தங்கள் பொறுப்பு என்ன என்பதைப் பதிய வைப்பார்கள். குழந்தைப் பருவத்திலேயே தூய்மையான பழக்கங்களைத் தெரிந்துகொள்ளக் குழந்தைப் பள்ளியிலேயே ஆடல், பாடல், கதைகளில் தூய்மைக் கருத்துக்களைப் புகுத்தும்படி, உற்சாகப்படுத்தி வந்தார்கள். அந்த உற்சாகத்தின் பயனாக திரு அவினாசிலிங்கம் நிறுவனத்திலுள்ள மழலைப்பள்ளிகளில் குழந்தைகளுக்குக் கற்றுத்தரும் பாடல்கள் அமைந்தன. அவற்றுள் சில:

**கேள்வி :** மரங்களே, மரங்களே! சொல்லுங்களே,
சொல்லுங்களே!
உங்கள் மகிமைதனை எங்களுக்கே!

**பதில் :** தூய காற்றைத் தந்திடுவோம்
தென்றலாய் மிதந்து வந்திடுவோம்
சுத்தமான காற்றைத்தான்
சுகமாய் நீங்களும் சுவாசிக்கலாமே!
நல்ல மழையைத்தந்திடுவோம்
நாடு வளம் பெற உதவிடுவோம்
வீணாய் எங்களை அழிக்காதீர்
வீட்டுக்கு ஒரு மரம் வைத்திடுவீர்!
நீங்களும் எங்களை வளர்த்திடுவீர்
நிலையான பயனை அடைந்திடுவீர்!

2

காகிதத் துண்டுகள் காகிதத் துண்டுகள்
கிடக்குது பார் தரையின் மேலே
அசுத்தமாக்கதே சுற்றுப்புறத்தை
அழகைக் கெடுக்குதே நம் இடத்தில்
அவைதனைச் சேர்த்து எடுத்திடுவோம்
குப்பைக் கூடையில் போட்டிடுவோம்
அழகாய் இடத்தை வைத்திடுவோம்
ஆரோக்கியமாய் நாமும் வாழ்ந்திடுவோம்.

3

சின்னச் சின்ன கண்ணனுக்கு என்ன வேண்டும்?
கொதித்துக் குளிர்ந்த தண்ணீர் வேண்டும்
சின்னச் சின்ன ராதாவுக்கு என்ன வேண்டும்?
சுத்தமான இடத்தில் வசிக்க வேண்டும்
சின்ன சின்ன ராஜாவுக்கு என்ன வேண்டும்?
எங்கள் வீட்டில் நிறைய மரங்கள் வேண்டும்
சின்னச் சின்ன ராஜாத்திக்கு என்ன வேண்டும்?
தூய்மையான ஆடைதானே எனக்கு வேண்டும்
சின்னச் சின்ன பிரபுவுக்கு என்ன வேண்டும்?
சுகாதாரமான உணவு வேண்டும்
சின்னச் சின்ன பிரபாவுக்கு என்ன வேண்டும்?
ஆரோக்கியம் நிறைந்த தோழி வேண்டும்.

4

தூய்மை தூய்மை
எங்கும் தூய்மை
எதிலும் தூய்மை
உடம்பில் தூய்மை
உள்ளத்தில் தூய்மை
உடையில் தூய்மை
சுற்றுப்புறத் தூய்மை
வீட்டில் தூய்மை
பள்ளியில் தூய்மை
காக்க வேண்டும் நாமே
கற்க வேண்டும் நாமே
கற்பிப்போம் நாமே

வாழ்க்கையில் தூய்மையாக இருப்பதற்குத் தடைகள் வரலாம். மற்றவர்களின் உந்துதல்கள் தவறாக இருக்கலாம். ஆனால் அஞ்சுவது அஞ்சி, அஞ்சாமல் வாழும் நேர்ப்பாதை தான் தூய்மைக்கு வழிகாட்டும் என்ற உண்மையை அய்யா அவர்கள் தனது வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார்கள்.

வித்யாலயத்தில் குழந்தைகளைக் காலையில் பார்க்கும் போது, குளித்து விட்டாயா? துவைத்த உடைகளை அணிந்திருக்கிறாயா? என்று கேட்பார்கள். வளரும் நகங்களை, அவ்வப்போது சரியாக வெட்டிச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதில் அக்கறை காட்ட வேண்டுமாறு குழந்தைகளுக்குச் சொல்லுவார்கள்.

தூய்மையுறுக தூய்மையுறுக!
வாய்மனயாக்கை தூய்மையுறுக!
மனத்தை அடக்குக! மாரனை வெல்க!
சினவெறி யொழிக! சீலம் போற்றுக!
எல்லா உயிர்க்கும் இனியன செய்க!
நல்லன நாடுக! நல்லினஞ் சேர்க!
அன்பே செய்மின்! அறவழி நடமின்!
இன்பமாகும் எல்லா உயிர்க்குமே!

என்ற சுத்தானந்த பாரதியாரின் பாடலில் கண்டபடி, நினைப்பிலும், சொல்லிலும் வாக்கு மாறா உறுதியுடன், வாய்மை வெல்லும் என்ற தூய்மையைத் தெளிவாக்கி வந்தார்கள். ஆண்டவனுடைய பரிசுத்த சந்நிதியில், மனோவாக்குக்காகத் தூய்மையுடன் வழிபடவேண்டும் என்பதைத் தினமும் வாழ்க்கையில் காட்டினார்கள். இறுதி மூச்சு வரை தூய்மையாக இருந்து இறைவனடி சேர்ந்து, நம்மைத் தொடர்ந்து அருளாசியினால் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அய்யா அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலி, தூய்மையாக இருப்பதே.

---

புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

— *திருக்குறள்*

---

# 5. அன்பு

மனித வாழ்வை இயக்கும் மிகப்பெரிய சக்தியாக விளங்குவது அன்பு. அண்ட சராசரங்கள் அனைத்திலும் அன்பு வெளிப்படுகிறது. அண்டம் முழுவதிலும் தனிப்பட்ட இயக்க ஆற்றலாக இருப்பது அன்பு ஒன்றேயாகும் "இத்தகைய அன்பின் உந்துதலால் தான் கிறிஸ்து மனித குலத்துக்காகவும். புத்தர் ஜீவராசிகளுக்காகவும், தாய் குழந்தைகளுக்காகவும், கணவன் மனைவிக்காவும் தங்களது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

அன்பு, மனிதனை விலங்குகளிலிருந்து பிரித்துக் காட்டும் தன்னிகரற்ற ஒரு பண்பாகும். மனித வாழ்க்கையின் ஆணிவேர் அன்பு. 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்றபடி அன்புள்ளம் கொண்டவர்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தும் பிறர் நலத்திற்காக அளிக்கப்படுகின்றன.

''உன்னிடத்தில் நீ அன்பு கூர்வது போல் பிறனிடத்திலும் அன்பு கூர்வாயாக. தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில்லாதவன் தேவனை அறியாதவன்'' என்று ஏசுநாதர் கூறினார். ஏசுநாதரின் அருளைப் பெருமளவில் பெற்றவரும், அவரால் தடுத்தாட்கொள்ளப்பட்டவருமான பவுல் அடிகள் ''அன்பு ஒருபோதும் தீங்கு நினைக்காது. அன்பு சகலத்தையும் சகிக்கும். அன்பு திரளான பாவங்களை மூடிவிடும்'' என்று சொன்னார்.

இத்தகைய அன்பின் திருவுருவமாகத் தன்னலமற்ற தியாகச்சீலராக அய்யா அவர்கள் விளங்கினார்கள் அவர்கள் பிறரை நேசிக்கக் கற்றுக்கொடுத்ததோடல்லாமல் தானே

பிறரை நேசிக்கும் ஒப்பற்ற குணத்தையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த காலமெல்லாம் விடுதி மாணவியரைத் தவறாது சந்தித்து, ஆசிகூறுவார்கள். மாணவியரை மட்டு மல்லாது, அவர்களின் பெற்றோர்களின் நலனையும் அக்கறை யோடு விசாரிப்பார்கள். அதோடு மட்டுமல்லாமல் ''நீங்கள் எல்லாம் நல்ல பிள்ளைகள், தங்கமான பிள்ளைகள் தைரிய மான பிள்ளைகள், கெட்டிக்காரப் பிள்ளைகள், சேவை செய்யும் பிள்ளைகள், ஒழுக்கமானப்பிள்ளைகள், சிந்திக்கும் பிள்ளைகள்'' என்று மனமார வாழ்த்தும் பொழுது அன்பின் நெகிழ்ச்சி கரைபுரண்டோடக் காணலாம், அவர்கள் குழந்தைகளைப் பார்த்தவுடன் உள்ளமெல்லாம் பூரிப்போடு மலர்ந்து இருப்பதைக் காணலாம்.

அய்யா அவர்கள் ஆண்டவனிடத்தில் கொண்டிருந்த அன்பு எல்லையற்றது.

''எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைமாறே''

என்னும் திருநாவுக்கரசரின் பாடலுக்கேற்றவாறும்

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

என்னும் மாணிக்கவாசகரின் கூற்றுக்கிணங்கவும், ஆண்டவன் பால் அன்பு கொண்டு அவன்தாள் வணங்கி, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனக்கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்தார்கள்.

''அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்''
என்பதற் கிணங்க அன்பினால் உந்தப்பட்ட அய்யா

ADU LIB
108914



அவர்கள், ஏழை, எளிய மக்கள் வாழ்க்கையில் முன்னேறு வதற்குப் பாடுபட வேண்டுமெனக் கூறுவார்கள். விழாக் களையும் பண்டிகைகளையும் கொண்டாடும் பொழுது, ''நீங்கள் மட்டும் மகிழ்ச்சியாக இருந்தால் போதாது. உங்கள் வீடுகளுக்கு அருகில் இருக்கின்றவர்களும் மகிழ்ச்சி யாக இருக்க வேண்டும் என்று நினையுங்கள். நீங்கள் புத்தாடை அணியும் பொழுது, ஒரு நேரம் உணவின்றி வாடும் ஏழை மக்களை எண்ணிப்பாருங்கள். அவர்களுக்கு உங்களால் முடிந்த உதவியை செய்யுங்கள்'' என்று கூறி ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே'' என்னும் தாயுமானவர் வாக்கிற்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார்கள்.

இலட்சிய வாழ்க்கைக்கு அடித்தளமாக இருந்து ஆதாரம் அளிப்பது அன்பு. லட்சியம் என்பது என்ன? வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுத்து, வாழ வழிகாட்டு வதற்கு ஏற்றதாகத் தாமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் குறிக்கோளே லட்சியமாகும். தெரிந்து கொண்ட லட்சியத்தை நிறைவேற்ற ஆவலோடு, விடாமுயற்சியோடு, முழுவதும் ஈடுபாடு கொண்டு ஓயாது கடுமையாக உழைப்பதே லட்சியம் ஆகும். இதனையே அய்யா அவர்கள் வலியுறுத்திக் கூறு வார்கள். 'லட்சிய வாழ்க்கைக்காகத்தான் வாழ வேண்டும்' என்றும் 'அப்படி லட்சியப் பாதையில் வாழும்பொழுது எதைச் செய்தாலும் அன்போடு செய்யுங்கள்' என்றும் அடிக்கடி கூறுவார்கள்.

கைம்மாறு கருதாது, எந்தப் பயனும் எதிர்பார்க்காது செய்யும் உள்ளத்தில் தான் அன்பு பெருக்கெடுத்தோடும். குழந்தைப் பருவத்திலிருந்தே அன்பைக் கொடுத்து அன்பைப் பெற்றுக்கொள்ளப் பழகிக்கொண்ட வாழ்க்கையில் இன்பம்

T 4.4436
108914 AVIw
3/N5

பெருகும். ஆனால் சிறுவயதிலிருந்தே அன்பை அனுபவிக்காமல் வளரும் ஆணும் பெண்ணும் முதுமையில் வாழ்க்கையை வெறுமையானதாகக் காண்கிறார்கள். சந்தேகம், சஞ்சலம், அச்சம் அவர்களிடம் குடிக்கொண்டு அவர்களை ஆட்டி வைக்கும்.

அய்யா அவர்களின் வாழ்க்கையில் அன்பு பெருக்கெடுத்தோடுவதைக் கண்டோம். அவர்கள் நாட்டின் மீது கொண்ட அன்பின் காரணமாகத்தான், மாணவராக இருந்த காலத்திலிருந்து நாட்டு விடுதலையில் தன்னை அர்ப்பணித்தார்கள். சுதந்திர இந்தியாவில் தமிழகத்தின் முதல் கல்வி அமைச்சராக, நாட்டுக்கு நன்மையை நல்கும் பல திட்டங்களைத் தீட்டிச் செயலாக்கி வெற்றி பெற்றார்கள். தன்னிடம் பணிபுரிந்த அலுவலர்கள் அனைவர் மேலும் அன்பு காட்டினார்கள். அரவணைத்தார்கள் ஆதரவு தந்தார்கள்

பயன் கருதாமல் ஒருவர் கொடுக்கக் கொடுக்க அவருடைய செல்வம் பெருகும். நம் முன்னோர் செய்த தான தர்மங்கள்தான் இன்று நம்மை நல்ல நிலையில் வைத்திருக்கின்றன என்பதை மனதில் கொண்டு, கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும். அப்படிச் செய்வதுதான் வருங்காலத் தலைமுறைகளுக்கு நல் வாழ்வு அளிக்க உதவும் சேமிப்பு நிதியாகும், வங்கியில் எதிர்காலத்திற்காக சேமிப்பு போடுவதுபோல் நம் கொடைகள் நம் குழந்தைகளின் எதிர்காலத்து நலங்களுக்கு அடிகோலிட வேண்டும். எந்தெந்த கொடைகள் தகுதியானவை ? சான்றோர்களின் மனங்கோணாமல் உபசரித்தல், அறச்செயல்களுக்குப் பொருளுதவியும், ஏனைய உதவிகளும் செய்தல், ஏழைகள் கல்வி பெற உதவுதல் ஆகியவை நல்ல தருமகாரியங்களாகும். ' தொட்டணைத் தூறும் மணற்கேணிபோல் ' அறம் செய்யச் செய்ய ஒருவருடைய வருவாயும் அதிகரிக்கும். அறத்தான் வருவதே இன்பமன்றோ ?

''காசு பெரிதில்லை — நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்கு ''.

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். அப்பாடலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அய்யா அவர்களும் 'காசு பெரிதில்லை. அது இன்றுவரும் நாளைபோகும். ஆனால் அன்பு தான் மிகப் பெரிது. அது கொடுக்கக் கொடுக்கக் குறையாது' என்று சொல்லி 'உயிர்களிடத்து அன்பு வேண்டும். தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்' என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வழிகாட்டினார்கள். தன்னிடம் வருகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் நன்றாக வாழ வேண்டுமென்று மனதார வாழ்த்தும் மாட்சிமை கொண்டவர்கள். தனக்கென வாழாப் பெருந்தகை. பிறர்க்கென வாழ்ந்திட்ட தியாகச்செம்மல்.

''இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே''

என்ற புறநானூற்றுப் பாடலுக்கேற்ப எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுத்த வள்ளல்மனம் கொண்டவர்.

அய்யா அவர்களின் அன்பு தூய்மையானது, தன்னலமற்றது. யாவரையும் தூய்மை கொள்ளச்செய்வது· தூய்மையே உருவான அய்யா அவர்கள்,

''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்''

என்று இறைவனிடம் இடைவிடாது வேண்டிய பக்தர். நாடு நலம்பெற, வளம்பெற இன்றைய இளைஞர்கள் தம்மை நாட்டுக்காக அர்ப்பணிக்க வேண்டுமென்று அடிக்கடி கூறுவார்கள்.

''இன்றெம்மை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறமடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தேயத்தினர் நாடொறும் உயர்க!''

என்ற பாரதியாரின் பாடலைக்கூறி நாடு வாழ நாம் வாழ வேண்டுமென்று வாழ்த்துவார்கள். இன்றைய இளைஞர் சமுதாயம் அய்யா அவர்களின் அன்பு வாழ்க்கையை முன் மாதிரியாகக் கொண்டு, அவர்கள் போதித்த அறிவுரைகளை மனத்தில் இருத்தி, அதன்வழி நடந்து, எதிர்காலஇந்தியாவை ஏற்றமிகு நாடாக ஆக்க முயலுவார்களாக!

---

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

— *திருக்குறள்*

---

# 6. தியாகம்

நிலையற்ற இவ்வுலகில் நிலைத்த புகழைப் பெற வேண்டுமானால், தங்கள் வாழ்க்கையைப் பிறருக்காகத் தியாகம் செய்ய வேண்டும். உலகில் பிறந்து மறைந்து விட்ட கோடிக்கணக்கான மக்களுள் ஒரு சிலரே இன்னும் போற்றப்பட்டும் புகழப்பட்டும் வருகிறார்கள். அவர்களுள், மிகுந்த புகழைப்பெற்று அனைவரது மனத்திலும் நீங்கா இடம் பெற்றவர் அய்யா அவர்கள்.

அன்பின் திருவுருவாய்த் திகழ்ந்தவர்கள் அய்யா அவர்கள். இவ்வுலகம் நிலை பெற்றிருப்பதற்குக் காரணம் பிறர்க்கென வாழும் பெருந்தகைகள் இருப்பதனாலேயே என்பதை,

''தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே''

என்னும் புறநானூற்றுப்பாடல் காட்டுகிறது. அத்தகு இயல்புடன் தாம் வாழ்ந்து பிறரும் வாழ வழிகாட்டியவர்கள் அய்யா அவர்கள். கைம்மாறு கருதாத மாரியைப்போன்று பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து உள்ளம் மகிழ்ந்தவர்கள்.

பணம் பணம் என்று பேராசை பிடித்திருக்கும் இந் நேரத்தில் அய்யா அவர்கள் அல்லல் படுவோர்க்கு ஆதரவாய், ஏழைகளுக்கு வாரிவழங்கிய வள்ளல். தனக்குக் கிடைத்த சொத்துக்களனைத்தையும் திரு. அவினாசிலிங்கம் அறக்கட்டளைக்கு அளித்து அழியாப்புகழ் பெற்றவர்கள்.

''இவ்வுலகில் கொடுப்போனுடைய பதவியை எப்போதும் ஏற்று நில்; அனைத்தையும் கொடு. கைம்மாறு ஒன்றையும் எதிர்பாராதே. அன்பைக் கொடு. உதவியைக்கொடு, பணியினைப்புரி. உன்னால் இயன்ற சிறுபொருளையேனும் கொடு. இறைவன் நமக்கு அருளுவது போலவே நமக்குரிய வள்ளல் தன்மையைக் கொண்டு நாம் பிறருக்கு உதவுவோம்'' என்று கூறிக்கொண்டேயிருப்பார்கள்.

அறிவுத்திறன், தியாக உணர்வு, தொண்டுள்ளம், தெய்வீக ஆற்றல் கொண்ட அய்யா அவர்கள் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் உள்ளம் உடையவர்களாய், ஏழை மக்களின் இன்னல்களைக் கண்டபோதெல்லாம் கண்ணீர்வீட்டு உள்ளம் நெக்குருகினார்கள், எத்தனையோ ஏழை மக்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைத்து வாழ்வளித்தார்கள். தன்னை நாடி உதவிதேடி வந்தவர்களுக்கு வேண்டியதை அளித்தார்கள். தாம் நிறுவிய கல்வி நிறுவனங்களில் பணிபுரிவோரின் இன்னல்களை நீக்கினார்கள்.

இந்தியநாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்று, அல்லற்பட்டு உடல்மெலிந்து நாட்டுக்காகத் தியாகம் செய்தார்கள். சுதந்திர இந்தியாவில் சென்னை மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சராகி பல அரிய செயல்களை மக்களுக்காகச் செய்தார்கள். ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை சாரதாமணிதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பக்தராக விளங்கிய அய்யா அவர்கள் நாட்டுப்பற்று காரணமாகவும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற அவாவினாலும் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாது துறவியாகவே வாழ்ந்து வந்தார்கள்.

சுவாமி விவேகானந்தரின் போதனைகளின்படித் தியாக மனப்பான்மையுடன் சேவை புரிந்து வந்தார்கள். சகோதரி நிவேதிதைக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்தில் ''இவ்வுலகில் பிறந்துள்ள சீரிய விழுமிய மக்கள் தங்கள் சொத்து, சுகம் அனைத்தையும் பலருடைய நன்மைக்காகவும், பிறருடைய நலத்திற்காகவும் தியாகம் செய்ய முன்வர வேண்டும். அணையாத அன்பும், நீங்காத இரக்க உணர்வும் கொண்ட நூறு புத்தர்கள் இன்று தேவை'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். சுவாமிஜியின் வாழ்க்கையைப் பின்பற்றி வந்த அய்யா அவர்களும் தியாகச் சீலராக விளங்கினார்கள்.

அய்யா அவர்கள் எப்பொழுதும் பிறருக்குச் சேவை செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள். தன்னைப் பற்றி எப்பொழுதுமே நினைத்தது கிடையாது. அவர்களுடைய எண்ணம், வாக்கு, செயல் அனைத்தும் பிறருக்குத் தொண்டு செய்வதாகவே அமைந்திருந்தது. ''பெருங்காரியங்களைப் பெருந்தியாகத்தால் மட்டுமே செய்ய முடியும்'' என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கினை உள்ளத்தில் கொண்டு அல்லும் பகலும் அயராது மற்றவர் களுக்காகப் பாடுபட்டார்கள்.

தன்னை எரித்துக்கொண்டு ஒளியூட்டி, வழிகாட்டும் தீபத்தைப் போல ஒளி விளக்காய் வாழ்ந்த அய்யா, ''நீ எதிர்ப்பார்க்கும் நோக்கங்களெல்லாம் உன் தேசத்திற்காகவும், உண்மைக்காகவும் இருக்கட்டும். அம்முயற்சியால் நீ அழிந் தால் நீ தியாகியாவாய்'' என்னும் கொள்கையைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தவர்கள். தியாகிகள் மூலமாகத் தான் பிறருக்கு நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை நன்கறிந்த அய்யா அவர்கள், விடுதி மாணவிகளிடம் பேசும் பொழுது, 'உங்களில் சில பேராவது இந்நாட்டிற்காக உழைக்கத் தியாகம் செய்ய வேண்டும்' என்று கூறுவார்கள்.

தியாக சிந்தனை கொண்ட அய்யா அவர்கள் தியாகச் சுடராய் விளங்கினார்கள் தன்னலங்கருதாது பிறருக்காகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார்கள். உள்ளும் புறமும் தூய்மையுடன் விளங்கிய அய்யா அவர்கள் நாட்டுக் காகத் தியாகம் செய்தவர்கள். ஆடம்பரம் சிறிதும் இல்லாத வர்கள். ஆண்டவன் படைத்த மக்கள் அனைவரும் ஒன்று என்று நினைத்தவர்கள். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் மிகுந்திருந்தவர்கள்.

''வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து''

என்ற குறளுக்கேற்ப வாழ்ந்தவர்கள். வறியவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தவர்கள். தூய்மை உள்ளமும், தன்னலங் கருதாத் தகைமையாளருமாகிய அய்யா அவர்கள்,

''முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத்து இசைவிளங்கத் - தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்''.

என்ற புறப்பொருள் பாடலில் கூறப்படும் வள்ளல்கள் போன்ற வள்ளண்மை மிக்க பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் தியாகத்தின் திருவுருவாகத் திகழ்ந்தார்கள்.

அய்யா அவர்களின் சிந்தனையெல்லாம் தாய்த்திரு நாட்டைப் பற்றியதாகவே இருந்தது. நாட்டு மக்களுக்குத் தொண்டு புரிவதையே தம் மூச்சாகக் கொண்டிருந்தார்கள்.

''ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு''

என்னும் திருக்குறளுக்கேற்ப ஈந்துவக்கும் இன்பத்தைப் பெற்று இணையற்று விளங்கினார்கள். சுவாமி விவேகானந்தர் இந்தியாவிற்கு வழங்கியருளிய ஆன்மீகப் பெருநன் கொடை என்பது அவரது தியாகமேயாகும். அதுபோன்று அய்யாஅவர்களின் தியாகமும் விளங்கியது

அய்யா அவர்கள், ''மற்றவர்களுக்கு, உன்னால் முடிந்த உதவியைச் செய். உதவிசெய்யும் நிலையில் இருக்கும் நீ ஆண்டவனுக்கு நன்றி செலுத்து'' என்பார்கள். ''உன்னால் முடிந்த அளவு பிறருக்கு உதவி செய்ய வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்பொழுது, உங்களைக் காட்டிலும் வறுமையில் இருக்கும் மக்களை எண்ணிப் பார்த்து, அவர் களுக்கு உதவிசெய்யுங்கள்'' என்று இடைவிடாது கூறிக் கொண்டேயிருப்பார்கள். ''தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' என்கிறது விவிலியம். அது போன்றே அய்யா அவர்களும் தன் உடல், பொருள்,கல்வி,சிந்தனை, செயல்கள் அனைத்தையும் மற்றவர்களுக்காகச், சிறப்பாக அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களுக்காக அர்ப்பணமாக அளித்தார்கள்.

இயேசுபெருமான், மனுகுலம் உய்யும்படியாகத் தம்மைப் பலியாகக் கொடுத்தார். தேவாதி தேவனான அவர் தியாகத்தின் சிகரமாகச் சிலுவையில் அறையப்பட்டு, வாரினால் அடிக்கப்பட்டு, முட்கிரீடம் கட்டப்பட்டு, சொல்லொண்ணாத் துயரத்துக்குள்ளாகி இரத்தத்தைச்

சிந்தினார். பாவத்தில் உழன்ற மக்கள் அனைவருக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். அய்யா அவர்களும் தமது வாழ்க்கையை மக்களுக்காகத் தியாகம் செய்தார்கள். தன்னுள்ளத்திலே தியாக எண்ணத்தைப் பெருக்கித் தான் அடைந்த அனைத்து செல்வத்தையும் பிறருக்குக் கொடுத்தார்கள். ''தியாகத்தை நினைவுறுக'' என்றாற் போல தியாகச் சிந்தையிலே திளைத்தார்கள்.

---

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

— *திருக்குறள்*

---

# 7. அர்ப்பணம்

அர்ப்பணம் என்றால் என்ன? மனிதன் தான் வாழும் நாளில், பிறர் நலம் பேணிப் பிறருக்காகச் சேவை செய்வதே யாகும். தன்னை அழித்து பிறருக்கு ஒளி கொடுக்கும் மெழுகு வர்த்தியைப் போன்று, தன் வாழ்க்கை முழுவதும் சேவை செய்வதே அர்ப்பணமாகும். அய்யா அவர்கள் தம் வாழ்வை ஆண்டவன், நாடு, தொழில், சேவை, கல்வி ஆகியவற்றிற்கு அர்ப்பணித்தார்கள்.

ஆண்டவனிடம் அளவற்ற பக்தி கொண்டவர்கள் அய்யா அவர்கள். பக்தியானது கடவுளை நம்புவதாகும். குழந்தை தாயை நம்புவது போலவும், மனைவி கணவனை நம்புவது போலவும், பார்த்த பொருளை கண் நம்புவது போலவும், தான் தன்னை நம்புவது போலவும் தெய்வத்தை நம்ப வேண்டும். அய்யா அவர்கள் இத்தகைய நம்பிக்கையை ஆண்டவனிடத்தில் கொண்டிருந்தார்கள். காந்தியடிகளைப் போலவே அய்யா அவர்கள் அனுதினமும் காலையிலும், மாலையிலும், இறைவனை வேண்டி தம் காரியங்களைச் செய்தார்கள். திருவாசகம், தேவாரம், கீதை, திருக்குறள் போன்ற பக்தி கொடுக்கும் நூல்களைக் கற்று, அதன்வழி ஒழுகினார்கள். தாம் நிறுவிய இரு புகழ்மிக்க நிறுவனங் களிலும், எக்காலத்திலும் கோயில்களில் விளக்கேற்றி இரு வேளைகளிலும் பிரார்த்தனை நடக்க வழிகோலினார்கள்.

அய்யா அவர்களுக்கு நாட்டின் மீது எல்லையற்ற நம்பிக்கை இருந்தது. இந்த பாரத பூமி, ஏனைய நாடுகளுக் கெல்லாம் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் வழிகாட்டும் என்று

நினைத்தார்கள். என்று தணியும் எங்கள் அடிமையின் மோகம் என்று நினைத்து சுதந்திரம் அடைய பலமுறை சிறை சென்றார்கள். சிறையிலிருந்த பொழுது உடல் நலிவுற்ற போதும், உயிரைத் துச்சமெனக் கருதி, சிறை வாழ்க்கையை மேற்கொண்டார்கள். காந்தியடிகள் தமிழகம் வந்தபொழுதெல்லாம், அவர்களோடு பயணம் செய்து, நாட்டு விடுதலைக்கு அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் எழுப்ப ஊக்கப்படுத்தினார்கள்.

அய்யா அவர்கள் மாணவிகளைப் பார்க்கும்போதெல்லாம், நீங்களெல்லாம் மகத்தான காரியங்களைச் செய்யப் பிறந்தவர்கள் என்பார்கள். அதோடு மட்டுமல்லாமல் ''நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே. நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேட்க வேண்டும்'' என்று போதிப்பார்கள். ''நீங்களெல்லாம் அன்னையின் குழந்தைகள். அன்னையின் அரவணைப்பில் ஆற்றலோடு இருக்க வேண்டும்'' என்பார்கள்.

அய்யா அவர்கள் சேவை செய்வதையே மகத்தான பணியாகக் கொண்டார்கள். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் இரக்க உள்ளம் உடையவர்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று எண்ணினார்கள். இந்தியாவிலிருக்கும் ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகளை எண்ணிப்பார்த்து, அவர்களை எப்படியாவது முன்னேற்ற வேண்டுமென்று நினைப்பார்கள்.

''ஆழிசூழும் உலகாளும் அரசனாக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும் நீ மறந்து வாழ வேண்டுமடா
ஏழையாக எளியவரின் எளியனாக வேண்டுமடா
தோழனாகி யாவர்க்கும் தொண்டனாக வேண்டுமடா''

என்ற கவிமணியின் பாடலுக்கேற்ப, தொண்டனுக்கும் தொண்டனாகிப் பணிபுரிய வேண்டும் என்று உயர்ந்த உள்ளம் கொண்டிருந்தவர்கள். என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற தாரக மந்திரத்தை வாழ்க்கை முழுவதும் கடைப்பிடித்தார்கள். தன்னைக் கல்விக்காக அர்ப்பணித்துக் கொண்டார்கள். கல்லூரி மாணவராக இருக்கும் பொழுதே தெய்வ பக்தியும் தேச பக்தியும் கொண்டு கல்விக்காக சிறந்த காரியம் செய்யவேண்டுமென எண்ணி வித்யாலயத்தை ஆரம்பித்தார்கள்.

அய்யா அவர்களின் பணி அதோடு நின்றுவிடவில்லை. பெண் கல்விக்காக கல்வி அறக்கட்டளை ஒன்று நிறுவி, அதில் தனக்குக் கிடைத்த சொத்துக்கள் அனைத்தையும் கொடுத்து, இம்மாபெரும் அவினாசிலிங்கம் கல்வி நிறுவனத்தை உருவாக்கினார்கள். அவர்கள் பெண் கல்விக்காக செய்த சேவை ஈடு இணையற்றது. ஒவ்வொரு நாளும் 'சாரதாலயா' கல்விக் கோவிலுக்கு வந்து, அதன் நடைமுறைகளைக் கவனித்து, வளரப் பெரிதும் பாடுபட்டார்கள். பெண் கல்விக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட மகான் அய்யா அவர்கள். நாடு செழிக்க வீடு செழிக்க வேண்டும். அதற்கு 'நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகமாக' வேண்டும். நாட்டுக்கு நலன் பயக்கும் கல்வியை அளித்து, அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்தார்கள்.

சாரதாலயத்தின் ஒவ்வொரு கல்லும் அய்யா அவர்களின் தியாகத்தை சுட்டிக் காட்டும் நினைவுச் சின்னங்களாகும். பணத்தைப் பெரிதாக நினைக்காமல் சேவை செய்வதையே பெரிதென எண்ணினார்கள்.

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

என்னும் திருக்குறளுக்கேற்ப எண்ணியதை முடிக்கும் நல் நெஞ்சம் கொண்டவர்கள் அய்யா அவர்கள். 'எனைத்தா யினும் நல்லவை செய்த' என்பதற்கொப்ப தன் வாழ்க் கையைப் பிறருக்காக அர்ப்பணித்து அனைவரும் நலமுடன் வாழ வழிவகுத்தார்கள். அவர்களின் கல்விக்கூடங்களில் பணிபுரியும், பயிலும் யாவரும் தேசத்துக்காக, நாட்டுக்காக நற்பணி செய்ய உறுதி கொள்வோம்.

---

ஒன்றா உலகத் துயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

— *திருக்குறள்*

---

# 8. பக்தி

இறையுணர்வு என்பது மனிதனை மனிதனாக வாழச் செய்வது; நல்வழிப்படுத்துவது; பேரின்பத்தை அடையச் செய்வது; தான் வாழும் மண்ணுலகில், விண்ணோனாக மதிக்கச் செய்வது; சான்றோனாக வழிகாட்டும் தன்மையது. அத்தகைய சான்றோர்களுள் ஒருவராக விளங்கிய அய்யா அவர்கள் இறையுணர்வு நிறைந்தவர்கள்.

பக்தி என்பது கடவுளை நம்புவதாகும், இறை நம்பிக்கை என்பது மெய்மையை அடையச் செய்வது. மெய் யானது நற்பண்புகளை வளர்ப்பது. அய்யா அவர்கள் இத் தகைய பக்தியை வாழ்ந்து காட்டினார்கள். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும், ஆண்டவனைப் பக்தி யுடன் வணங்கித் தம் அன்றாடச் செயல்களைச் செய்து வந்தார்கள். 'பிரார்த்தனை என்பது காலையில் திறவுகோல். மாலையில் தாழ்ப்பாள்' என்ற காந்தியடிகளின் கூற்றினைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார்கள்.

அய்யா அவர்களின் வாழ்க்கை பக்தி நிறைந்த வாழ்க்கை. வித்யாலயமாகட்டும், சாரதாலயமாகட்டும், எந்த ஒரு சிறு செயலைத் துவங்கினாலும் அதற்கு முன்பு ஆண்டவனின் அருளை வேண்டியே செய்வார்கள். அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கியதற்குக் காரணம் அவர்களிட மிருந்த பக்தியாகும்.

பக்தியுடையார் காரியத்தில்<br>
பதறார் மிகுந்த பொறுமையுடன்<br>
வித்து முளைக்குந் தன்மை போல<br>
மெல்லச் செய்து பயனடைவார்

என்ற பாரதியாரின் கருத்துக்கேற்பக் காரியங்களைப் பக்தியோடு, பொறுமையோடு செய்தார்கள்.

திருநீறு நெற்றியில் அணிந்த அவர்கள் தூய கோலம் இறையடியார் கோலமாக காட்சித்தரும். அவர்கள் வழிபாட்டு முறையும் மாணிக்க வாசகரின்,

''சிந்தனைநின் னதாக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ... ...''

என்ற வழிபாட்டு அடிப்படையிலான வகையில் அமைந்தது.

எளிமையும் இறைபக்தியும் கொண்ட அய்யா அவர்கள் தாம் செய்யும் செயல் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணம் ஆக்கினார்கள். சாரதாலய குடும்பத்தினரைக் காணும் பொழுதெல்லாம், ''நாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்கிச் செய்யவேண்டும்'' என்பார்கள். மாணவியரிடமும், ''நீங்கள் உங்கள் காரியங்களைச் செய்வதற்கு முன் இறைவனிடம் வேண்டுங்கள். அவன் உங்களுக்கு வேண்டியதெல்லாம் அருளுவான்'' என்று மனமகிழ்ந்து வாழ்த்துவார்கள். வாழ வழிகாட்டுவார்கள்.

அய்யா அவர்கள் ஆண்டவனை, அவன் படைத்த எல்லாப் பொருட்களிலும் கண்டார்கள். இயற்கையின் படைப்பை எண்ணி எண்ணி உள்ளம் மகிழ்ந்தார்கள்.

''தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ''

என்ற எங்கும் நிறைந்த இறைவனைப் பற்றி நன்கு உணர்ந்து பிறருக்கு எடுத்துக் காட்டினார்கள். ஆண்டவனை வேண்டும் பொழுது தனக்காக வேண்டாமல் நாடும் மக்களும் நன்கு வாழ வேண்டும், ஏழை எளியவர்கள் இல்லை என்று சொல்லும் வண்ணம் நாடு செழிக்க வேண்டும் என்று நினைத்து,

''எப்பாரும் எப்பதமும் எங்கனும் நான் சென்றே
எந்தை நின தருட் புகழை இயம்பிடல் வேண்டும்''

என்று வேண்டினார்கள். செல்லும் இடங்களிலெல்லாம் பேசும் கூட்டங்களிலெல்லாம் ஆண்டவன் அருளினால் தான் எல்லாம் நடைபெறுகிற தென்று கூறுவார்கள்.

பணம், பொருள் முதலியவற்றில் வேற்றுமை பாராட்டாமல் எல்லா உயிர்களிடத்திலும் பொருள்களிடத்திலும் இறைவன் நிறைந்திருப்பதைக் கண்டிட்ட தகைமையாளர் அய்யா அவர்கள் சாந்தமாய், சமநோக்குடன் இருந்து கொண்டு, தான் ஆண்டவனின் அருகில் இருப்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்து மகிழ்ச்சி அடைவார்கள். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற இறைவன் திருநாமத்தை நினைத்து நினைத்து உள்ளம் உருகி ஆண்டவனுக்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

அய்யா அவர்கள் எம்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாகக் காண்பார்கள். ''யாரொருவர் தனக்கு ஆண்டவனிடமுள்ள பக்தியை உயிர்களிடத்துத் தான் கொள்ளும் அன்பிலே பார்க்கிறார்களோ, மேலும் அவை அனைத்தையும் ஆண்டவன் மீதுள்ள பக்தியில் காண்கிறார்களோ, அவர்கள் தான் மேன்மையான பக்தர்கள்'' என்று பாகவதம் கூறுகின்றது. அய்யா அவர்கள் கொண்டிருந்த பக்தி இத்தகையதே. அவர்கள் வேற்றுமை பாராட்டாது எல்லோரிடமும் ஒன்றாகவே அன்பு செலுத்தினார்கள்.

அய்யா அவர்களின் மனம், வாக்கு, செயல் எல்லாம் எப்பொழுதும் பகவானிடம் நிலைபெற்று நின்றதால் அவர்கள் இருக்கும் இடமும் பக்தி நிறைந்ததாகவே காணப்பட்டது. அய்யா அவர்களைக் காண்பதும், அவர்களோடு இருப்பதும் அவர்கள் உரைகளைக் கேட்பதும் பிறரைச் சுத்தமாக்கும், தூய்மையுடையவர்களாக்கும். அவர்கள்,

''ஒன்றே நினைத்திருந்தே ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைந்தேன் - ஒன்றே காண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங் கொளிசேர்
அங்கையற் காளாம் அது''

என்ற காரைக்கால் அம்மையார் கூற்றுக்கிணங்க இறைவன் ஒருவனையே தன்னுள்ளத்தில் இருத்திப் பக்தியுடன் தியானித்து வந்தார்கள். ஆண்டவனிடம் வேண்டும் பொழுதெல்லாம்,

''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்
மனத்தே வழுவாதிருக்க வரந்தரவேண்டும்''.

என வேண்டிய அவரது நிலையே நம்மைப் புனிதமாக்குகிறது.

அனைத்தையும் ஆண்டவன் அருள் நின்று நினைத்துச் செயல்பட்ட அய்யா அவர்கள், ''எவன் சித்தம் முற்றிலும் அமைதியாய் இருக்கிறதோ, எவன் எல்லோரிடத்திலும் மிருதுவாகவும் இனிமையாகவும் நடக்கிறானோ, எவன் மனம் கருணையினால் உருகி ஓடுகிறதோ, எவனது வாழ்க்கை நல்ல காரியங்களைச் செய்வதினால் தூய்மையுற்றிருக்கிறதோ, அவன் உண்மையான பக்திமானாவான்' என்பதற்கொப்ப உண்மை பக்தனாய் விளங்கி பிறரும் பக்தியுடையவர்களாய் விளங்க வழி காட்டினார்கள்.

# 9 உழைப்பு

பெறற்கரிய மானிடப்பிறவியைப் பெற்ற மனிதன் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வ நிலை அடைய பிறருக்குதவும் பணிகளை நாமும் செய்ய வேண்டும். அத்தகைய பணிகளைச் செய்யும் பொழுது, அப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு முழுமூச்சுடன் செயல்பட வேண்டும். தியாகச் செம்மல் நம் அய்யா அவர்கள், உழைப்பையே தம் மூச்சாகக் கொண்டு சாதனைகள் பல படைத்தார்கள்.

மாணவனாக இருந்தபொழுதே நாட்டுப்பற்றும், பக்தியும் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். தேசத்தந்தை மகாத்மாவின் அடியைப்பின்பற்றி நாடு விடுதலைப்பெறப் போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்று அரும்பாடுபட்டார்கள் மகாத்மா எப்படி காலை 4 மணிக்கே எழுந்து இரவு வரையில் இடைவிடாமல் அர்த்தமுடன் உழைத்தார்கள் என்பதை அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள்.

சுதந்திர இந்தியாவில், சென்னை மாகாணத்தின் முதல் கல்வி அமைச்சராக விளங்கி, அரிய பெரிய காரியங்களைக் கல்வித்துறைக்கு ஆற்றி, நாட்டு மக்கள் பயனடைய பெரும் முயற்சியை மேற்கொண்டார்கள். அவர்கள் செய்த பெருங் காரியங்களில் ஒன்று திருக்குறளைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கினார்கள். தமிழ் உள்ளவரை, தமிழ்நாடு உள்ள வரை அவர்களின் பணியை யாரும் மறக்கமாட்டார்கள்.

கல்வி அமைச்சராக விளங்கிய அய்யா அவர்கள், எதிர்கால இந்தியாவை உருவாக்கும் மாணவர்களுக்குக் கல்விக் கண்களைக் கொடுப்பதற்கு வித்யாலயம், சாரதாலயம்

என்னும் இரு கல்விக் கோயில்களை உருவாக்கினார்கள். ''உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ'' என்னும் கூற்றுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார்கள். ஒரு மாணவனோடு ஆரம்பிக்கப்பட்ட வித்யாலயம் இன்று கல்லூரியாகவும் 40 மாணவிகளோடு ஆரம்பிக்கப்பட்ட சாரதாலயம் இன்று பார்போற்றும் பல்கலைக்கழகமாகவும் ஆவதற்கு முக்கியக் காரணம் அய்யா அவர்களின் அயராத உழைப்பே ஆகும்.

அய்யா அவர்கள் எப்பொழுதும் நாட்டைப்பற்றியும் நாட்டு மக்களைப்பற்றியுமே நினைப்பார்கள். உயர்ந்த நோக்கங்களைச் செயலாக்க வேண்டுமானால் அவற்றைச் சாதித்து முடிக்கத்தக்க மனோதிடமும், உறுதியும் உழைப்பும் வேண்டும். உழைப்பும் ஊக்கமும் உள்ள நாடு, எவர் எதிர்த்தாலும் முன்னேற்றம் அடைந்து கொண்டேயிருக்கும் என்று உறுதியாக நினைத்து செயல்பட்டவர்கள்.

தனி மனிதனுடைய உழைப்பு அவன் குடும்பத்தை முன்னேற்றவும், ஒரு சமூகத்தின் உழைப்பு அச்சமூகத்தை முன்னேற்றவும், அதன்வழி நாட்டை முன்னேற்றவும் முடிகிறது. இந்தியாவின் எதிர்காலம் அதன் உழைப்பைப் பொறுத்திருக்கிறது. நம் உழைப்பே நம் தேசிய வாழ்க்கைக்கு அடிப்படை என்பதை ஆணித்தரமாகக் கொண்டவர்கள் அய்யா அவர்கள்.

விவேகமான முறையில் பயனுள்ள உடல் உழைப்பு இருந்தால் அதுதான் அறிவை வளர்ப்பதற்கு மிகச் சிறந்த வழி. உடலும் உள்ளமும் ஆன்மாவும் இயைந்து வளர்ந்தால்தான் சிறந்த அறிவு உருவாக முடியும். சமூகத்திற்குப் பயன்தரக்கூடிய உழைப்பின் மூலம் வளரும் அறிவினால் மக்களுக்கு மேலும் பயன் கிடைக்கும் என்று அண்ணல்காந்தி

அடிகள் கூறிய இக்கூற்று முற்றிலும் அய்யா அவர்களுக்குப் பொருந்தும். கடுமையான உழைப்புதான் வெற்றியின் இரகசியமாகும் என்று அடிக்கடி கூறுவார்கள்.

அய்யா அவர்கள் ''எப்பொழுதும் உழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். பலனை எதிர்பாராமல் உழையுங்கள். இயன்ற மட்டும் உழையுங்கள். பிறர் நலம் கருதி உழையுங்கள். வெற்றி உங்களைத் தேடித் தானாகவே வரும். புகழ் உங்களை வந்தடையும்'' என்பார்கள். நம் உழைப்பின் பயனை நாம் அனுபவிக்க வேண்டுமேயொழிய பிறர் உழைப்பின் பயனை நாம் எதிர்நோக்கி வாழக்கூடாதென்றும், 'ஏறு போல் பீடு நடை' கொள்ள வேண்டுமானால் ஓயாது உழைக்க வேண்டும் என்றும் கூறுவார்கள்.

அய்யா அவர்கள் வாழ்க்கை, யாவரும் பின்பற்றக் கூடிய ஓர் ஒப்பற்ற வாழ்க்கையாகும். அவர்கள் தாய்த்திரு நாட்டிற்காக, கல்விப்பணிக்காகத் தம்மையே அர்ப்பணித்தவர்கள்.

> ''மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயினார்''

என்னும் நீதிநெறி விளக்கப்பாடலுக்கேற்ப அல்லும் பகலும் அயராது, தன்னலங்கருதாது உழைத்த உத்தமர் அன்பு அய்யா அவர்கள்.

அய்யா அவர்கள் நிறுவிய கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள், பணியாளர், மாணவியர்கள் அனைவரிடமும், ''நீங்கள் உழைத்து முன்னேற வேண்டும்'' என்பார்கள். ஆண்டவன் நமக்குக் கொடுத்திருக்கிற கைகள், கால்கள், அறிவு ஆகியவற்றைப் பிறருக்கும் பயன்படுமாறு உழைக்கப் பயன்படுத்த வேண்டுமென்பார்கள்.

அன்புடனும், அறிவுடனும், உழைப்பவர்களுக்கு அந்த உழைப்பே ஆனந்தமாக இருக்கும். அத்தகைய ஆனந்தத்தைத்தான் நாம் அடையவேண்டுமென்று எப்பொழுது உணர்கிறோமோ, அன்றைக்குத்தான் நம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைந்தவர்களாவோம் என்று அறிவுறுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

மாணவிகளைப் பார்க்கின்றபொழுது அவர்களிடம் ''நீங்கள் படிக்கின்ற இக்காலத்தில் சிரத்தையோடு, பக்தியோடு படிக்க வேண்டும்'' என்பார்கள். ''உங்களைப் பார்க்கின்ற பொழுது இந்தியாவின் எதிர்காலத்தில் எனக்கு எல்லையற்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கேற்ற முறையில் நீங்கள் உழைப்பீர்கள் என்றும் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆண்டவன் அருளால் இந்த மகத்தான கைங்கரியத்தைச் செய்து முடிக்க நாம் அனைவரும் உயர்ந்த தூய்மையும், அறிவும், உழைக்கும் திறனும் பெறுவோம்'' என்பார்கள். உங்களில் சில பேராவது தங்கள் வாழ்க்கையைப் பிறருக்கு உழைக்க அர்ப்பணிக்க வேண்டும்'' என்று தமது தீராத ஆவலை அடிக்கடிக் கூறுவார்கள்.

ஆண்டவன் பணி செய்ய தம்மை ஆளாக்கி விட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய அய்யா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கடுமையாக உழைத்து உயர்வோமாக.

# 10. ஆக்கம்

மனிதன் குறிக்கோளுடைய வாழ்க்கையை நடத்தும் பொழுது நல்லபல செயல்களைச் செய்கிறான். அதனால் பேரின்பம் பெறுகிறான். வாழ்வில் உன்னத நிலையை அடையவேண்டுமானால், தானும் வாழ்ந்து பிறரும் வாழ வழிவகுக்க வேண்டும். அத்தகைய நிலையை அடைய ஆக்கம் அவனுக்கு அவசியம். அய்யா அவர்கள் வாழ்க் கையில் ஆக்கத்தின் பூரணத்துவத்தைக் கண்டோம்.

''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை''

என்ற திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார்கள். எச் செயலைச் செய்தாலும் அச்செயல் மற்றவர்களுக்குப் பயன் அளிக்கின்றதா என்று பார்த்தே செயல்படுவார்கள். செயலில் ஈடுபடும்பொழுது, அச்செயல் ஆக்கமாகும்படிச் செய்ய வேண்டுமென்ற சிந்தனை கொண்டவர்கள். வாரந்தோறும் நாங்கள் செய்கின்ற செயல்திட்டத்தைக் குறித்து ஆக்க முடைய ஆலோசனைகளைக் கூறுவார்கள். குறிப்பிட்டநாளில் கொடுக்கப்பட்ட செயலைக் கண்டிப்பாக முடித்துவிட வேண் டும் என்று நினைத்து நாங்கள் ஒவ்வொருவரும் செயல்படு வோம். ஒருவேளை ஒருவருக்கு முடிக்க முடியாவிட்டால் அய்யா அவர்கள் ''ஊக்கத்தோடு உழைக்கும்பொழுது ஆக்கம் நமக்கு வரும்'' என்பார்கள்.

''எதனைச் செய்தாலும் நெஞ்சில் உறுதிகொண்டு துணிந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் ஆக்கம் பெற முடியும்'' என்பார்கள். மாணவியருக்கு சொல்லித்

தரும் அறிவுரை கதைகளாகவே இருக்கும். சிறுவன் ஒருவன் ரோஜா செடியை பயத்தோடு தொட்டதாகவும், எனினும் முள் கையில் குத்திவிட்டதென்றும் கூறி, தாயிடம் அழுதானாம். அவன் தாய் ''நீ தைரியமாகவும் கவனமாகவும் செயல்பட்டிருந்தால் முள் குத்தியிருக்காது'' என்று கூறினாளாம். எனவே ''எந்தச் செயலைச் செய்தாலும் ஆக்கம் தருமாறு செய்யவேண்டும். படிக்கும் மாணவிகளாகிய நீங்கள் படிக்கும் பொழுது மிகக் கவனத்தோடும், ஆக்கத்தோடும் முயற்சி செய்ய வேண்டும்'' என்று அறிவுரை கூறுவார்கள்.

''அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல கருவிகளும், இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் துணை கொண்டு, அவற்றை ஆக்கப்பூர்வமாகக் கையாள வேண்டுமேயொழிய அழிவுக்காகப் பயன்படுத்தக் கூடாது'' என்று அய்யா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்.

ஆண்டவன் கொடுத்த அறிவைக்கொண்டு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்து நாட்டுக்குப் பயன்படும் வழியில் பணிபுரிய வேண்டும் என்றும் கூறுவார்கள். அய்யா அவர்களின் வாழ்க்கையே, ஆக்கத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. எல்லோரும் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டிருந்த அய்யா அவர்கள் 'மனதில் உறுதி வேண்டும்' — என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப வாழ்ந்தார்கள்.

''அனைவரிடமும் நலம்தரும் வகையில் ஆக்கத்தோடு செயல்பட உங்களை அர்ப்பணிக்க வேண்டும்'' என்று கூறு வார்கள். இன்றைய இளைய சமுதாயம் ஆக்கப்பூர்வமாகச் சிந்தித்து, செயல்பட வேண்டும் என்று விரும்பிய அய்யா அவர்கள் மாணவியரிடம் பேசும்போதெல்லாம் அதனையே வலியுறுத்திப்பேசி அவர்கள் உள்ளத்தில் ஆக்கப்பூர்வமான எண்ணங்களைத் தெளித்தார்கள்.

---

உடையர் எனப்படுவ தூக்கம்அஃ தில்லார்
உடைய துடையரோ மற்று.

— *திருக்குறள்*

---

# 11. ஊக்கம்

அமரர் அய்யா அவர்கள் பல்லோராலும் வாழ்த்தப்படு கின்ற சீலர். அவர்களிடம் பல பண்புகள், நாம் பின்பற்றக் கூடிய நிலையில் இருந்தன. அவற்றில் ஒன்று ஊக்கம். ஊக்கம் ஒருவனை உயர்ந்த நிலைக்கு இழுத்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. தன்அன்றாடக் கடமைகளை ஆரம்பிக்கும் முன்பு கடவுளை வணங்கித் திருக்குறளைப் படித்து, படித்த திருக்குறள் கருத்துக்களின் வழி நடக்க வேண்டுமென்று சிந்தித்துச் செயல்பட்டு வந்தார்கள்.

''உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்''

என்னும் திருக்குறளுக்கு ஏற்ப ஊக்கம் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.

அய்யா அவர்கள், வித்யாலயத்தை ஆரம்பித்த பொழுதும், மகளிருக்காக சாரதாலயத்தை ஆரம்பித்த பொழுதும், எளியவருக்கு உதவும்படி எடுத்த முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் அதிகமாக இருந்தன. ஆண்டவனைத் தஞ்சமெனச் சரண டைந்து மனவலிமையோடும், ஊக்கத்தோடும் எதிர்ப்புகளைச் சமாளித்து இன்று பல்லோரும் போற்றும் வண்ணம் சீர்பெற்று விளங்கும் கல்வி நிலையங்களின் காரணகர்த்தாவாக விளங்கி னார்கள்.

அய்யா அவர்களின் வாழ்க்கை, ஊக்கத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. பெண் கல்விக்குப் பெரிதும்பாடுபட்ட அய்யா அவர்கள் சாரதாலயக் கல்விக் கோவிலுக்கு வரும்

பொழுது அங்கு பயிலும் மாணவியர், பணியாற்றும் ஆசிரியர்கள், ஏனையோர் அனைவருக்கும், அவரவருக்கேற்ப ஆக்கமும் ஊக்கமும் அளித்து அறிவுரைகள் பல புகட்டி அறநெறியில் செல்ல வழி வகுத்தார்கள்.

படிக்கும் நேரத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்து கல்வி கற்க வேண்டுமென்பார்கள். ''ஊக்கத்தோடு உழைக்க வேண்டும். உங்கள் எண்ணங்களெல்லாம் சிறந்தவைளாக இருக்கவேண்டும். இறை நம்பிக்கையோடு தேச சேவை செய்யவேண்டும்'' எனவும் கூறுவார்கள்.

''உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து''

என்னும் திருக்குறளை எடுத்துக்கூறி, உயர்ந்த எண்ணங்களை உடையவர்களாகத் திகழ வேண்டுமென்பார்கள். உயர்ந்த எண்ணங்களும், ஊக்கம் நிறைந்த உயர்ந்த செயல்களும் ஒருவரை உயர்நிலைக்கு எடுத்துச்செல்லும் என்பதற்குச் சான்றாக விளங்கினார்கள்.

யாராவது சோர்வுற்று இருந்தால் உற்சாகமூட்டி உழைக்கக் கூறுவார்கள். ஏதேனும் கடமைகளைச் செய்வதற்குக் காலங்கடந்து விடுமேயானால், வருத்தமுறும் பொழுது ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவார்கள். ''சோர்வடையாதீர்கள் அம்மா. ஆண்டவன் நம்மோடு இருக்கிறான்''. எதற்கும் அஞ்ச வேண்டாம். அவன் பார்த்துக் கொள்ளுவான். நீங்கள் மாத்திரம் ஊக்கத்தோடு உழையுங்கள்'' என்பார்கள்.

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

என்று கூறி ஊக்கத்துடன் உழைப்பதற்கு உறுதுணையா வார்கள்.

எக்காரியத்தைச் செய்தாலும் ஊக்கத்தோடு செய்ய வேண்டுமென்று எண்ணிச் செயல்பட்டார்கள். தன்னுடைய சொந்த வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும், ஆன்மீக வாழ்க்கையிலும் 'ஊக்கமது கைவிடேல்' என்பதற்கிணங்க ஊக்கத்தோடு செயல்பட்டார்கள். அறிவோடும், ஊக்கத் தோடும் செய்கின்ற காரியங்கள் வெற்றியைத்தரும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

எப்பொழுதும் செயலாற்றிக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற அன்னை சாராதாமணி தேவியின் அருள் வாக்கை எண்ணிச் செயல்படும் அய்யா அவர்கள், யாரேனும் சோம்பலோடு இருப்பார்களேயானால், ''எப்பொழுதும் ஊக்கத்தோடு உழையுங்கள். நம்முடைய நாடு முன்னேற வேண்டுமென்றால் அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைக்க வேண்டுமல்லவா?'' என்று அக்கறையோடு கூறுவார்கள்.

''ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை''

என்ற திருக்குறளை எடுத்துக் கூறி ஊக்கம் உடையவர் களாக விளங்க வேண்டும் என்பார்கள்.

சிலர் தாம் ஏதாவது புதிய முயற்சியை மேற்கொள்ளும் பொழுது முதலில் உற்சாகமாக ஈடுபடுவார்கள். இடையில் ஏதாவது தடை ஏற்படும்போது எடுத்த காரியத்தை அப்படியே விட்டுவிடுவார்கள். ஆனால் அயராத ஊக்கமுடையவர்களே, முயன்று முயன்று வெற்றியாக்குவார்கள். சிறப்போடு வாழ, உத்தமராம் அய்யா அவர்களின், ஊக்கம் நிறைந்த வாழ்க்கை எடுத்துக்காட்டாக விளங்குகிறது. வெற்றி பெற ஊக்கத் தோடு உழைப்போம்.

# 12. வாய்மை

எல்லா பண்புகளுக்கும் குணங்களுக்கும் உலகத்தைத் தன் ஒளிக்கதிர்களால் விளங்கச் செய்யும் ஞாயிறு உண்மை (சத்தியம், வாய்மை, மெய்) என்று கூறலாம். அச்சமின்மை, விவேகம், அனுதாபம், காருண்யம், கண்ணியம் ஆகிய ஒவ்வொரு பண்பையும் வெளிப்படுத்த வைப்பது உண்மை. இந்தப் பண்புகளுக்கு உண்மையால் தான் அழியாமையும், வலிமையும் எங்கும் வியாபித்திருக்கும் தன்மையும் கிடைக்கின்றன. சூரியன் எப்படி பூமியின் இருளை அகற்றுகிறதோ அதேபோல் உண்மை என்ற சூரியன் மனித வாழ்க்கையை, மனித உள்ளத்தைப் பிரகாசிக்க வைக்கிறது. தெய்வீகத்தின் மகத்துவத்தையும், முழுமையையும் காட்டுவது உண்மை. ஆண்டவனே சத்திய சொரூபியாக இருக்கிறான் அல்லவா? ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்'' என்று ஏசுநாதர் திருவாய்மொழிந்தருளியிருக்கிறார்.

'வாய்மையே வெல்லும்' (சத்தியமே ஜெயதே) என்பது நமது அரசின் சின்னத்திலுள்ள வாக்கியம். சூரியனாகிய சத்தியத்தின் முன் மனத்தூய்மையற்றவர் நிற்க முடியாது. அதை அணுக முடியாது. அதன் ஒளியையும், கடுமையான வெப்பத்தையும் தூரத்திலிருந்து தான் அனுபவிக்க முடியும். அதுவும் வெகுதூரத்திலிருந்து தான் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்படி பெறும் சிறு அளவுகூட மனித உள்ளத்தைப் புனிதப்படுத்தும் நெருப்பாக மாறிவிடும்.

'உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்'

என்று பாரதியார் பாடியுள்ளார். உண்மை உள்ளத் தூய்மையை உண்டாக்கும். உள்ளத் தூய்மை ஒழுக்கத்தின் உயிர் நாடி. உண்மை என்பது மனத்திலும், வாக்கினிலும், செயலிலும், சூதும், கபடமின்மையுமே ஆகும். ''வாய்மை, அகிம்சை ஆகிய கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் பாதையில் முடிவற்ற சத்திய சோதனைகளாகவே நான் வாழ்க்கை யையும் அதன் பிரச்சினைகளையும் கருதுகின்றேன். வாய்மை என்னுடன் ஒன்றிவிட்ட இயல்பாகிவிட்டது. ஆயினும், அகிம்சை என் இயல்போடு பூரணமாக இணைந்து ஊன்றி விடவில்லை. சமண முனிவர் ஒருவர் ஒருமுறை எடுத்துக் காட்டியது போல் வாய்மையில் நான் கொண்டுள்ள பக்திக்கு அடுத்தபடியாகத் தான் அகிம்சையைப் போற்றுகிறேன். வாய்மையை நாடும் முயற்சியில் தான், அகிம்சைக் கொள்கை யில் எனக்கு ஈடுபாடு பிறந்தது. வாய்மையை விட மேலான தர்மம் எதுவும் கிடையாது என்று நம் திருமறைகள் கூறி யுள்ளன. அகிம்சை மிகத் தலையாய கடமையென்று அவை வலியுறுத்துகின்றன. இந்த இரண்டு சூத்திரங்களிலும், தர்மம் என்ற ஒரே சொல் கையாளப்பட்டிருந்த போதிலும் அச்சொல் வெவ்வேறு பொருள்களைத் தாங்கி நிற்கின்றது என்று கருது கின்றேன்'' என்று மகாத்மா காந்தி எடுத்துக் காட்டி யிருக்கிறார். அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்த அமரர் அய்யா அவர்களின் வாழ்க்கையே உண்மையின் உறைவிடமாக அமைந்திருந்தது.

''உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இம் மூன்று குணங்களையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்குண்டு'' என்பது சுவாமி விவேகானந் தரின் அருள் வாக்கு. அய்யா அவர்கள் உள்ளத் தூய்மை யோடு ஆண்டவனிடம் எல்லையற்ற பக்தியோடு, சுயநல மில்லாமல், உண்மையுடன் 'என் கடன் பணி செய்து கிடப் பதே' என்ற குறிக்கோளோடு வாழ்ந்த காரணத்தினால்தான்

அனைத்து மக்களாலும் ''அய்யா'' என்று அன்போடு போற்றப்பட்டார்கள்.

'புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்'

என்னும் திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாகத், தூய கதராடை உடுத்தித் திருநீறை நெற்றியில் பூசி, உள்ளத்தூய்மை யோடு, உண்மையின் இருப்பிடமாக விளங்கினார்கள். இக் கருத்தையே பாரதியாரும்,

'ஏட்டைத் துடைப்பது கையாலே மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே'

என்று பாடியுள்ளார்.

தெய்வமும் வாய்மையும் ஒன்றே. தெய்வத்தை முழு மையாகக் கண்டவன் யார்? வாய்மை என்பது ஆன்மாவி லிருந்து வருவது. ஆகவே, வெளிப்புறப் பொருட்கள் மூல மாக அதைக் காணவோ அனுபவிக்கவோ முடியாது. அதனால்தான் ஆன்மீகம் நிறைந்த தெய்வீகச் சூழலில்தான் உண்மை உயிருடன் திகழ முடியும். அத்தகைய சூழலைக் குழந்தைகளுக்குக் கல்வி மூலம் இளம் பருவத்திலேயே தர வேண்டும். 'பொய் சொல்லலாகாது பாப்பா' என்ற பாரதி யாரின் கருத்திற்கேற்ப இளம் குழந்தைகளின் உள்ளத்தில் உண்மையை விதைக்க எண்ணிய அய்யா அவர்கள், குழந்தை களையும், மாணவிகளையும், ஆசிரியர்களையும் பார்க்கும் பொழுதெல்லாம், ''நாம் உண்மையோடு காரியங்களைச் செய்யவேண்டும்'' என்று ஓயாது கூறிக்கொண்டேயிருப் பார்கள். மிகச்சிறிய செயலிலிருந்து மாபெரும் நிர்வாகம் வரையிலும் தனி வாழ்க்கையிலும், எல்லாக் கோணங்களிலும் உண்மையைக் கடைப்பிடித்து ஒரு ஒப்பற்ற உதாரணமாகத் தலைச்சிறந்து விளங்கினார்கள். பொது சேவை நலனுக்காகச்

சேர்க்கும் பணத்திற்கு உடனுக்குடனே கணக்கை உண்மையாக வைத்திருப்பதின் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டேயிருப்பார்கள், 'சத்திய சோதனையின்' ஆசிரியரான மகாத்மாவின் சீடரான அய்யா அவர்கள்.

உண்மை அனைவருக்கும் பொதுவானது. முழுமையானது. அதை உணர்ந்து வாழ்ந்த மனிதர்கள் மகான்களாகிறார்கள். ஏசுநாதர், புத்தர், மகாத்மா காந்தி முதலிய மகான்கள் உண்மையில் இரண்டறக் கலந்து சோதியில் சோதியாகி விட்டார்கள். அமரர் அய்யா அவர்களும்,

''மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்மையாங் களையை வாங்கி பொறையெனும்
நீரைப் பாய்ச்சி''

என்னும் அப்பர் தேவாரப் பாடலுக்கேற்ப உண்மையையே பேசி, உண்மையில் வாழ்ந்து காட்டி உண்மையோடு சங்கமமாகி விட்டார்கள்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வாய்மை மிளிர வேண்டுமானால் அவர்கள் தம்மைத் தாமே தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். தாங்களே உண்மையின் வலிமையை உணர வேண்டும். அப்பொழுது உண்மை என்ற உயரிய அனுபவம் அவர்களை வானுற உயர்த்தி விடும். வாய்மையைப் போற்றி பின்பற்றும் அனைவரும் ஒரு குடும்பமாகப் பலரை ஒன்று சேர்த்து, ஒருமைப்பாட்டுடன், முழுமையாக உண்மை என்ற பயணத்தை மேற்கொள்ள முடியும்.

இந்த பயணத்தில் எக்காரணத்தினாலும் உண்மையை விட்டு வழுவாமல் அதைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது முழுமையாவோம். இதுவே வாழ்க்கையின் வெற்றியின் பரம ரகசியம்.

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்ற திருக்குறள்படி எல்லோருடைய உள்ளங்களிலும் நிறைந்திருக்கும் அய்யா அவர்கள் காட்டியபடி ஆண்டவன் அருளுடன் உண்மையின் பாதையில் நடப்போம் நிமிர்ந்து நிற்போம்.

---

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

— *திருக்குறள்*

---

# 13. எளிமை

மனித வாழ்க்கைக்குச் சிறப்பு தருவது மனிதனின் சிந்தனைத் திறனே. சிந்தனைகள் உயர்ந்து, வாழ்வாங்கு வாழ்ந்து, வாழ்க்கை உயர்வதற்கு உலகப்பற்றுதல்கள் தடைகளாக உள்ளன. அவற்றை அறுத்தெறிவதற்கு எளிமை வேண்டும். அமரர் அய்யா டாக்டர் தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள், வாழ்க்கையில் பற்றுக்களை விடுத்து எளிமையை ஏற்றுக்கொண்டு சிந்தனை உயர்வுகளுக்குப் பேருதாரணமாக விளங்கினார்கள்.

வாழ்க்கையில் எளிமை அமைய வேண்டுமாயின் வாழும் இடம், உடுக்கும் உடை, உண்ணும் உணவு, பயன் படுத்தும் பொருட்கள், பழக்க வழக்கங்கள் அனைத்தும் எளிமையின் அடிப்படையில் அமைய வேண்டும். இந்த நோக்கில் அய்யா அவர்களின் வாழ்க்கையை ஆராயும் பொழுது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு எளிமை மிளிர்கிறது. வலிமை பொங்குகிறது.

திருப்பூரில் செல்வம் செழித்த குடும்பத்தில் பிறந்து. செல்வத்தில் வளர்ந்த அவர்கள், செல்வச்சீமானாகக் கோவை யில் மாளிகைகளில் வாழ்ந்து, வசதிகளில் மிதந்து, குடும்ப உறவுகளில் மூழ்கி, இருந்திருக்கலாம். ஆனால், இளமையி லேயே ஸ்ரீ இராமகிருஷ்ணரைத் தெய்வமாக மனதில் கொண்டு சுவாமி விவேகானந்தரின் அடிச்சுவடுகளைப் பின் பற்றி அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்ட அறைகூவலை ஏற்றுப் பலமுறை சிறை சென்ற அய்யா அவர்கள் எத்தகைய இருப்பிடத்தை அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் உறைவிடமாகக் கொண்டார்கள்? தனது

அன்றாடப் பணிக்கு உதவும் ஒரு பொதுவான (multi-purpose) அறை, ஓய்வெடுக்க, உணவு அருந்த, படுக்க அறை, ஒரு குளிக்கும்-கழிவு அறை - இவ்வளவுதான்.

அந்த அறைக்குள் நுழைந்தாலோ, அது இறைவன் உறையும் இல்லமாக விளங்கும். மிகத் தூய்மையாக, எளிமையாக, நேர்த்தியாக இருக்கும். செல்லுகின்றவர்களுக்கெல்லாம் ஒரு படிப்பினை அளிப்பதாக இருக்கும். நிறைய பொருட்களோடு, மிகப்பெரிய வீடுகளில் வாழ்ந்தால்தான் சுகம், பெருமை என்று நினைக்கின்றவர்களுக்கு, அய்யா அவர்கள் வசித்த இடம், எளிமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அவற்றின் உடைமைகள் தான் எவ்வளவு எளிமையானவை! ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஆதிசங்கரர், சுவாமி சிவானந்தர் முதலியோரின் படங்கள், மகாத்மா காந்தி வித்யாலயத்திற்கு வந்தபோது கையெழுத்திட்டுத் தந்த படம் (Autographed picture), ஒரு கடிகாரம், வித்யாலயத்தின் 50 ஆண்டு கொண்டாடியதன் சின்னமாக தஞ்சாவூர் தட்டு, அய்யா அவர்கள் மற்றவர்களுக்குத்தரும் அன்பளிப்பு புத்தகங்களுடன் பிற்காலத்தில் அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை வைப்பதற்காக ஒரு பீரோ, ஒரு Filing cabinet, ஒரு மேசை, நாற்காலிகள், வருவோரிடம் பேச சோபா, டி.வி, அதன் மேல் நடராஜனின் ஆனந்த நடனத்தைக் காட்டும் ஐந்து உலோகத்தால் ஆன வார்ப்பு ஆகிய இவை அந்த அறையில் இருந்தன. சுவரில் இருந்த இரு அலமாரிகளில் அய்யா அவர்கள் எழுதிய பல புத்தகங்கள், மற்ற ஆன்மீகத் துறையிலுள்ள சிறந்த நூல்கள் இருந்தன. அய்யா அவர்கள் தன்னைப் பார்க்க வருபவர்களுக்குப் புத்தகங்கள் தருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். வேறு பகட்டான, அழியக்கூடிய பொருட்களை அன்பளிப்பாகத் தருவதைவிடத்

திருமணங்களுக்கும் மற்ற விசேடங்களுக்கும் அழியாத ஆன்மீகக் கருத்துக்களைத் தரும் புத்தகங்களைத் தமது கையால் வாழ்த்து எழுதி அளிப்பதில் தான் அவர்களுக்கு எத்தனை ஆர்வம், எளிமை, மேன்மை!

படுக்கை அறையில் கட்டில், பெட்டிகள், உணவு உண்ண மேசை, அலமாரி, மருந்துகளையும், உணவுகளையும் பாதுகாக்க ஒரு குளிர்சாதனப்பெட்டி (Refrigerator) இருந்தன. குளிப்பறையும், கழிப்பறையும் ஒன்றாக எளிமையாக இருந்தன.

அய்யா அவர்கள் அணிந்து வந்த ஆடைகள் தூய வெண்கதராலான நான்கு முழ வேட்டி, பனியன், சட்டை, மேல் துண்டு, கைக்குட்டை. சென்னையில் அமைச்சராக இருந்த பொழுதும், டெல்லித் தலைநகரில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுதும், எப்பொழுதும் இத்தகைய எளிய ஆடைகளையே அணிந்து, கண்ணியம் நிறைந்த, அனைவரும் மதிக்கத்தக்க தோற்றத்துடன் இருப்பார்கள்.

உண்ணும் உணவோ எளிமையானதாக பச்சைக் காய்கறி வகைகளுடன் தயாரித்த பதார்த்தங்களைக் கொண்ட சைவ உணவாக இருந்தது. அதில் நெய், வெண்ணெய், உப்பு, மிளகாய் முதலியன குறைவாகவே இருந்தன. கனிகளில் மாங்கனிகளைக் கடைசி வரையிலும் கிடைத்த பொழுதெல்லாம் ருசித்து உண்டார்கள்.

அறுசுவை உணவைப் பல உணவுப் பொருட்களோடு உண்டால்தான் திருப்தி அடைகிற மக்கள் பலர். ஆனால் அய்யா அவர்களோ, முறைப்படி எளிய, சத்தான உணவை

உண்பார்கள். வித்யாலயத்திலும், சாரதாலயா வளாகத்திற்கு வருகை தரும் பொழுதும் மாணவ மாணவிகளுக்கு எந்த உணவைக் கொடுக்கிறோமோ அதைத் தான் உண்பார்கள். அதோடு மட்டுமல்லாமல், உணவில் சில கட்டுப்பாடுகளையும் அனுசரித்தார்கள். சைவ உணவு மட்டுமே உண்டு வந்த அய்யா அவர்கள், காலையில் சிற்றுண்டி, நண்பகல் உணவு, மாலையில் சிற்றுண்டி, இரவு உணவு என்ற பழக்கம் கொண்டிருந்தார்கள்.

அய்யா அவர்கள் தேவையற்றப் பொருட்களை வைத்துக் கொண்டிருந்ததில்லை. தேவையற்றவற்றை உடனே அகற்றி விடுவார்கள். அவர்கள் பயன்படுத்திய சாதனங்கள் எச் எம்.டி. கைக்கடிகாரம், சுதேசிச் செருப்புகள், குளிர் காலத்தில் பட்டு அல்லது கம்பளிச் சால்வைகள், நல்ல பேனா, மேசை விளக்கு (Table Lamp) இவை தான். இவ்வளவு குறைந்த பொருட்களுடன், அறவாழ்க்கையை மேற்கொண்டு துறவியாக வாழ்ந்தார்கள். மற்றவர்களுடன் பழகும் போதும், எளிமையின் எழில் மிகுந்து தோன்றும். வித்யாலயத்தில் ஆலமரத்தடியில் அவர்கள் காலை உணவின்போது விருந்துபசரித்து வந்ததே அதற்கு ஒரு சான்று.

திருவள்ளுவர் கூறிய,

''காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்''

என்ற குறளின்படி எளிமையே உருவாகவும், இனிய சொல்லை உடையவராகவும் வாழ்ந்த அய்யா அவர்களின் உள்ளத்தில்தான் எத்தனை ஆற்றல் நிறைந்து வழிந்து வந்தது! எளிமையில்தான் அமைதியும் மனநிறைவும் கிடைக்கும் போலும்! எளிய வாழ்வில் வீணாக ஆசைகள் எழாது என்ற பேருண்மையைத் தம் வாழ்க்கையின் மூலம் படம் பிடித்துக் காட்டினார்கள் அய்யா அவர்கள்.

அய்யா அவர்களின் பேச்சில் எளிமை நிறைந்திருந்தது. அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவிகள், பணிபுரியும் பணியாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி மழலைச் சிறார்கள் அனைவரிடமும் அன்போடு பேசுவார்கள். அவர்கள் பேச்சு இனிமை நிறைந்தது. சிறு வயது முதல் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாமணி தேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரிடம் பக்தி கொண்ட அய்யா அவர்கள் யாரிடமும் இனிமையாக எளிய வார்த்தைகளில் பேசி தன்வயப் படுத்தக் கூடியவர்களாய் விளங்கினார்கள்.

அய்யா அவர்கள் எழுத்திலும் எளிமை வீசியது. வக்கணையாகப் பேசுவதை விட எளிய மொழியில், குழந்தைகளும் புரிந்து கொள்ளுமாறு பேசும் அவர்கள் பாங்கே அலாதியானது! ஆங்கில மோகம் நிறைந்திருந்த சூழ்நிலையில் இனிய தாய்மொழித் தமிழிலேயே பெரும்பாலும் பேசி, எழுதித் தன் கருத்துக்களை வெளியிட்டார்கள்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த நோக்குடைய அய்யா அவர்கள் மாணவியரை வாழ்த்தி ஆசியுரை வழங்கும் பொழுதெல்லாம் எளிமையோடு இருக்க வேண்டும் என்பார்கள். ''உங்கள் பழக்கவழக்கங்கள், செயல்கள் ஆகியவற்றைப் பார்த்துத் தான் உங்களை மக்கள் மதிப்பிடுவார்களே யொழிய, உங்கள் ஆடம்பரமான வாழ்க்கையைப் பார்த்தல்ல'' என்பார்கள்.

எளிய வாழ்க்கை, அதுவே உயர்ந்த வாழ்க்கை
சிந்தனை, அதுவே இளைய தலைமுறையை உயர்த்தும் சிந்தனை
இனிய பேச்சு, அதுவே சிந்திக்கத் தூண்டும் பேச்சு
உயர்ந்த குறிக்கோள், அதுவே மக்களை மேம்படுத்தும் குறிக்கோள்.

இத்தனையும் கொண்டு செயல் வீரராய், தென்னாட்டு மகாத்மாவாய், மக்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்பவராய் வாழ்ந்த அய்யா அவர்களின் எளிய உடைமைகளை அவர்கள் அறையில் வைத்துப் போற்றி, அண்ணல் காந்தியடிகளின குடில் ஒரு தேசியச் சின்னமாக சேவாகிராமில் விளங்குவது போன்று, ஓர் அருங்காட்சியகமாக ஆக்க வேண்டும்.

ரால்ஃப் வால்டோ எமெர்சன் (Ralph Waldo Emerson) ''எளிமையை விட மகத்துவம் வாய்ந்தது எதுவும் கிடையாது; எளிமையாக இருப்பதே பெருமையாகும்'' என்று சொன்னார். எளிய வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் மகான் களே. மகத்தான வாழ்வை விரும்பும் ஒவ்வொருவருக்கும் எளிமை குறிக்கோளாக அமைய வேண்டும், எளிமை அமை யும் போது மனத்தூய்மை, அவாவின்மை, பற்றற்ற நிலை, வெறுப்பின்மை, மற்றவர்களைக் குறைசொல்லாமை ஆகிய பண்புகளை அடைவது எளிதாகும். வாழ்க்கையில் சிறு சிறு ஆசைகள், சோம்பல் நிரப்பி வீணாக்காமல் ஹென்றி தோரோ (Henry Thoreau) கூறியதுபோல் '' எளிதாக்குக, எளிதாக்குக Simpliy Simplify'' என்ற தத்துவத்திற்கு உதாரணமாக வாழ்ந்த அமரர் அய்யா அவர்கள் வாழ்க்கையைப் பின்பற்றி உயர்வோம்.

---

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

— *திருக்குறள்*

---

# 14. அகிம்சை

ஒழுக்கம், பெருந்தன்மை, அகிம்சை, பரந்த நோக்கு, உண்மை ஆகியன பிறப்பிலிருந்து இறப்புவரை கைக்கொள்ள வேண்டிய கோட்பாடுகள் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. எவ்வுயிர்க்கும் எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தீங்கு செய்யாதிருப்பதே அகிம்சை என்று சமண சமயம் கூறுகிறது.

மகாபாரதமும், இராமாயணமும் அகிம்சைக் கோட்பாட்டின் உறைவிடமாய்த் திகழ்கின்றன. மகாபாரதத்தில் வரும் தர்மர் அன்புக்கும், பொறுமைக்கும் இருப்பிடமாய் விளங்குகிறார். இராமன் தியாகவுள்ளம், உண்மையைக் காண்பதில் உறுதி, நலிந்தோரைக் காக்கும் துணிவு ஆகிய பண்புகளைக் கொண்டு அகிம்சையின் உருவாகத் திகழ்கிறார்.

மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை முழுவதும் அகிம்சையைக் கடைப்பிடித்தார்கள். அத்தகைய உள்ளத்தைப் பெற மகத்தான தவம் செய்து சாதனை பெற்றார்கள். ஆயிரக்கணக்கான ஆன்மாக்களை நமதாக்கிக் கொள்ள ஒரு துளி அகிம்சை இருந்தாலே போதும். ஆன்மீகப் பண்புகளான அச்சமின்மை, விவேகம், அனுதாபம், அன்பு, வாய்மை ஆகியவை அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்படும் பொழுது அகிம்சை உருவாகிறது. அப்படித் தோன்றும் அகிம்சை என்னும் பண்பு, அனைவரையும் அகிம்சை வழியில் செல்லத் தூண்டும். பண்புகளுக்கெல்லாம் பண்பாகிய அகிம்சை, அனைத்து நற்பண்புகளிலிருந்தும் வடித்தெடுத்த சாறு (Essence) ஆகும்.

இயேசுநாதர் எண்ணம், பேச்சு, செயலில் காருண்யம் இருக்க வேண்டும் என்று கூறினார். ''உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டு'' என்று போதித்தார். அகிம்சை என்பது உண்மையின், அன்பின் செயல்பாடு ஆகும். அதற்கு மாறான வன்செயல்களோ, உண்மைக்கும், அன்புக்கும் எதிரிகள்.

''இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

என்று திருவள்ளுவர் கூறியிருப்பதும் அகிம்சையின் தத்துவமே, மனிதன், மனித நிலையிலிருந்து தெய்வீக நிலையை அடைய வேண்டுமானால் அவன் அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

''உண்மை, அன்பு, பிறருக்கு உதவுதல் இவையே அகிம்சை'' என வினோபா அடிகள் கூறியுள்ளார்கள். அண்ணல் காந்தியடிகள் அகிம்சையைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தே 'மகத்துவம்' என்ற நிலையை அடைந்தார். ''என்னுடைய ஆழ்ந்த சத்திய தோட்டத்தில் கிடைத்ததுதான் அகிம்சை'' என்றார். சத்தியத்தில் பற்று, ஒருவரையொருவர் மதித்தல், அன்பு ஆகிய மூன்றின் பிணைப்பே அகிம்சை. அகிம்சை சத்தியத்தில் அடங்கியுள்ளது. கடவுளைத் தெரிந்து கொள்ளுவதற்கு உரிய உறுதியான வழி அகிம்சை. அன்பு வழி, அகிம்சையே வழி, சத்தியமே முடிவு, என்று பல்வேறு நிலைகளில் அகிம்சையின் தத்துவத்தை காந்தியடிகள் விளக்கியுள்ளார்கள். அகிம்சையை ஒரு வாழ்வு முறையாகவும் தத்துவமாகவும் போற்றினார் காந்தியடிகள்.

காந்தியடிகளின் வாழ்க்கையைப் பின்பற்றி வந்த அய்யா அவர்கள் அகிம்சை வழியைக் கடைப்பிடித்தார்கள்.

நிறுவனங்களில் பணிபுரியும் எல்லோரிடமும் அன்புடன் பழகு வார்கள். தவறுகின்ற பொழுது அன்போடு தவறினை எடுத்துக்கூறி மேலும் அத்தவறைச் செய்யாத நிலையை அடையச் செய்வார்கள்.

அய்யா அவர்கள் யாரையும் வருத்தப்படுத்தியதே கிடையாது. ஒருவர் மனம் நோகும்படி எதையும் பேசக் கூடாது, செய்யக் கூடாது என்று அடிக்கடி வற்புறுத்து வார்கள்.

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார்கள். பகைவனுக்கும் அருளும் நன்னெஞ்சு உடையவர்கள். அதிகமான அன்பைச் செலுத்தி, அனைவராலும் அன்போடு ''அய்யா'' என்று போற்றப்பட்ட புண்ணிய மகான். அய்யா அவர்களின் அன்பைப் பெற்று, நன்றியோடு இருக்க வேண் டியவர்கள் சில வேளைகளில் எதிர்த்து உண்மைக்குப் புறம் பாகச் செயல்பட்ட போதிலும், அகிம்சை மனப்பான்மை யோடு அவர்களை மன்னித்து வாழ்த்தினார்கள்.

குருமகராஜ் ஸ்ரீ இராமகிருஷ்ணரிடமிருந்து எளிமை, பரந்தநோக்கு, ஈடிணையற்ற அன்பு ஆகிய அகிம்சையின் அடிப்படைப் பண்புகளை அய்யா அவர்கள் கற்றுக்கொண் டார்கள். உயிர்க்கொலை செய்யக் கூடாதென்பதைத் தம் குறிக்கோளாகக்கொண்ட அய்யா அவர்கள் வாழ்நாள் முழு வதும் சைவ உணவே உண்டார்கள். அய்யா அவர்களின் நிறுவனங்களில் நடத்தப்படும் விடுதிகளிலும் சைவ உணவே அளிக்கப்படுகிறது.

அய்யா அவர்கள்,

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினா லிளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
னேருறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளா யேழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்''

என்ற வள்ளலார் பாடலுக்கேற்ப உள்ளம் இரங்கிப் பிறருக்காக வாழ்ந்தவர்கள்.

அய்யா அவர்களின் சொல் அனைத்திலும் அகிம்சை என்னும் பண்பு மிளிர்ந்ததைக் காணலாம்.

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று மறியேன் பராபரமே''

என்னும் தாயுமானவர் பாடலை வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டு வாழ்ந்து வழி காட்டினார்கள்.

அகிம்சையின் வழி நடந்து வந்த அய்யா அவர்கள் மாணவிகளின் உள்ளத்திலும் நற்குணங்கள் நிறைந்து வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டுமென்ற பெருநோக்கோடு சாரதாலயக் கல்வி வளாகத்தின் மையத்தில் அமைந்திருக்கும் சாரதாலய ஆலயத்தில் காந்தியடிகளின் வாசகத்தை பொறித்துள்ளார்கள். அதன் தமிழாக்கம்:

''அகிம்சை, சத்தியம் பிறர் பொருளைக் கவராமை
தன்னடக்கம், தனக்கென பொருள் சேர்த்து
வையாமை, உடல் உழைப்பு
நாவடக்கம், அஞ்சாமை
சமயப் பொறை, சுதேச உணர்வு
தீண்டாமையைக் கடைபிடியாமை

ஆகிய பதினொன்றும் நம் உறுதி மொழிகளாகட்டும்''.

அகிம்சை வழி நின்று வாழ்ந்து காட்டிய அய்யா அவர்கள் தெய்வமாய் இருந்து, எல்லோரும் அகிம்சை வழி செல்ல நிச்சயம் வழி நடத்துவார்கள்.

---

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

— *திருக்குறள்*

---

# 15. அனுதாபம்

சான்றோர் எனப்படுபவர்கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பண்புடையவர்கள். அவர்கள் இறைவன் மீது அளவிலா பக்தியும், மானிடர் மீது அனுதாபமும், இரக்கமும் உடையவர்கள். அத்தகைய சான்றோர்களில் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றவர்கள் அய்யா அவர்கள். ஆண்டவன் பணி செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

அய்யா அவர்களின் வாழ்க்கை அனைவரும் கடைப்பிடிக்கக் கூடிய ஒரு சிறந்த வாழ்க்கையாகும். மனித இனத்தின் மாபெரும் செல்வம் அனுதாபமாகும். சுயநலம் கருதாமல், தகுதி கருதாமல் எல்லோரிடமும் சமமாக அனுதாபம் கொள்ளுவார்கள். எங்கள் சாராதாலயக் குடும்பத்தில் பணி புரியும் எல்லோரையும் ஒன்றாக பாவிப்பார்கள். அலுவலகத்தில் பணிபுரிபவராக இருந்தாலும் சரி, பேராசிரியை பெருந்தகையாக இருந்தாலும் சரி, தங்கள் குறைகளைக் கூறும் பொழுது அவற்றைப் பொறுமையாகக் கேட்பார்கள். பின் அவர்களுக்கு நேரிட்ட இன்னல்களைக் கண்டு அனுதாபம் கொள்ளுவார்கள். ''அன்னையின் பிள்ளைகள் நீங்கள். அன்னையின் அருள் உங்களோடு இருக்கும் பொழுது நமக்கு இன்னல்கள் நேராது'' என்று அனுதாபம் நிறைந்த வார்த்தைகளை, அய்யா அவர்கள் அடிக்கடிக் கூறுவார்கள்.

நற்குண நற்பண்புகள் நிறைந்திருக்கின்றவர்களிடம் அனுதாபம் அளவில்லாமல் இருக்கும். நற்பண்புகள் என்னும் விண்மீன்களுக்கிடையே அனுதாபம் சந்திரனைப் போன்றது. அய்யா அவர்களிடம் அனுதாபம் நிறைந்திருந்தது. மாணவியரிடம் உரையாற்றும் பொழுது, ''நாம் பிறருக்காக அனுதாபம் கொள்ளவேண்டும். யாரேனும் நம்முடைய உதவியை

நாடிவரும் பொழுது, அவர்களை அலட்சியம் செய்யக் கூடாது. மாறாக அவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்ற சிறந்த குணத்தை சிறு வயதிலிருந்தே கடைப்பிடிக்க வேண்டும்'' என்பார்கள்.

அய்யா அவர்கள், 'பிறருக்கு உதவி செய்பவன், கோபத்தை அடக்குபவன், பிறரை மன்னிப்பவன் இவர்களுக்கு இறைவன் எப்பொழுதும் மன்னிப்பான்' என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்கள். அத்தகைய நம்பிக்கையோடு, மாணவியரும், ஆசிரியர்களும், அலுவலர்களும் வளர வேண்டும், சிறந்த குடிமக்களாக வாழ வேண்டும் என்று கூறிக் கொண்டே இருப்பார்கள்.

'எல்லாம் செயல் கூடும் ஆண்டவன் அருளால்' என்று நினைத்த அய்யா அவர்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுவதிலோ, பிறருக்கு அன்பு செய்வதிலோ, ஆனந்தம் காண்பதே அனுதாபத்தின் முழு லட்சியம் என்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்டு, அன்பு செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். யார் தன்னிடம் வந்தாலும், சிறியோர் முதல் பெரியோர் வரை, ஏழை எளியவர்கள், பணக்காரர் என்ற பாகுபாடின்றி, சாதி மத வேறுபாடில்லாமல், எல்லோர் இடத்தும் அன்பு செலுத்தினார்கள். 'பணம் பெரிதல்ல, காசு பெரிதல்ல, அன்பு தான் பெரிது' என்று அடிக்கடி அறிவுரை கூறுவார்கள்.

பெருந்தியாகத்தினால் மட்டுமே பெருங்காரியங்களைச் செய்ய முடியும். பெரும் மனம் படைத்தவர்கள் எல்லா நற்காரியங்களையும் செய்ய முடியும் என்பதற்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர்கள் அய்யா. அவர்களின் மனம் பெரிய மனம்;

இரக்க குணம் நிறைந்த மனம்; ஏழை எளியவர்களின்பால் அன்பு கொண்ட மனம்; எல்லோரிடத்திலும் அனுதாபம் கொண்ட மனம்.

'அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்'

என்று பாரதியார் அன்று பாடினார். 'ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்பதை எத்தனை பேர் இன்று செயல்படுத்துகிறார்கள்? ஏழைகளிடம் அனுதாபம் கொண்ட அய்யா அவர்களுக்கு அது இயன்றதாயிற்று. ஏழைக் குழந்தைகள், வறுமை நிலையில் வாடிக்கொண்டிருப்பவர்களுக்கு உணவும் உடையும் கொடுத்துச் செல்வக் குழந்தைகள் மழலைப் பள்ளியில் பயில்வது போலப் பயிலச் செய்ய வேண்டும் என்று பாலர் பள்ளியை ஆரம்பித்து, அந்தக் குழந்தைகளின் உற்சாகத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்களின், அனுதாபத்தினால் விளைந்தவையே நாங்கள் இன்று சமூகத் தொண்டில் ஈடுபட்டிருப்பதும், மிகவும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்காக இயங்கும் அங்கன்வாடிகளைத் தத்தெடுத்ததும் ஆகும். அங்கன்வாடிக் குழந்தைகளின் ஒளிமயமான வாழ்க்கையை நினைத்த அவர்தம் பெருந்தன்மையை என்னென்று சொல்வது?

அய்யா அவர்கள் உபகாரத்தைவிட அனுதாபமே அதிக உதவி செய்யும் என்று நினைத்தார்கள். அதன்படி நடந்தார்கள். தன்னிடம் வருகின்றவர்கள் குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய ஆலோசனையும், அறிவுரையும் கூறுவார்கள். அவர்களிடம் மிகுந்த அக்கறையும் அனுதாபமும் கொள்ளுவார்கள், வருகின்றவர்கள் அய்யா அவர்களிடம் குறைகளைக் கூறிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற மனதிருப்தியோடு சென்றுவிடுவார்கள்.

அய்யா அவர்கள் ''தண்டிப்பதைக் காட்டிலும், அனுதாபம் கொள்ளுவதே அதிக வல்லமையுடையது'' என்று கூறுவார்கள். ஆசிரியர்கள் மாணவிகளைத் தண்டிக்கக் கூடாது என்றும், அவர்களுக்கு அன்பாகக் கூறி அவர்களைக் திருத்த வேண்டும் என்றும் சொல்லுவார்கள். அதோடு மட்டுமல்லாமல், நாங்கள் ஏதேனும் தவறு செய்து விட்டால் எங்களைத் தண்டிக்க மாட்டார்கள். மாறாக, எங்கள் தவறைச் சிரித்த முகத்தோடு அனுதாபத்துடன் எடுத்துக் கூறித் திருத்துவார்கள். மீண்டும் எங்கள் வாழ்நாளில் அந்தத் தவறைச் செய்ய மாட்டோம் என்ற உறுதியையும் எடுத்துக் கொள்வோம்.

அய்யா அவர்களின் அனுதாபம் நிறைந்த சொற்கள் எங்கள் வாழ்க்கையில் வழிகாட்டும் சொற்களாகும். அவர்களின் அனுதாபம் நிறைந்த வார்த்தைகளே எங்களைச் சிறப்பாகப் பணியாற்றத் தூண்டுவிக்கும் தூண்டு கோலாய் அமைகிறது.

---

குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

— *திருக்குறள்*

---

# 16. பொறுமை

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் நற்குண நற்செயல்களில் சிறந்து விளங்க வேண்டுமென நினைப்பது இயற்கை. நினைக்கின்ற காரியங்கள் செயலாகிச் செயல்கள் நல்ல பழக்க வழக்கங்களாகி, மனிதன், மனிதனாக வாழ வழி வகுக்கின்றன. அத்தகைய நல்ல மனிதர்கள் வெளிப்படுத்தும் சிறந்த குணங்களில் பொறுமையும் ஒன்று.

பொறுமையுடன் வாழக் கற்றுக் கொள்ளுவதே வெற்றியின் ரகசியமாகும். பொறுத்திருப்பதின் மூலம் எந்தக் காரியத்தையும் சிந்தித்துச் செயல்பட்டுச் சாதித்து விடலாம். பொறுமை உள்ளவனுக்கு அவன் விரும்பியதெல்லாம் கிடைக்கும். மகிழ்ச்சியின் திறவுகோலும் பொறுமையே. இதனால் தான் 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்ற பழமொழி தோன்றியது போலும். அமரர் அய்யா அவர்கள் பொறுமையின் இருப்பிடமாக விளங்கினார்கள். அய்யா அவர்களுக்கு இன்னல்கள், நோய்கள் ஏற்பட்ட போதும், எதையும் தாங்கும் இதயம் உடையவர்களாய் அவற்றைப் பொறுமையோடு சிரித்த முகத்துடன் சகித்துக் கொண்டார்கள்.

செயற்கரிய செயல்களைச் செய்யும் பெரியவர்களெல்லாம் பொறுமையோடு இருந்தே காரியங்களைச் சாதித்துள்ளார்கள். ஆண்டவனிடம் பிரார்த்தித்துக் கேட்கும் வரங்களில் மிகப் பெரிய பிரார்த்தனை பொறுமைக்கேயாகும். அய்யா அவர்களிடம், 'என்னை இன்னார் குறை கூறிவிட்டார்களே' என்று வருந்திச் சொல்லும் போது, அவர்கள் உடனே, ''பொறுமையாக இருங்கள். ஆண்டவன் அருள், அன்னையின் அருள் உங்களோடு இருக்கும். போர்க்களத்தில் தன்மீது

பாய்ந்த அம்பின் வேதனையைச் சகித்துக் கொள்ளும் யானையைப் போலவே நம் மீது சுமத்திய பழிச் சொற்களை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும்'' என்பார்கள்.

பொறுமையும் சாந்தமும் ஒருவனுக்குச் சக்தியை அளிப்பன. பொறுமையோடு இருந்தால் விதியையும் வென்று விடலாம் துன்பங்களையோ வேதனை தரும் நிகழ்ச்சி களையோ பொறுமை இருப்பின் அடக்கத்தோடு, பண்போடு ஏற்றுக் கொள்ள முடியும். அது சிறந்த நன்மையைக் கொடுக்கும்.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர்கள் அய்யா அவர்கள். இராமகிருஷ்ண வித்யாலயத்தை 1932-ல் ஆரம்பித்து முதன் முதலில் ஒரு அரிசன மாணவனைச் சேர்த் தார்கள். அப்பொழுது அய்யா அவர்களுக்குத் தெரிந்த ஒருவர் ''பல பள்ளிகூடங்கள் திறக்கப்படுகின்றன. ஆனால் அவை உடனே மூடப்படுகின்றன அதுபோல இப்பள்ளிக் கூடமும் ஒன்று போலும்!'' என்று கூறினாராம். எது வந்த போதிலும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் படைத்த அய்யா அவர்கள், 'தூற்றுவார் தூற்றட்டும்' என்று நினைத்துப் பொறுமையோடு அந்த வார்த்தைகளைச் சகித்துக் கொண் டார்கள். அதன் பலன்தான், வித்யாலயம் இன்று பல்வேறு பிரிவுகளைக் கொண்டு ஒரு மாபெரும் கல்வி நிலையமாக விளங்குகிறது.

'ஆற்றலுக்கு எல்லையுண்டோ'? என்று கூறும் அய்யா அவர்கள் பொறுமையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுவார்கள். ''உன்னில் தாழ்ந்தவர்கள்

உன்னைத் தூற்றும்போதும், உன்னில் மேலானவர்கள் உன்னைப் பழிக்கும்போதும், அவற்றைத் துச்சம் எனக்கருதி விட்டு விடு'' என்பார்கள். ''பிறர் நலனில் அக்கறை காட்டு கின்றவர்கள், பிறர் நலம் கருதி உழைக்கின்றவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று அடிக்கடி கூறுவார்கள்.

வித்யாலயத்தை ஆரம்பித்த காலத்தில் அய்யா அவர்கள் பொதுமக்களிடம் பணம் திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தன்பால் பழக்கமான தெரிந்தவர்களிடம் நன் கொடையாகப் பணம் கேட்டார்களாம். பலர் மனமுவந்து அய்யா அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஒருவர் அய்யா அவர்களை வெளியே சென்று விடுமாறு கூறினாராம். செல்வந்தர் குடும்பத்தில் பிறந்து சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அய்யா அவர்கள், இதனால் மனம் நோகாமல் தெய்வச்சித்தம் என்று நினைத்துப் பொறுமையைக் கடைபிடித்துப் பதிலொன்றும் கூறாமல்,

> ''பக்தியுடையார் காரியத்தில் பதறார் மிகுந்த பொறுமையுடன்
> வித்து முளைக்குந் தன்மைபோல் மெல்லச் செய்து பயனடைவார்''

என்னும் பாரதியார் கணிப்புக்கேற்பத் தாம் மேற்கொண்ட புனிதப் பணியில் வெற்றியும் கண்டார்கள்.

பெரிய நிறுவனங்களில் தலைவர்கள், இயக்குநர்கள் ஆகியோரைச் சாதாரணமாகக் காண்பது அரிது. ஆனால் அய்யா அவர்களோ இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள்.

எங்கள் சாரதாலயத்திற்குத் தினமும் வரும் பொழு தெல்லாம் எல்லோரிடமும் கனிவுடன் உரையாடுவார்கள்.

நாங்கள் கூறுகின்ற அனைத்தையும் பொறுமையுடன் கேட்பார்கள். பின்பு புன்சிரிப்புடன் ' இதுதானா! இதற்குத்தானா இவ்வளவு கலக்கம் அடைந்தீர்கள்? இதெல்லாம் ஒன்றும் இல்லை'' என்று கூறி ஒன்றும் நடக்காததுபோல எளிதாகக் காட்டி, உற்சாகமூட்டி அனுப்பி விடுவார்கள்.

அய்யா அவர்கள் எவ்வளவு பொறுமையுடன் இருந்தார்கள் என்று அவர்களோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் தெரியும். பொறுமையை இழந்து அதனால் பல துன்பங்களுக்குள்ளான பலரை நாம் அன்றாட வாழ்க்கையில் காணுகின்றோம். அவர்கள் அவதியுற்று அல்லற்படாமல் அமைதியோடு பொறுமையுடன் செயலாற்றிட வழிகாட்டியவர்கள் அய்யா அவர்கள்.

திண்ணிய நெஞ்சமும், தெளிந்த அறிவும், நல்ல எண்ணமும், எண்ணிய முடிக்கும் பண்பும் வேண்டுமென்றால் பொறுமை அவசியம். அய்யா அவர்கள் தனி மனிதராக ஆயிரங்காலத்துப் பயிராம் சாராதாலயப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியுள்ளார்களெனில், அவர்கள் எவ்வளவு பொறுமையுடன் செயல்பட்டிருப்பார்கள் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

''பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை
திருப்தியிலும் உயர்ந்த இன்பமில்லை
ஆசையிலும் பெரிய தீமையில்லை
கருணையிலும் பெரிய அறமில்லை
மன்னித்தலிலும் ஆற்றல் மிக்க ஆயுதமில்லை''

என்ற குருநானக்கின் அருள் வாக்கிற்கேற்ப வாழ்ந்து காட்டிய செம்மல் அய்யா அவர்கள்.

ஒருமுறை அய்யா அவர்கள் வலது காலில் பெருவிரலில் செருப்பு கடித்ததினாலோ என்னவோ ஒரு புண் ஏற்பட்டது. சீழும் வைத்தது, அதைச் சிகிட்சை செய்த கோவை மருத்துவர் ஒருவர் அதைப் பயங்கரமாகக் குடைந்து Magnesium Sulphate ஐப் புகுத்தினார். அந்த வேளையில் வலி உண்டாயிருக்க வேண்டும். ஆனால் அய்யா அவர்கள் சிரித்துக்கொண்டே பொறுமையுடன் அந்த வலியைத் தாங்கிக் கொண்டார்கள்.

பல சமயங்களில் அய்யா அவர்களுக்கு 'ஆஸ்துமா' வரும். பயங்கர இருமலுடன் ஓயாமல் குவளையில் துப்பிக் கொண்டே போராடுவார்கள். ஆஸ்துமா நோயைப் பொறுமையுடன் சகித்தார்கள்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், சிறை சென்று இன்னல்களை அனுபவித்த போதும், கல்விக் கோயில்களைக் கட்டி அவை உலகப்புகழ் பெற வைத்த போதும், பொறுமையோடு, ஊக்கத்தோடு, அகிம்சா தர்மத்தோடு அயராது உழைத்தார்கள். பார்போற்ற வாழ்ந்து, பலர் வாழ வழி காட்டினார்கள்.

---

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

— *திருக்குறள்*

---

# 17. அஞ்சாமை

'அச்சம் தவிர்' என்பது ஔவை மூதாட்டியார் ஆத்திச் சூடியில் பதித்துள்ள வீர வசனம். வாழ்க்கையில் துன்பங்கள் நெளிவு சுளிவுகள், ஏமாற்றங்கள் போன்ற அச்சமளிக்கும் நிகழ்ச்சிகள் ஏற்படுவது இயல்பு. அவற்றை நேர் கொண்டு நின்று, பதறாமல், சிதறாமல் சந்திப்பதற்கு அஞ்சாத நெஞ்சம் வேண்டும். அமரர் அய்யா அவர்களின் அஞ்சாத நெஞ்சம் கொண்ட வாழ்க்கையில் அச்சத்திற்கு இடம் இல்லாதிருந்தது. ''ஏன் பயப்பட வேண்டும்? எதற்குப் பயப்பட வேண்டும்?'' என்ற கேள்விகளை எழுப்பி அச்சம் நிறைந்த மனத்தைத் தேற்றிப் பயத்தை அகற்றுவார்கள். ''பயப்படாதே! அஞ்சாதே! இறைவனிருக்கிறான். பார்த்துக் கொள்ளுவான்'' என்பது தான் அவர்கள் தந்த தாரக மந்திரம்.

செல்வம், பதவி, அதிகாரம், உறவினர் மேல் பாசம் யாவையும் இழக்கலாம். கடுமையாக முயற்சி செய்தால் இழந்த இவையனைத்தையும் மீண்டும் பெறலாம். ஆனால் அஞ்சியஞ்சித் தைரியத்தை இழந்தாலோ அனைத்தையும் ஒரேயடியாக இழந்ததாகும். ஒவ்வொரு மனிதனுள்ளும் ஆன்மீக வீரம் நிறைந்திருக்க வேண்டும். ஆன்மீக வீரத்திற்கு எதிரில் அதிகாரம் நிற்க முடியாது. அதிகாரத்திற்கு ஆன்மீக வீரம் பணியாது, அஞ்சாது. ஏனெனில் ஆன்மீக வீரம் உள்ளிருந்து வருகிறது. நேர்மையான வழியில் வாழ்ந்து கிடைக்கும் வலிமை, அதன் விளைவு அது வளர்ந்து கொண்டேயிருக்கும். அதனைத் தோற்கடிக்கவே முடியாது. அச்சமின்மை வலிமையுடையது. அதே வேளையில் அது மென்மையானது; உடைக்க முடியாதது. அச்சத்தினால் பணி செய்யும் கோழையிடத்து நேர்மையோ, ஆன்மீக உணர்வோ இருக்க முடியாது. ஆகவே, அச்சமின்றி இருப்போம். அஞ்சியஞ்சிப்பொய்

செல்ல வேண்டாம். மாய்மாலம் வேண்டாம். பொய்யை, தவறுகளைத் தூக்கியெறிவது தான் உண்மையான தைரியம். தவறு செய்யாதவர் உலகிலில்லை. ஆனால் தைரியமாக அச்சமின்றி தான் செய்த தவறை ஏற்றுக் கொள்ளுகிறவர் தான் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.

'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்'

என்னும் திருவள்ளுவர் வாக்கினைத் தம் வாழ்க்கையில் கடைபிடித்தொழுகிய அய்யா அவர்கள் நல்லனவற்றைச் செய்வதற்கு அஞ்சக் கூடாதென்றும், தீயனவற்றைச் செய்வதற்கு அஞ்ச வேண்டுமென்றும் அறிவுறுத்தி வந்தார்கள். நம் நிறுவனங்களில் நடக்கும் கூட்டுப் பிரார்த்தனைகளில் அடிக்கடி அப்பர் சுவாமிகளின்,

''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை''

என்ற தேவாரத்தைப் பாடச் சொல்லி அகங்குளிரக் கேட்டு அஞ்சாமையை ஊட்டினார்கள்.

திருநாவுக்கரசர், சமண சமயத்தினின்றும் சைவ சமயத்தைச் சார்ந்தார் என்பதை அறிந்த மகேந்திரப் பல்லவன் கோபங் கொண்டு அவருடலில் கல்லைக் கட்டி

கடலில் தள்ள ஆணையிட்டார். அவ்வாறே சுவாமிகளைக் கல்லில் பிணைத்து நடுக்கடலில் தள்ளினர். அப்பொழுது சிறிதும் அஞ்சாத சுவாமிகள்,

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே''

என்னும் பாடலைப் பாடவும் கல் மிதந்து தெப்பமாகச் சுவாமிகளைத் தாங்கிச் சென்றது என்று கூறி, 'ஆண்டவன் அருள்' நமக்கு இருக்குமேயானால், நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை என்று அடிக்கடி கூறுவார்கள். ''ஆன்மீகத்தையடைய அச்சமின்மை அடிப்படைத் தேவையாகிறது. கோழைகளுக்கு நேர்மை இருக்க முடியாது'' என்று தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகள் சொல்லையும் நினைவூட்டுவார்கள்.

அய்யா அவர்கள் பாரதியாரின் விடுதலை வேட்கைப் பாடல்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். பாரதியாரின்

''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே''

என்ற பாடலைப் பாடிக்காட்டி நாமும் நல்ல காரியங்கள் செய்வதற்கு அஞ்சக் கூடாது என்று உணர்த்துவார்கள். அவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்காத இரண்டு வார்த்தைகள் 'ஐயோ, பயமாயிருக்கிறதே' என்பன. ''ஆண்டவன் அருள் இருக்கும்போது ஏன் ஐயோ என்று சொல்லவோ, அஞ்சவோ வேண்டும். இவ்விரண்டு வார்த்தைகளும் வீர மனிதரின் உள்ளத்தின் அகராதியில் இருக்கக் கூடாது'' என்று வலியுறுத்துவார்கள். அதன் விளைவாக இந்த இரண்டு வார்த்தைகளும் என் மனம், வாயில் வருவதே கிடையாது.

இராமகிருஷ்ண பரமஹம்சரிடமும், அன்னை சாரதாமணி தேவியிடமும் விவேகானந்த சுவாமிகளிடமும் ஆழ்ந்த பக்தி கொண்டவர்கள் அய்யா அவர்கள். அவர்களின் வாழ்க்கையில் ஆண்மையின் கம்பீரத்தோடு செயல்பட்ட சரித்திரத்தைக் கூறி வீரவுணர்ச்சியை ஊட்டுவார்கள். அவற்றில் இரண்டு கதைகளைக் கூறுவது சிறப்புடையது. ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் காட்டிடையே சென்று கொண்டிருந்தாராம். மாலை நேரமாகையால், மரம் ஒன்றின் அடியில் அமர்ந்து தியானம் செய்துகொண்டிருந்தாராம். தியானம் முடிந்து கண்களைத் திறந்து பார்க்கையில் தனக்கெதிரில் சிறிது தூரத்தில் புலி ஒன்று நிற்பது தெரிந்ததாம். வேறு எவராக இருந்திருந்தாலும் அச்சத்திலேயே அவர்கள் உயிர் போயிருக்கும், ஆனால், சுவாமியோ புலியைக் கண்டு அஞ்சவில்லை, உடலும் உள்ளமும் நடுங்கவில்லை மீண்டும் தன் தியானத்தில் ஆழ்ந்தார். மீண்டும் கண் விழித்துப் பார்க்கும் பொழுது, அவருக்கருகில் அந்தப் புலி படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

சுவாமி விவேகானந்தர் அச்சத்தைத் தவிர்த்து அம்பிகையைத் தியானம் செய்கையில். புலியும் அவரைத் தாக்குவதற்கு அஞ்சி ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டது. ''எத்தனை மகத்தான அஞ்சாமை! அத்தகைய அஞ்சாமை நமக்கு வேண்டும். விவேகானந்த சுவாமிகளின் உருவத்தைப் பாருங்கள், என்ன கப்பீரமான தோற்றம்! பார்த்த மாத்திரத்திலேயே நமக்கு அஞ்சாமையை அளிக்கிறது. நீங்களெல்லோரும் நல்ல காரியங்கள் செய்யப் பிறந்தவர்கள். அச்சமின்றி வாழுங்கள்'' என்று தம் உள்ள வேட்கையைக் கூறிக் கோழைகளையும் தட்டியெழுப்பும் தகைமையாளராக அய்யா அவர்கள் விளங்கினார்கள்.

ஒருமுறை அன்னை சாரதாதேவி அவர்கள் ஜயராம்பாடி கிராமத்திலிருந்து தட்சிணேசுவரத்திற்குச் சென்றார்கள். அவர்களோடு கங்கா ஸ்நானம் செய்வதற்குச் சிலர் உடன் சென்றார்கள். அன்னை மெதுவாக நடந்து சென்றதால், மற்றவர்களெல்லாம் அவரைத் தனியே விட்டு முன்னால் சென்று விட்டனர். அது காட்டு வழி. இரவு நேரம்.எதிரில் வருகின்றவர்களை அடையாளம் காணமுடியாத இருட்டு. அந்த நேரத்தில், பார்த்தாலே அச்சத்தைக் கொடுக்கக் கூடிய உருவம் கொண்ட திருடன் ஒருவன் அவர்கள் அருகில் வந்தான். அன்னை அவர்கள், சிறிதும் அஞ்சாமல், ''அப்பா, உங்கள் மருமகனைக் காணச் செல்லு கிறேன்'' என்று கூறவும், திருடன் மனம் மாறி அன்னையை, அன்னை என அழைத்துத் தன் வீட்டில் இரவு தங்கச் செய்து மறுநாள் அனுப்பி வைத்தான். பகைவனுக்கருளும் நன்னெஞ்சு உடைய அன்னை அவர்கள் அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள்.

''வானம்துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே''

என்னும் அப்பர் சுவாமிகளின் பாடலைக் (கோவில் வாயிலில் போதித்திருப்பது) கூறி ''ஆண்டவன் பிள்ளைகளாய் வாழ்பவர் எதற்கும், எவருக்கும் பயப்பட வேண்டாம்'' என்பார்கள்.

அரிய பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமானால், அதற்கு ஆண்டவன் அருளும், அஞ்சாமையும் வேண்டும்.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை''

என்னும் அப்பரின் பாடலுக்கேற்ப ஆண்டவனை நினைந்து அஞ்சாமல் உண்மையினின்று சிறிதும் வழுவாமல் பணி புரிபவரே வீரராவார்.

''யாருக்கும் அஞ்சாமல் அன்பறங் காப்பவன் யாரவனே மனிதன்''

என்ற சுத்தானந்த பாரதியாரின் வாக்குக்கேற்ப உத்தமராக வாழ்ந்து தெய்வமாக இன்று நம்மை விண்ணுலகத்திலிருந்து வாழ்த்திக் கொண்டிருக்கும் அய்யா அவர்களின் அன்புக் குரலாம் அஞ்சாமையை மனத்தில் நிறுத்தி நேர்மையோடு உழைத்து நிமிர்ந்து நிற்போம்.

---

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

— *திருக்குறள்*

---

# 18. நம்பிக்கை

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பது ஆன்றோர் வாக்கு ஆண்டவனிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொள்ள வேண்டும். நம்பிக்கையே ஒருவனைச் சிறந்த மனிதனாகச் சாதனைகள் புரிபவனாக ஆக்குகிறது இறைவனை நம்பிச் செயலைச் செய்யும் பொழுது அது வெற்றியைக் கொடுக்கிறது.

'நம்பினோர் கெடுவதில்லை; இது நான்கு மறை தீர்ப்பு' என்ற மொழிக்கேற்ப, வாழ்க்கையில் வெற்றிக்கும், அமைதிக்கும் நம்பிக்கை வேண்டுமென்று அய்யா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். ஆண்டவன் மேல் அசையாத நம்பிக்கை, மனிதன் மேல் நம்பிக்கை, தன்மேல் நம்பிக்கை இருந்தால் அதைரியமோ, ஐயமோ எழுவதற்கு வழி கிடையாது என்பதை வாழ்க்கையில் காட்டினார்கள்.

நாம் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் எதிர்ப்படும் பிரச்சினைகளைச் சந்திக்க முடியாமல் துவளுகிறோம். நாம் செய்திருக்கும் தவறுகள் நம்மைத் தலை தூக்க முடியாமல் செய்து விடுகின்றன, இப்படிப்பட்ட வேளைகளில் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று ஆண்டவனிடம் நம்பிக்கையுடன் வேண்டுதல் செய்யும் பொழுது நமது விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன; நமது துயரங்கள் ஓட்டப்படுகின்றன.

''உன்னிடத்தில் நம்பிக்கை வை. எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக்கின்றன. அதை உணர்ந்து நீ அந்த ஆற்றலை வெளிப்படுத்து. நான் எதையும் சாதிக்க

வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் நஞ்சைப் பொருட்படுத்தாதிருந்தால் பாம்பின் நஞ்சு கூடச் சக்தி யற்றதாகி விடும்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறி யுள்ளார். அய்யா அவர்கள் அடிக்கடி கூறிய மந்திரமும் 'ஆண்டவன் அருள் இருக்கும் பொழுது நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது' என்பது தான். அந்த நம்பிக் கையைத் தமது வாழ்க்கையில் காட்டியவர்கள். வித்யா லயத்தை ஐந்து ரூபாய் நான்கு அணாவோடு ஒரே ஒரு அரிசன மாணவனைக் கொண்டு ஆண்டவன் மேல் நம்பிக்கை யோடு ஆரம்பித்தார்கள். அதேபோன்று பெண்களுக்கு மனையியல் கல்லூரியையும் ஆண்டவன் அருள் மீது நம்பிக் கையோடு 45 மாணவியரைக் கொண்டு 1957-ல் ஆரம்பித் தார்கள். அய்யா அவர்களின் அசையா நம்பிக்கையால், அவர் பெயரைத் தாங்கிய கல்லூரி இன்று ஆல்போல் தழைத்து உலகம் புகழும் பல்கலைக்கழகமாக விளங்குகிறது.

நம்பிக்கையின் வெற்றிக்கு நமது வேதங்களில், வரலாறு களில் எத்தனையோ சான்றுகள் உள்ளன. சீதாப்பிராட்டியார் இலங்கையில், இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த பொழுது இராமபிரான் வருவான், தன்னை விடுவித்து, வீட்டிற்கு அழைத்துச் செல்வான் என்ற அவரது நம்பிக்கை எவ்வளவு துன்பங்களையும் தாங்கிக் கொண்டு, கடைசி வரைக்கும் பின்னடையாமல் இருக்க வைத்தது !

'வரும் வரும் என்பதோர் துணிவால்
மாதிரம் அளக்கின்ற கண்ணாள்'

என்கிறார் கம்பர். நம்பிக்கையால் தானே ஆபிரகாம் தன் ஒரே மகனைப் பலி செலுத்தத் தயாரானான் ! தானியேலும் அவன் நண்பர்களும் சிங்கக் குகையிலும், அக்னி சுவாலை யினூடேயும் சேதமின்றி வெளிவந்தார்கள் அல்லவா? இத் தகைய வீரச் செய்திகள் நமக்குத் தெரிந்திருந்தும் ஏன் மீண்டும் மீண்டும் துன்பப் படுகிறோம்? காரணம் ஆன்மீக

வழியில் நின்று பல சவால்களைச் சந்தித்து வெற்றி கண்டவர்களின் வரலாறுகளில் நாம் நம்பிக்கை கொள்ளாமையே ஆகும்.

ஆன்மீக சாதனையில் ஈடுபடாமல் பொருளையும் பணத்தையும் நாடும் போது இறுதியில் வெறுமை தான் தாண்டவமாடும். வெறும் பணத்தால் ஏற்படும் உலக வெற்றி உண்மையான வெற்றி போலத் தோன்றினாலும், எவ்வளவு முன்னேற்றத்தைக் கொடுத்தாலும் பின்பு அது வேதனையைத் தான் தரும். ஆண்டவன் பாலுள்ள நம்பிக்கை மாத்திரம் தான் சமாதானத்தையும் முழு வெற்றியையும் தரும்.

பகவான் இராமகிருஷ்ணர், தன் சீடர்களுக்கு உபதேசிக்கும் பொழுது, 'ஆண்டவனிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் எல்லாமே கிடைத்து விடும்' என்றார். இராமன் இலங்கைக்குச் செல்ல அணைக் கட்ட வேண்டியிருந்தது. ஆனால் அனுமானோ இராம நாமத்தில் வைத்த நம்பிக்கையில் ஒரே தாவலில் கடலைத் தாண்டிவிட்டார். தனக்குப் பக்தியும், நம்பிக்கையும் கொடு என்று இறைவனிடம் இடைவிடாது வேண்டும் பொழுது வேண்டுவதை, வேண்டியாங்கு வேண்டிய பொழுது கொடுக்கும் இறைவன் கொடுத்து அருள் பாலிப்பான்.

இராமகிருஷ்ணர் ஆண்டவனிடம்,

'நின்னருட் பெயரின் உறுதியினாலே
நிந்தையும் கவலையும் நீங்கி
மன்னிய பிரம்ம பதத்தையும் அடையும்
வாய்ப்பினைப் பெற்று நான் உய்வேனே'

என்று வேண்டி, இன்று எண்ணற்ற பக்த கோடிகள் தொழும் படியாக இறைவன் மனிதனாகத் தோன்றி அவர் இறைவனாக உயர்ந்தமைக்குக் காரணம் பரம்பொருள் மீது கொண்டிருந்த பக்தியும் நம்பிக்கையுமே யாகும்.

குழந்தை பெற்றோரை நம்புகிறது. நோயாளி வைத்தியனை நம்புகிறான். வழக்குள்ளவன் வக்கீலை நம்பு கிறான். ஆனால் இவையனைத்தும் விரைவில் அழியக் கூடியவை; எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆண்டவன் மேல் வைக்கும் நம்பிக்கை தான் நிரந்தரமானது, என்றும் நம்மை அழிவிலிருந்து காக்கக் கூடியது. அத்தகைய நம்பிக்கை தான் அய்யா அவர்கள் வாழ்க்கையில் வலிமை அளித்தது.

---

யானையின் பலம் தும்பிக்கையில்
மனிதனின் பலம் நம்பிக்கையில் — முதுமொழி

---

# 19. விவேகம்

அச்சமின்மையுடன் இணைந்து இயங்குவது விவேகம். ஆன்மீகம் என்ற நாணயத்தின் இரு பக்கங்கள் விவேகமும், அஞ்சாமையுமேயாகும். விவேகம் என்பது வெறும் அறிவு மாத்திரம் அல்ல. ஒருவர் அறிவும், படிப்பும், பட்டங்களும் மிகுந்தவராக இருக்கலாம். ஆனால் விவேகமுடையவர் என்று சொல்லிவிட முடியாது. விவேகத்திற்கு அறிவு வேண்டும். ஆனால் விவேகமும், அறிவும் ஒன்றுதான் என்று சொல்லிவிட முடியாது. விவேகம் என்பதின் சத்துணவு தான் அறிவு. விவேகம் அறிவு என்னும் அடிப்படையில் கட்டப்பட்டாலும், அது அறிவுக்கும் மேம்பட்டது, அப்பாற் பட்டது. கடலிலும் ஆழமானது. ஆகாயத்தைப் போல் பரந்து விளங்கும் விவேகத்தை முழுமையாகப் பெற ஒரு பிறப்புப் போதாது. விவேகமில்லாத தைரியம், மனிதனைக் கவலை என்னும் படுகுழியில் தள்ளிவிடும்.

ஒவ்வொருவரும் மேற்கொள்ளும் முயற்சியின் அளவில் தான் அறிவு வளரும். அப்படிப்பட்ட அறிவைப் பலரும் பயனடையும்படி முயற்சி மேற்கொள்ள வேண்டும். அறிவையே முயன்று பெறுவது கடினமாயின், அதைவிட மிகப்பெரிய ஞானத்தைப் பெறுவது அதனைவிட அரிதானது. ஞானம் அறிவையும், அனுபவத்தையும் சேர்த்துக் கடைந்து எடுத்த சாறு அல்லவா? விவேகத்தின் தொடக்க நிலை அனுபவம். அது அஞ்சாமைக்கு அடிப்படையானது. உலக மதிப்பின்படி அறிவின் அடிப்படையில் ஞானத்தை அடைவது மிகமிகக் கடினம் என்றாலும் ஞானத்தை ஆன்மீகத்தின் பகுதியாகக் காணும்போது அதைப் பெறுவது எளிதாகிறது. படிப்பறிவே இல்லாத ஸ்ரீ இராமகிருஷ்ணர், குழந்தைப் பருவத்திலேயே ஆன்மீகத்தை அடைந்த சங்கராச்சாரியார்

ஆகியோரின் ஞானம் மனத்தளவில் தோன்றி, இனிமையையும், ஒளியையும், குழந்தைத் தன்மையையும் வெளிப்படுத்தியது. அவர்களின் விவேகம் மலையின் ஊற்றுப் போல் தூய்மையாகப் புனிதமாகப் பெருக்கெடுத்து ஓடியது.

'ஞானமாகிய பாதரட்சையை அணிந்து கொண்டால் உலகமெங்கும் முள் நிறைந்த வனமெங்கும் பயமின்றித் திரியலாம்' என்றார் பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர். விவேகம் என்பது சத்தியம் (ஈசுவரன்) அசத்தியம் (மாயப் பிரபஞ்சம்) ஆகிய இரண்டிற்குமுள்ள வேற்றுமையை அறிந்து சத்தியத்தை மாத்திரம் பற்றுவதாகும். பகுத்தறிவுக்கும் மேம்பட்ட உள்ளுணர்ச்சி, பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட நம்பிக்கை என்று அறியப் பெற்றதாலேயே, நரேந்திரநாத தத்தர் விவேகானந்தரானார்.

விவேகம் வேண்டும்; பக்திவேண்டும்; ஞானம்வேண்டும்; அம்பிகையின் திவ்விய தரிசனம் அனைவரிடமும் வேண்டும் என்று பிரார்த்தித்தார் விவேகானந்தர். இதில் விவேகத்தை முதன் முதலில் பிரார்த்தித்தது மிகவும் சிறப்புடையதல்லவா?

இராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாமணி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரிடம் ஆழ்ந்த பக்தி கொண்ட அய்யா அவர்கள் ஆன்மீக ஞானத்தின் திருவுருவாக விளங்கினார்கள். அவர்களுடைய அறிவாற்றல் என்ற அடித்தளத்தில் விவேகம் ஆன்மீகச் சூழ்நிலையில் பிரகாசித்தது. அவர்கள் சிந்தித்துத் திட்டமிட்டு செயல்பட்ட அனைத்துச் செயல்களிலும் ஞானம் மிளிர்ந்தது.

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெருந் தகைமையும், பெருமனமும் உடையவர்கள் இருப்பதினால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதனைப் புறநானூறு,

''தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க் கென முயலுநர் உண்மையானே''

எனக் குறிப்பிடுகிறது.

திருவள்ளுவரும்,

''பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

என்னும் குறளில் வலியுறுத்தியுள்ளார். பிறர்க்குரியவர்களாக வாழ்வதே விவேகத்தின் தன்மை. அய்யா அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் பிறருக்காகவே வாழ்ந்தார்கள். அவர்கள் நினைவெல்லாம் இந்நாடு உய்ய வேண்டுமென்பதும், நாட்டு மக்களெல்லாம் மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமென்பதுமே ஆகும். சாரதாலய குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் ''நீங்களெல்லாம் இந்நாட்டை உய்விக்கப் பிறந்தவர்கள்'' என்றும், ''இந்தியாவின் எதிர் காலமே உங்களை நம்பித்தான் இருக்கிறது'' என்றும் கூறுவார்கள்.

ஆன்மீக சூழ்நிலையில் பிறந்த ஞானத்தை சொற் களால் விளக்க முடியாது. வருணிக்க இயலாது. அறிவு மாத்திரம் ஞானமாகாது. மிகுந்த அறிவும் விவேகமல்ல.

அப்படியானால் ஞானம் தான் என்ன? அது உள்ளத்திலிருந்து சுரந்து பீறிட்டு வருவது. ஒருவர் வாழ்க்கையில் எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், எதை நினைக்க வேண்டும், பேச வேண்டும், அல்லது செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உதவுவது. பிரச்சினையைக் கண்டு பயந்து ஓடி விடாமல், அவற்றை முறியடிக்க நடுநிலையான வழிகளைக் காணக் கற்றுக்கொடுப்பது. உண்மையுள்ள ஒருவர் பிரச்சினைகளுக்கு தகுந்த பரிகாரம் தேட முடியாமல் போய் விடலாம். அதே போல் அறிவுள்ளவர்களும் தந்திரமுள்ளவர்களும் தவறலாம். ஆனால் ஞானமுள்ளவனோ பிரச்சனைகளை எல்லா கோணங்களிலும் இருந்து அலசிப்பார்த்து, சரி தவறுகளைக் சீர்தூக்கி அனைவரின் நலத்திற்கேற்பச் செயல் படுத்தும் வகையில் தீர்ப்பைத் தருவான். ஆகவே விவேகம் என்பது, மனிதனின் உயர்ந்த கட்டத்தில் வாழ்க்கை முழுவதும் நிறைந்திருக்கும் ஆன்மீகமாகும்.

இப்படிப்பட்ட ஞானம் யாருக்குக் கிடைக்கும்? யாரொருவர் அறிவில் முதிர்ச்சி அடைந்து, சுயநலமும் அச்சமுமின்றி மனிதநலத்திற்கு உழைக்கிறார்களோ அவர்கள் தான் இத்தகைய ஞானத்தைப் பெற முடியும். ஞானம் யாரை அழைக்கிறது? யார் உயர்ந்த வாழ்வு வாழ்கிறார்களோ அவர்களைத்தான் அழைக்கிறது. ஆகவே நமது வாழ்க்கையின் நோக்கமும் இத்தகைய ஞானத்தைப் பெறுவதாக அமைய வேண்டும். ஞானத்தைப் பெற்றதும் வலிமை, செயலாற்றும் திறமை, அமைதி, சமாதானம், அனைவருடன் ஒத்து வாழ்தல் ஆகிய உயரிய பண்புகளை வாழ்க்கையில் பெற முடியும்,

வேற்றுமையைப் போக்கி ஒற்றுமையை நிலை நாட்டுவதும், இம்சையை அறவே வெறுத்து அகிம்சையைக் கடைப் பிடிப்பதும், அமைதியின்மையை அகற்றி, அமைதிக்குப்

பாடுபடுவதும், பகைமையை வேரோடு அழித்து நட்பை வளர்ப்பதும் தன்னலத்தைத் துறந்து பொதுநலனுக்கு உழைப்பதும் சண்டையைத் தவிர்த்து சமாதானத்திற்குத் துணை புரிவதும், ஆணவத்தை ஒழித்துப் பணிவை மேற்கொள்ளுவதும் விவேகமாகும். அய்யா அவர்களின் வாழ்க்கையில் இத்தகைய விவேகம் நிறைந்திருந்தது. அவர்களின் வாழ்க்கை. அனைவரும் பின்பற்றும்படி விவேகம் நிறைந்த வாழ்க்கையாக அமைந்திருந்தது.

---

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்

— *திருக்குறள்*

---

# 20. தலைமைக் குணம்

மக்களை, சமுதாயத்தை, நாட்டை வழிநடத்திச் செல்லும் தலைவர்கள் தூர நோக்கும், துணிவும், தெளிவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் குறிக் கோள்கள் யாவை என்று திட்டவட்டமாகத் தெரிந்தவர் களாகவும் ஆக்கச் சக்தியோடு செயல்புரியும் ஆற்றல் உடை யவர்களாகவும் இருத்தல் வேண்டும். அனைவரிடமும் அன்பு கொண்டு அவர்களைக் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும். சிறந்த தலைவர்கள் என்று நாம் கருதுபவரிட முள்ள குண நலன்கள் யாவை? ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தனைச் செறிவுடன் செயல்படுவது, தன்னடக்கம், அன்பு, அறிவு, ஆற்றல், நிர்வாகத்திறன் ஆகியவையாகும்.

தம் ஈடுபாட்டினால் அனைவரையும் தங்கள் பால் கவரும் தன்மை, தம் எண்ணத்தால், நோக்கால், மற்றவர் களை உயர்த்துதல் ஆகியவை தலைமையின் தலையாய பண்பு. இரண்டாவது பண்பு தன் குறிக்கோள்களை மற்ற வர்கள் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்குத் தெளிவுறுத்தி அவர்களை தன்வயமாக்குதல். மூன்றாவது பண்பு, நிறுவனத்தின் தலைவருக்கு நம்பிக்கை மிகவும் முக்கியம், அதற்குத் தம்முடன் உழைப்பவர்கள் நம்பிக்கைக்கு உரியவராக நேர்மையுடன் ஒத்துழைப்பதற்கேற்ற சூழ் நிலையை அமைக்க வேண்டும். ஊழியர் தலைவர் நம்பும்படி நடந்து கொள்ள வேண்டும்.

நான்காவது பண்பு, தன்னைத், தன் திறமைகளை நன்குணர்ந்து அவற்றைப் பயன்படுத்தி நிறைவு காணுதல், தமது ஆற்றலை உணர்ந்து அவற்றை வலுப்படுத்துதல்,

தமது குறைகளைத் தெரிந்து அவற்றை நீக்குதல் என்ற இயல்புகளுடைய தலைவருக்குத் தோல்வியென்றால் என்ன வென்றே தெரியாது. தோல்வி நேர்ந்தாலும் தடுமாற்றம் அடையாமல் அதனையும் வெற்றிக்கு அடிப்படையாக்கிக் கொள்ளுவார்கள்.

இத்தகைய பண்புகளைக் கொண்ட தலைமையில் செயல்படும் நிறுவனம் அல்லது அமைப்பில் உள்ள யாவரும் ஒற்றுமையுடன் உழைப்பார்கள். ஒன்று சேர்ந்து திறமை யுடன் உழைக்க முன்வருவார்கள். அத்தகைய தலைமையில் ஒவ்வொருவரும் முக்கியமானவர்களே. அத்தகைய உணர் வுடையோர் தங்கள் பணியில்லாமல் நிறுவனம் வெற்றி பெற முடியாது என்ற நம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள். அது மாத்திரமில்லாமல் கல்விக்கும் திறமைக்கும் மதிப்பு அதிகமிருக்கும். அதனால் தாங்கள் சமுதாயத்தின் அங்கம் என்று பெருமை கொள்ளுவார்கள். தாங்கள் செய்யும் பணி உற்சாகத்தை அளிப்பதை அறிவார்கள். அவர்கள் செய்யும் பணியில் தரம் நிறைந்து இருக்கும்.

அமரர் அய்யா அவர்கள் சிறந்த தலைமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கினார்கள். அவர்கள் சிறந்த தலைமைப் பண்புகளை நாளும் வெளிப்படுத்தி வந்தார்கள். சாதாரண நபர்களைத் தேர்ந்தெடுத்துத் தம் சிறந்த தலைமையினால் அவர்களை ஆற்றல் மிக்கவர்களாக, அசாதாரண மனிதர்களாக்கினார்கள். திரு பெரியசாமி தூரன், திரு க. அருணாசலம், டாக்டர் மு. அறம், டாக்டர் குழந்தை வேல் ஆகிய பலர் அதற்கு உதாரணம்.

அய்யா அவர்களுக்குத் தம் நிறுவனங்களின் உயர்வில் தெளிந்த தொலை நோக்கும் குறிக்கோள்களும் இருந்தன. அவற்றை நிறுவனத்தில் பணியாற்றுவோருடன் பகிர்ந்து

கொண்டு அவர்களுக்கும் அரிய சாதனைகளைச் செய்யும் ஆர்வத்தை ஊட்டி வந்தார்கள். சாதாரணமான வித்யாலயத் தொண்டர்களைத் தம் பாரபட்ச மற்ற முன்மாதிரியினால் திறமையுடன் செயல்படப் பயிற்றுவித்தார்கள். ஏனெனில் காரியம் நன்றாக முடியத் தூண்டிய ஆர்வத்தினால் எல்லை யற்ற சக்தியைப் பெற்றிருந்தார்கள். அதைத் தம்முடன் உழைப்பவர்கள் அனைவருக்கும் கொடுத்தார்கள்.

மனிதன், மனிதனாக உயர நல்ல எண்ணங்கள் வேண்டும். பாரதியாரும், 'நல்லவே எண்ணல் வேண்டும்' என்கிறார். நல்ல எண்ணங்களைச் செயல்படுத்த மனிதர் களை மனிதர்களாக மதிக்கும் பண்பு வேண்டும். இப்பண்பு அய்யா அவர்களிடம் மிகுந்திருந்தது. அய்யா அவர்கள் - வித்யாலயமாகட்டும், சாரதாலயமாகட்டும் - பார்க்கின்ற அனைவரிடமும் முதலில் கேட்பது ''நல்லா இருக்கியாப்பா? சௌக்கியமாப்பா?'' என்பதுதான். இச்சொற்களைக் கேட்டவுடனேயே கேட்பவர் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியால் பொங்கித் ததும்பும்.

சிறு வயதிலேயே தலைமைப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவர்கள் பெருந்தியாகத்தினாலேயே உயர்ந் துள்ளனர். இளமை என்பதனைவிடச் செயல்திறன்தான் ஒருவனைத் திறனுடையவனாக்குகிறது. இதனைக் கரிகால் பெருவளத்தான் இயற்றிய கதை இயம்பும்.

''உரை முடிவு காணான் இளமையோன் எனும்
நரைமுது மக்கள் உவப்ப சொல்லால்
முறை செய்தான் சோழன் குலவித்தை
கல்லாமல் பாகம் பாடும்''.

எனவே வல்லவன் என்பது இளையவன், முதியவன் என்பதால் மட்டும் முடிவு செய்யப்படுவதல்ல. மாணவராக இருந்த பொழுதே நாட்டுப்பற்று மிக்கவராய்

காந்தியத் தொண்டராய் விளங்கினார். வித்யாலயத்தையும் சாரதாலயத்தையும் தோற்றுவித்துத் தலைமைப் பொறுப்பில் இருந்து திறம்பட நடத்தி வந்த அய்யா அவர்கள் என்றும் தியாகச் சுடராகத் தலைமை வகித்தார்கள்.

தலைமைப் பொறுப்புடையவர், மக்கள் மேல் பரிவு கொண்டவராக திறமையுடையோரை வாழ வைப்பவராக இருக்க வேண்டும். இதற்குச் சான்றாகப் புறநானூற்றுப் பாடலொன்று விளக்குகிறது.

''பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்கைத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கித் தனையே

என்பது அதியமான் நெடுமானஞ்சி பற்றிய ஔவையின் கூற்று. தான் வாழ்வதனைவிடப் புலமை வாழ்வதனை விரும்பிய தலைவன் அஞ்சி.

''இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே''

என்றார் பெருஞ்சித்தரனார். சான்றோர் பண்பு இதுதான். அய்யா அவர்கள் தங்களுக்காக எதையும் வைத்துக் கொள்ள வில்லை. எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்தார்கள்.

தலைமைப் பண்புடையவர்கள் தகுதியுடையவர்களைத் தான் தலைமை ஏற்கச் செய்வார்கள்.

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்''

என்ற திருக்குறளுக்கேற்ப சிறந்த தொண்டர்களை அய்யா அவர்கள் உருவாக்கினார்கள்.

தலைமைக் குணம் கொண்டவர்கள் எளிமையோடு இருப்பார்கள். அய்யா அவர்கள் காட்சிக்கெளியவராக, கடுஞ்சொல் இல்லாதவராக, எளிமையும் இனிமையும் உடையவராக விளங்கினார்கள். அதனால் அறிவிலும், விவேகத்திலும், உறுதியிலும், உயர்ந்து நிற்கும் உத்தமத் தலைவராக விளங்கினார்கள்.

செய்யும் காரியங்கள் அனைத்தும் மிகச் சிறப்பாக நேர்த்தியாக இருக்க வேண்டும் என்பதை அனைவருக்கும் காட்டினார்கள். அவர்கள் ஆண்டவனின் கைங்கரியமாக மேற்கொண்டிருந்த கல்வியெனும் மனித மேம்பாட்டு முயற்சியில் காட்டிய ஈடுபாடு மகா பெரிது. அர்ப்பணமும், அன்பும் அய்யா அவர்களின் உடன் பிறந்த குணங்களாக இருந்தன. தலைமைக்கு வேண்டிய பண்புகளையெல்லாம் ஒருங்கே பெற்று வழி நடத்திய அய்யா அவர்களின் நிறுவனங்கள் பன்னெடுங்காலம் தழைத்து ஓங்கும்.

---

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

— திருக்குறள்

---

T4.44136 AVI
31N5
INSTITUTE ... DEEMED UNIVERSITY ... HIGHER ...
108914
LIBRARY

# 21. அழகு உணர்வு

அன்பு, உண்மை, நேர்மை, போன்ற பண்புகளைப் போல அழகும் ஒரு உயர்ந்த பண்பு ஆகும். முருகன் என்பதற்கு அழகு என்று பொருள். இராமன் என்றால் தனது நற்குணம் நற்செயல்களால் எல்லோரையும் பிரமிக்க செய்யும் பேரழகு வாய்ந்தவர் என்று காட்டினார் கவிச் சக்ரவர்த்தி கம்பர். கவின்மிகு காடு அழகுடையது. உண்மையும் அழகும் ஒன்றே ஆகும். ஆன்மீகத் தன்மையுள்ளது. அழகை, அழகுப் பொருட்களிலும். வெளித் தோற்றத்திலும் கூடக் காணலாம். உண்மை, உள்ளத்தோடு தொடர்புடையது. அழகோ வடிவங்கள், வர்ணங்கள், கட்டமைப்புகளில் வெளிப் படுகிறது. உண்மை நல்ல செயல்பாடுகளில் வெளிப்படுகிறது.

ஒரு சாதாரண நபருக்கு அழகானது, வடிவம், உருவம், வர்ணங்கள் ஆகியவற்றிலும், அவற்றால் ஆக்கப்படும், தொட்டுப்பார்க்கக் கூடிய பொருட்களிலும் அடங்குகிறது. உதாரணமாக ஒருவருக்கு, ஓவியம் (Painting) அழகாக இருக்கலாம். ஆனால் அது உண்மையாகவும் இருக்கக்கூடும் என்பது ஐயப்பாட்டுக்குரியது. அதேபோல் ஒரு சிற்பம் ஒப்பற்ற அழகுடன் அமைந்திருக்கலாம். ஆனால் அதில் ஆன்மீகம் உள்ளதா என்பது கேள்விக்குரியது. இசையும், கவிதையும் பேரழகுடன் பொலிவுற்று விளங்கலாம். ஆனால் அவற்றில் தெய்வீகம் இல்லாமல் போய்விடலாம். ஆகவே உண்மையான அழகு என்பது கண்களுக்கும், உள்ளத்திற்கும் ஒருங்கே பேரானந்தத்தைத் தருவதாகும். அழகின் வெளிப்பாட்டில் கற்பனைத் திறன் வெளிப்படும். அழியாத அழகு, வடிவம், நிறம், சொற்கள் ஆகியவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. வாழ்க்கையுடன் ஒன்றி வாழ்வை வனப்புறச் செய்வது. அத்தகைய அழகைத்தான் அமரர் அய்யா அவர்கள் வாழ்ந்து விளக்கினார்கள்; பாராட்டினார்கள்.

இயற்கை மணமும், மாறா இளமையும், கடவுள் தன்மையும், அழியா அழகும் கொண்ட இறைவனுக்கு முருகன் என்று பெயரிட்டழைத்தனர் பாண்டிய நாட்டு மக்கள் தங்கள் 'ஆலவாய் அவிர்சடைக் கடவுளை'ச் சொக்கன் எனப் பெயரிட்டனர்.

திருமாலிருந்சோலையில் எழுந்தருளியுள்ள இறைவன் அழகன் என்றே அழைக்கப்பட்டான்.

''அழகனே ஆலவாயில் அப்பனே
அருள் செய்வாயே''

என்று அப்பரும்

''தக்கன் வேள்வி தகர்ந்தருள்வாய் ஆலவாய்
சொக்கனே அஞ்சல் என்றருள் செய்யெனை''

என்று திருஞானசம்பந்தரும் திருவாய் மலர்ந்தருளியதை நோக்க வேண்டும். இயற்கை வழி இறைவனைக் கண்டு, இன்பம் துய்த்து, அழியாத வாழ்வு பெற்ற அடியார்கள் அஞ்சாத ஞான வீரர்களானார்கள்.

இக்காலத்தில் ஆண்களும், பெண்களும் செயற்கையாக அழகுபடுத்திக் கொள்ளுவது வழக்கமாகிவிட்டது. ஆனால் அது உண்மையான அழகல்ல; அழியாதக் கல்வியைக் கற்பதே உண்மை அழகு.

'குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு'

எனக் கல்வியால் பெறும் அழகு பற்றி நாலடியார் விளக்குகிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மெய்யழகு மிளிர வேண்டும். வாழ்க்கையின் அழகு, நல்வாழ்க்கையின் மகுடம்

(Crown) ஆகும். இத்தகைய நல்லழகை நாம் பெறும் பொழுது வாழ்க்கை பண்பாட்டின் சிகரத்தை எட்டிப்பிடிக்கும். ஒரு நாட்டின், தனிமனிதனின், சமுதாயத்தின் தனித் தன்மையை (greatness) அளப்பது அழகாகப் பிரதிபலிக்கும் நாகரிகச் சிறப்பே ஆகும்.

அழகு நிறைந்த வாழ்க்கையில் சுத்தமும், அகப்புறத் தூய்மையும் ஓங்கி இருக்கும். அதன் மூலமாகத் தனிக் குடும்பத்திலும், சமுதாயத்திலும் அழகுணர்ச்சியும், அமைதியும், சமாதானமும், ஒப்புரவும் பெருகும். மலைகள், ஆறுகள், செடி கொடிகள், வானம், காடு, பயிர், பறவைகள் இயற்கையின் அழகைக்காட்டும் அனைத்திலுமுள்ள அழகை ரசிக்க முடியும். அழகுணர்வு மனித மனத்தைப் பண்படுத்தக் கூடியது.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் ஒரு கவிதையில் ''குழந்தாய், நான் உனக்கு பலவர்ண விளையாட்டுப் பொருட்களைத் தரும்பொழுது, மேகங்கள், தண்ணீர், பூக்கள் ஆகியவை, எழில்மிகு வர்ணங்களால் ஆக்கப்பட்டுள்ளன என்பதை நினைவு கூர்கிறேன்'' என்று எழுதினார். அழகின் வர்ணிப்பு இதைவிடச் சிறப்பாக அமைய முடியாது.

அமரர் அய்யா அவர்களின் வாழ்க்கையில் எங்கும், எப்பொழுதும் உள்ளத்தின் அழகு பிரகாசித்தது. தூய வெள்ளைக் கதராடை, நன்றாகச் சுத்தப்படுத்தி அழகாக வைக்கப்பட்டிருந்த அறை, சாப்பிடும் இடம், படுக்கை, மலர் அலங்காரம் ஆகிய அனைத்தும் அழகைக் காட்டின.

பலவர்ண வாசனைப் பூக்கள் மேல் அய்யா அவர்களுக்கு அபார விருப்பம். அவற்றை முகர்ந்து முகர்ந்து பார்த்துப் பார்த்து மகிழ்வார்கள். வித்யாலயத்திலும்,

சாரதாலயத்திலும் உள்ள ஆலயங்களில் பூசை செய்யும் இடத்தில் விதவிதமான மலர் அலங்கரிப்புகளுடன் ஸ்ரீ இராம கிருஷ்ணர் அன்னை சாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர் உருவங்களில் அழகான பூக்களை வைத்து ஆராதிப்பார்கள். அப்பூக்களை நமக்களித்த ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்பார்கள். ''அன்னை சாரதா மணியைப் பாருங்கள், அவர்களிடம் உலகோர் காணும் அழகோ, ஆடம்பரமோ இருக்கவில்லை. அவர்களுடைய அக அழகினால் உலகமோ அவர்களைத் தாயாக வணங்கி வருகிறது. அத்தகைய தூய்மையான அழகைத்தான் நீங்கள் பெறவேண்டும்'' என்று மாணவியருக்கு அடிக்கடிக் கூறுவார்கள்.

கையெழுத்து அழகாக இருக்க வேண்டும். அது உள்ளத்தின் அழகைக் காட்டும் கண்ணாடி என்பார்கள். அய்யா அவர்கள் எழுத்து மணிமணியாக இருக்கும். நல்ல கையெழுத்து உள்ளவர்களை மனதாரப் பாராட்டுவார்கள். குழந்தைகளின் முகங்களில், அவர்களின் புன்னகையில் பேரழகைக் காண்பார்கள். கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தைகளின் சிரிப்பில் உண்மையான அழகைக் கண்டு பூரித்தவர்கள். அய்யா அவர்கள் கூட்டத் திற்கு வரும் பொழுதெல்லாம் அழகிய ரோஜா மலரைப் பெற்று அதனை அணிந்து கொள்ளுவதில் பெருமிதப்படு வார்கள். ''ரொம்ப அழகாக இருக்கிறது'' என்று சொல்லிப் பாராட்டுவார்கள்.

அன்பு, இரக்கம், பக்தி, பிறர் நலம் கொண்ட உள்ளத்தை இறைவன் விரும்பி வாழும் இல்லமாக்கி அவ் வழகில் ஈடுபட வேண்டுமென விரும்புவார்கள் அய்யா அவர்கள். வாழ்க்கையில், நினைவில், பேச்சில், சொல்லில் அழகை வழங்கிய அய்யா அவர்கள் நினைவுடன் அழகைக் காண்போமாக.

# 22. காலம் தவறாமை

'பாரத நாடு பழம் பெரும் நாடு. நீரதன் புதல்வர். இந்நினைவகற்றாதீர்' என்ற குறிக்கோளும் 'எத்தனை ஜென்மங்கள் பிறந்தாலும் இந்திய மண்ணிடையே தோன்ற வேண்டுமென்ற' பெரு வேட்கையும் கொண்ட அய்யா அவர்கள், நாட்டிற்காகவும், கல்விக்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து அரும்பாடுபட்டு வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்த சிறந்த குணங்களில் காலந் தவறாமையும் ஒன்றாகும்.

மனிதன், மனிதனாக வாழ்ந்து பல்லோர் போற்றும் உயர் நிலை அடைய, குறிக்கோளுடன், நினைத்த காரியத்தை முடிக்கும் திண்மையுடன் காலந்தவறாது கடமையாற்ற வேண்டும். மேல் நாட்டினர் காலந்தவறாமை என்னும் பழக்கத்தைப் பெருமையாக நினைத்துச் செயல் படுகிறார்கள். அண்ணல் காந்தியடிகள், தம் வாழ்நாள் முழுவதும், தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தபோதும் இந்தியா திரும்பிய பிறகும் இந்த நற்பழக்கத்தைக் கடைபிடித்தார்கள். அண்ணல் காந்தியடிகளின் அடியொற்றி வாழ்ந்த அய்யா அவர்களும் காலந் தவறாமையைக் கண்ணெனப் போற்றி வாழ்ந்து வந்தார்கள். தான் பங்கு கொள்ளும் எந்த நிகழ்ச்சிக்கும், 5 நிமிடங்கள் முன் கூட்டியே வந்துவிடுவார்கள்.

அய்யா அவர்கள் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய செயல்களைக் கவனத்துடன் குறிப்பெழுதி, அவ்வாறே செய்து வந்தார்கள். அய்யா அவர்களின் கல்வி நிலையங்களில் பணிபுரிகின்றவர்களைப் பார்க்கும்பொழுது, அவர்களுக்குக்,

குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி அந்த நேரத்தில் தவறாமல் அவர்களைப் பார்ப்பார்கள். ஆசிரியர்களுக்கு ஏதேனும் பொறுப்பளிக்கும்பொழுது, அதனை இத்தனை நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டும் என்று கூறி, அதே நேரத்தில் செய்து முடிக்க ஊக்கமளிப்பார்கள்.

அய்யா அவர்கள் சாரதாலயா கல்வி வளாகத்திற்கு தினமும் மாலையில் நான்கு மணிக்கு வருவார்கள். அவர்களின் கார் வளாகத்தின் வாசலில் நுழைந்தாலே நான்கு மணி என நாங்கள் கடிகாரத்தைப் பார்க்காமலே சொல்லிவிடுவோம். ''நான் என் குறித்த நேரத்திற்கு கால்மணி நேரம் முந்தியே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கி யுள்ளது'' என்றார் நெல்ஸன். அய்யா அவர்களும் எக் காரியத்திற்குச் சென்றாலும், விழாக்களுக்கோ, அல்லது கூட்டங்களுக்கோ செல்லும்பொழுது, குறித்த நேரத்திற்குச் சென்று விடுவார்கள்.

காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பதை நன்குணர்ந்த அய்யா அவர்கள், எங்கள் மாணவி களைப் பார்க்கும்பொழுது, காலத்தின் அருமையை எடுத் துரைப்பார்கள். 'ஒன்றே செய், அதனை நன்றே செய்; அதனை இன்றே செய்' என்று கூறி, 'சென்ற காலம் நமக்குத் திரும்பி வராது. எனவே ஆண்டவன் நமக்கு அளித்திருக்கிற நேரம் என்ற செல்வத்தை, அது அளிக்கும் அரிய வாய்ப்பு களை வீணாக்காது, ஒவ்வொரு மணித்துளியையும் பயன் படுத்த வேண்டும்' என அறிவுறுத்துவார்கள். 'பொன்னை இழந்தால் அதைத் திருப்பி சமாளித்துக் கொள்ளலாம். பணத்தை இழந்தாலும் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் காலத்தை இழந்து விட்டால் அதனை மீண்டும் பெற முடியாது' என்று கூறி அவரவர் கடமைகளை அன்றன்றே செய்து முடித்துவிட வேண்டிய கட்டாயத்தை எழுதிக் காட்டுவார்கள்.

அய்யா அவர்கள் அரசியலில் ஈடுபட்டிருந்த காலத்திலும், அமைச்சராக பொறுப்பேற்ற பொழுதும், கல்வி நிலையங்களை உருவாக்கிக் கண்போல் காத்து வந்த போதிலும், தன்னைக் காணவருகின்றவர்களுக்கு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி, அந்த நேரத்தில் பார்த்து முடிக்கும் பண்புடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.

தம் அன்றாட வாழ்க்கையில் கூட, ஒவ்வொரு செயலுக்கும் காலத்தைத் திட்டமிட்டுத் தவறாது செய்து,

'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து'

என்னும் திருக்குறளுக்கேற்ப வாழ்ந்து வெற்றி கண்டு வழி காட்டினார்கள்.

நிகழ்ச்சிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் செல்வதன் காரணமாக, தனக்காக யாரும் காத்திருக்கக்கூடாது, அப்படிக் காக்க வைத்தால் எத்தனை பேருடைய மணி நேரம் வீணாகும் என்று எண்ணியவர்கள். குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குள் சென்று செய்ய வேண்டிய செயலை செய்து முடித்துவிட்டுக் காலத்தை விரயமாக்காமல் திரும்புவார்கள்.

நம் நாட்டு மக்கள் காலந்தவறாமையைக் கடைப் பிடிக்கவில்லையே என்ற வேதனை அய்யா அவர்களுக்கு இருந்தது. மாணவிகளிடம் பேசும்பொழுது, மேலை நாட்டினர் 'Indian Standard Time' என்று ஏளனமாகப் பேசுவதைச் சுட்டிக்காட்டி ''எதிர்கால இந்தியாவை உருவாக்கும் நீங்களாவது குறிப்பிட்டக் காலத்தில் செயல்களைச் செய்து முடிக்க வேண்டும்'' என்பார்கள்.

''வாழ்க்கையை வளமாக்க வேண்டுமானால் காலத்தைக் கண நேரமும் வீணாக்கக் கூடாது. காலத்தால் செய்யப் பட்டதுதான் வாழ்க்கை'' என்பார்கள்.

மாணவிகளைச் சந்தித்துச் சிந்திக்க வைக்கும் அய்யா அவர்கள் ஆன்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கூறுவார்கள். காந்தியடிகளிடமுள்ள காலந்தவறாமையைச் சுட்டிக்காட்டும்பொழுது, கடுமையாக இரவும் பகலும் விடுதலைக்காகப் பாடுபட்ட பொழுதும், நாடெங்கிலும் சுற்றி அலைந்து கொண்டிருந்த பொழுதும், கடமைகளை உரிய காலத்தில் செய்யும் வல்லமை படைத்த காந்திஜி, எவ்வளவு காலந் தாழ்த்தித் தூங்கச் சென்றாலும், அதிகாலையில் நான்கு மணிக்கு எழுந்து தியானம் செய்வார் என்பதை விளக்கிக் கூறி நாமும் காலந்தவறாமையைக் கடைப்பிடித்து நல்லவை செய்வதற்கு நாட்டம் கொண்டவர்களாய்த் திகழ வேண்டுமென்பார்கள்.

பிறருக்கு நன்மையை நல்கும் காலந்தவறாமையைக் கடைப்பிடித்து வாழக் கற்றுக்கொள்வோம்.

---

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

— *திருவள்ளுவர்*

---

# 23. சிந்தனைத் திறன்

ஆழ்ந்த சிந்தனை செய்யும் திறன் அனைவருக்கும் இருப்பதில்லை. சிந்திக்கும் திறனைப் பெறுவதற்குச் சிறு வயதிலிருந்தே பயிற்சியும், மனத்தை ஒருமுகப்படுத்தும் வன்மையும், சாதிக்க முனையும் மன உறுதியும் வேண்டும். சாதாரண மனிதனுக்கு அவனை அறியாமலேயே அவனுடைய மனதில் அன்றாட உணவு, உடை ஆகியவை பற்றிய எண்ணங்கள் அலைமோதுகின்றன. அதிலும் வறுமையில் உழலும் குடும்பங்களில், இத்தகைய கவலைகள் உறவுகளைப் பாதித்து மன அமைதியைக் குலைக்கின்றன. சில நேரங்களில் இக்கலக்கங்களால் குழப்ப நிலை உண்டாகிறது. எண்ணங்களும் தாறுமாறாகச் சிதறிவிடுகின்றன. பக்தியுள்ளம் படைத்த சிந்தனைத் திறனால் தொலை நோக்குச் சக்தியைப் பெறுகிறார்கள். மன ஒருமுனைப்பு, தியானம், மௌன விரதம், வழிபாடு முதலிய பயிற்சிகள் மூலமாகப் பெறும் சக்தி, அவர்களுக்கு உறுதியான, தெளிவான மன நிலைகளைத் தருகின்றன.

மனிதனுடைய எண்ணங்கள் சில நல்ல அடிப்படையில் எழுகின்றன; பல தவறான அடிப்படையில் ஏற்படுகின்றன. தவறான அடிப்படையில் எழும் எண்ணங்கள் மனித மனத்தின் தெளிவைச் சீர்குலைக்கின்றன. தொடர்ந்து ஆழ்ந்த சிந்தனைகளால், அவற்றை மாற்றியமைத்துச் சீராக்கி வளப்படுத்திக் கொள்ள வேண்டும். விசாரம், மௌனம், தியானம் இம்மூன்றுவிதப் பயிற்சிகள் மூலமாகத் தெளிவான எண்ணங்கள் தோன்றும் வகையில் செயல்பட வேண்டும். அப்படிச் செய்தால் உள்ளத்தில் தெளிவு உண்டாகும்.

வேகமாக மாறிக் கொண்டு வரும் இந்தக் காலக் கட்டத்தில், புறச்சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள், தொலைக்காட்சி, திரைப்படம், வீடியோ, பத்திரிக்கைகள் முதலிய சாதனங்களின் பாதிப்புகளின் நடுவே சுதந்திரமாகச் சிந்திக்கிறவர்கள் வெகு சிலர் தான் இருக்கிறார்கள். பெரும்பாலோர்க்கு நற்சிந்தனை என்பது என்னவென்றே தெரிவது இல்லை. நற்சிந்தனைக்குகந்த அமைதி, பொறுமை, கட்டுப்பாடு பொருந்திய மனப்பக்குவம் இல்லாததால் அவர்களுடைய சிந்திக்கும் திறன் மேலெழுந்த வாரியாக இருக்கிறது. ஆழ்ந்த சிந்தனைக்கு இடைவிடாத பயிற்சி தேவை.

உண்மையுள்ளமும், ஒழுக்கமும் உடையவரிடமிருந்து தான் சக்தி வாய்ந்த எண்ணங்கள் வெளிவருகின்றன. சாதனையால், கோபத்தையும் மற்ற தீய எண்ணங்களையும் அடக்கிய மனம், அபார சிந்தனை சக்தி வாய்ந்ததாகிறது. மிகவும் சக்தி வாய்ந்த ஒரு யோகி ஒரு வார்த்தை சொன்னாலும் கூடப் பிறர் மனத்தில் ஆழப்பதியும் உணர்வை அவனது சக்தி தூண்டி விடும்.

சுதந்திரமான சீரிய சிந்தனையை ஞானிகளிடம் தான் காண முடியும். ஆன்மீக சாதனைகளுக்குக் கூரிய புத்தி வேண்டும். கடுமையான தவம், தெளிவான சிந்தனை, எந்த பிரச்சினையையும், அதன் வேரினைத் தேடிக்கண்டுபிடித்துச் சிந்திப்பது, எந்த சூழ்நிலையையும் அதன் அடித்தளம் வரை ஆராய்வது, எல்லா எண்ணங்களின் மூல காரணத்தை ஆராய்வது ஆகிய இவையே நற்சிந்தனைகளை வளர்ப்பதற்கான வழிமுறைகளாகும்,

எண்ணம் ஒரு மாபெரும் சக்தி. இவ்வரிய சக்தியை மிக உயரிய வழியில், சிறந்த பலனைத் தரும் வகையில்,

பயன்படுத்தத் தெரிந்து கொள்வது இன்றியமையாத தேவையாகும். நல்ல புதியதோர் உயர்ந்த எண்ணம் தோன்றும் பொழுது, பழைய பொருளற்ற எண்ணங்கள் எவ்வளவு வலிமையுடையதாக இருந்தாலும், அதைக் களைந்தெறிந்து விட வேண்டும். தியானப் பயிற்சியின் மூலம் சிந்தனையில் தெளிவைச் சாதித்து விடலாம்.

> ''அன்பறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
> நன்குடையான் கட்டே தெளிவு''.

என்ற திருக்குறள்படி அன்பு, அறிவு, கலங்காமை, பற்றில்லாமை ஆகிய நான்கும் உள்ளவர்களிடம் தான் தெளிவு காணப்படும். இந்தநான்கு குணங்களும் சிந்தனைத்திறம் அதிகரிக்கும் போது கிடைக்கின்றன. இவ்வரிய சிந்தனை என்ற ஆற்றல், அமரர் அய்யா அவர்கள் வாழ்க்கையில் ஒளி விட்டு வீசியது. அந்த ஒளியின் சூழ்நிலையில் இருந்தவர்களுக்கும், தெளிந்த சிந்தனை பெறும் வரம் கிடைத்தது. தெளிந்த சிந்தனையுள்ளவர்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார்கள். அய்யா அவர்களின் பேச்சிலும், எழுத்திலும், தம் தெளிந்த எண்ணங்களைத் தெளிவாகப் பிறர்க்குத் தெரிவிக்கும் திறமை (Communication ability) வியத்தகு அளவில் விளங்கியது. தினமும் தனது நாட்குறிப்பு ஏட்டில் அன்றாடம் செய்ய வேண்டிய வேலைகள் ஒவ்வொன்றையும் அது யாருக்கு, எதற்கு, யார் மூலமாக எப்பொழுது, எங்கு செல்ல வேண்டும் என்ற விபரங்களுடன் தெளிவாகக் குறித்து வைத்துக் கொள்வார்கள். ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட ஊழியர்களுடன் அவற்றைப் பற்றிப் பேசிப், பேசியதன் முடிவுகளையும் தெளிவாகக் குறித்துக்கொள்ளுவார்கள். தெள்ளத் தெளிந்து, திட்டமிட்டு, ஆக்கப்பூர்வமாகச் செயல் பட்டதனால் தான் வெற்றிமேல் வெற்றி கண்டார்கள்.

தினமும் காலையில் இறைவழிபாடு முடிந்ததும், ஆல மரத்தடியில் அமர்ந்து தேவாரம், திருவாசகம், திருக்குறள், அருட்பா ஆகியவற்றைப் படித்து ஆழ்ந்து சிந்தித்த பிறகு தான் மற்ற வேலைகளைச் செய்யத் தொடங்குவார். ஒரு நாளின் பணிகளை ஏற்றபுடன் ஆற்றுவதற்குத் தேவையான ஆன்மீக உள்ளுணர்வை இதன் மூலம் பெற்றார்கள் போலும்,

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'
'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்'

என்ற வள்ளுவர் வகுத்த வாழ்க்கை இலக்கணத்திற்குத் தம் வாழ்க்கையையே இலக்கணமாக்கிக் கொண்ட சான்றோர் அய்யா அவர்கள்.

'தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்'

ஆய்ந்து தெளியாது செயலில் ஈடுபட்டால் பழி வரும் என்று அறிஞர் அஞ்சுவர் என்ற குறளுக்கு ஏற்ப, எந்த ஒரு முயற்சி யையும் ஆரம்பிப்பதற்கு முன்பு, அய்யா அவர்கள் சக ஊழியர்களை அழைத்து கலந்துரையாடி அவர்களுடைய யோசனைகளை அறிந்து, ஆய்ந்து முடிவெடுத்துச் செயல் படுவார்கள்.

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும''

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றுக்கேற்ப அய்யா அவர் களிடம் தெளிந்த நல் அறிவும் 'திண்ணிய நெஞ்சமும்' செய லாற்றலும் ஒருங்கே அமைந்திருந்தன. ஆகவே அவர்கள் எண்ணியவை அனைத்தும் அவர்கள் எண்ணியபடி மட்டு மல்ல எண்ணியதற்கும் மேலாக - சிறப்பாக வெற்றியைக் கொடுத்து அவர்களுக்கு மன நிறைவையும் அளித்தன,

# 24. கடமையாற்றுதல்

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் கடமையுணர்வு உடையவராய் இருத்தல் வேண்டும். கடமையில் கண்ணுங் கருத்துமாய் இருப்பவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்யவரிய சான்றோர்களாய்த் திகழ்கிறார்கள். தம் கடமையாற்றாது இருக்கின்றவர்கள், சிறியோராய்க் கருதப் படுகிறார்கள். கடமைகளைத் தனக்காக அல்லாது பிறருக்காக ஆற்றும்பொழுது தெய்வநிலையை அடைகி றார்கள். எல்லோராலும் புகழப்படுகிறார்கள்

வாழ்க்கையில், கடமையைச் சரிவரச் செய்யும்போது அச்சத்திற்கு இடமேயில்லை. அங்ஙனம் செய்பவர்களுக்குக் கடமையின் கோடு நேர்க்கோடாகத் தான் இருக்கும். பொறுப்புணர்வுடன் கடமையாற்றுகின்றவர்கள் பயனற்ற செயல்களுக்காக நேரத்தை வீணாக்கமாட்டார்கள். மானுடப் பிறவியெடுத்த மனிதனின் கடமை, தெய்வத்திற்கு அஞ்சி, அவன் கட்டளைகளுக்குச் செவி சாய்த்துக் கீழ்ப்படிந்து நடப்பதேயாகும்.

அய்யா அவர்கள் வாழ்க்கை முழுவதும் கடமையாற்றிக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளோடு பணியாற்றினார்கள். அவர்கள் காலையில் எழுந்தது முதல் இரவில் படுக்கச் செல்லும் வரை திட்டமிட்டு, அதன்படி செய்து வந்தார்கள். அவர்கள்,

''செய்தல் உன் கடனே — அறம்
செய்தல் உன் கடனே — அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே''

என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப, அறம் செய்வதையே தம் கடமையாகக்கொண்டு செயலாற்றினார்கள்.

உரிமைகளின் உண்மையான மூலம் கடமைகளேயாகும். அய்யா அவர்கள் ஆசிரியர்கள், மாணவிகளைப் பார்த்து அவர்களோடு உரையாடும் பொழுது பல கருத்துக்களை அவர்கள் மனத்தில் பதிய வைக்கும் வல்லமை படைத்தவர்கள். ''உன் கடமையை ஆற்று. ஏற்படும் விளைவில் இன்பம் காண். ஆனால் செய்யும் போதும், அதன் பலனை ரசிக்கும் போதும் இறைவனைக் கூர்ந்து போற்ற ஒரு போதும் மறந்து விடாதே'' என்று அடிக்கடி அறிவுரை கூறுவார்கள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஐரோப்பாவில் வாழ்ந்த சகோதரர் லாரென்ஸ் (Brother Lawrence) துறவிகள் மடத்தில் (Monastery) அடுக்களையில் பணிபுரிந்த பொழுது, உணவு தயாரிப்பதைக் கீழான வேலை என்று மற்றவர்கள் நினைத்தாலும் அவர் அதைப் புனித வழிபாடு என்று ஏற்று எப்படித் திறம்படத் தமது வேலையைப் பொறுப்புடனும், அன்புடனும் செய்தார் என்ற சான்றை அய்யா அவர்கள் பொருத்தமுடன் எடுத்துக்காட்டுவார்கள். சாரதாலய வளாகத்தில் துப்புரவு செய்வோர், உணவு தயாரிப்போர், தோட்ட வேலை செய்வோர் ஆகியோர் தத்தம் கடமைகளைச் சிரமம் பாராது, செவ்வனே செய்வதைப் பார்த்துப் பூரித்துப் போவார்கள். அவர்களை மனமாரப் பாராட்டுவார்கள்.

தேசபக்தியும், மொழிப்பற்றும் கொண்ட அய்யா அவர்கள், மாணவிகளைப் பார்க்கும் போது அவர்களுக்குப் பண்புகளை வளர்க்கும் பல செய்திகளைப் புராண இதிகாசக் கருத்துக்களின் வாயிலாகக் கூறுவார்கள். கம்பராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் ஆகியவற்றிலிருந்தும், எட்டுத்தொகை நூற்களிலிருந்தும் மேற்கோள்கள் கூறுவார்கள்.

''ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''

என்று பொன்முடியார் பாடிய புறநானூற்றுப் பாடலை எடுத்துக்காட்டி, வீரத்தோடு கடமையாற்ற வேண்டுமென் பார்கள்.

விருப்பு, வெறுப்பு பாராட்டாது, நோய் நீங்குவதற்கு மருந்து உண்பது போலக் கடமைகளைச் செய்ய வேண்டும். ''கடமையைச் செய்து கொண்டே ஆன்ம ஞானத்தையும் யார் பெறுகிறார்களோ அவர்களே புத்திமான்கள்'' என்று பகவத் கீதை கூறுகிறது. அய்யா அவர்களும் கருமமே கண்ணாகக் கொண்டு கடமையாற்றினார்கள்.

கடமையானது, தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதலாகும். அய்யா அவர்கள் தம் வாழ்க்கையில் இம்மூன்றையும் கடைப்பிடித்தார்கள். ''ஒரு மனிதனுடைய முக்கியமான மூன்று கடமைகள், பகைவனை நண்பனாக்கிக்கொள்ளுவது, துஷ்டனை நல்லவ னாக்குவது, படிக்காதவனைக் கல்விமானாக்குவது'' என்று அடிக்கடி கூறித் தன்னால் இயன்றவரை இக்கடமைகளைச் செய்வதற்கு ஒருவர் முயற்சி செய்ய வேண்டும் என்பார்கள்.

பகவான் இராமகிருஷ்ணரிடம் எல்லையற்ற பக்தி கொண்ட அய்யா அவர்கள், ''ஒருகரம் கொண்டு உன் கடமையை ஆற்று. மறுகரம் கொண்டு கடவுளைப் பற்றிக் கொள்'' என்ற இராமகிருஷ்ணரின் உபதேச மொழிகளைத்

தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து, வழிகாட்டியவர்கள். தம் கடமையைச் செய்து கொண்டே போவதில் கண்ணுங் கருத்துமாய் இருந்தார்கள். அதில் தான் திருப்தி அடைந் தார்கள். கடமைகளைச் சரிவரச் செய்கிறவர்களை உடனே தெரிந்து கொண்டார்கள்.

கடமையைச் செய்யும்பொழுது துன்பங்கள் நேரிடும் பொழுது, அய்யா அவர்களிடம் ''என்னால் இதனைச் செம்மையாகச் செய்ய முடியவில்லையே'' எனக் கூறினால், உடனே அவர்கள், ''உன் கடமையை ஆற்றுவதில் வெயிலையும், குளிரையும் தூக்கத்தையும் கவனியாதே'' என்றும் ''ஜீவகாருண்யம், சுதந்திரம், தியாகம் இம்மூன் றையும் கொண்டு உன் கடமைகளைச் செய். அதனால் சாந்தி பெறுவாய். உன் கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பாய்'' என்றும் கூறுவார்கள்.

1951-ம் ஆண்டில் நான் அமெரிக்க நாட்டிலிருந்து பிஎச்.டி என்ற டாக்டர் பட்டத்துடன் முதல் முதலாக மத்திய அரசில் பணியில் அமர்ந்த பொழுது, காலம் சென்ற எல்.எஸ். கரையாளர், எம்.எல்.ஏ அவர்கள் என்னை பாராளு மன்றத்திற்கு நிற்கும்படிக் கேட்டார்கள். ''அது என்னுடைய துறையான வழியுமல்ல, நான் படித்த படிப்புக்கும், ஆராய்ச்சிக்கும் உகந்தவண்ணம் பணி செய்யத்தான் விரும்பு கிறேன்'' என்று பதில் கூறிவிட்டு அய்யா அவர்களுக்கு இந்த விபரத்தை எழுதினேன். அவர்கள் உடனே, ''நீங்கள் செய்தது தான் சரி, உங்கள் கடமை கல்விப் பாதையில் தான் இருக்கிறது'' என்று சொல்லித் ''தம் கருமம் செய்வார் தவம்'' என்று அடங்கியுள்ள குறளையும் எடுத்துக் காட்டி னார்கள். பிற்காலத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் எங்கள் நிறுவனத்தில் ஒரு விழாவில் பேசியபொழுது ''திருமதி ராஜம்மாள் தேவதாஸ் அவர்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பு அரசியலுக்கு அழைத்தோம். ஆனால் அவர்கள் முடியா

தென்று கல்விப் பணியிலேயே ஈடுபட்டு விட்டார்கள். அது எவ்வளவு நல்ல தீர்மானம். அரசியலிலிருந்து பிறகு விலகிய, விலக்கப்பட்ட மக்கள் போல் விரக்தி அடையாமல் எவ்வளவு அருமையாகச் சேவை செய்து வருகிறார்கள்'' என்று என் முடிவைப் பாராட்டித் திரு அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரியில் பணி செய்வது எவ்வளவு பெருமை தரும் முடிவு என்று புகழ்ந்தார்கள்.

அய்யா அவர்கள் தம் கடமைகளைத் தெளிவுடன், காலவரையரைக்குள் முழுமையாகச் செய்வதில் ஒப்பற்ற உதாரணமாக விளங்கினார்கள். கடைசி மூச்சுவரையிலும் தம் கடமைகளை, எதிலும் குறை வைக்காமல் செய்திருந்த படியால்தான் அவர்களின் மறைவுக்குப் பின்னும் எவ்வித தடங்கலும், தாமதமும் இல்லாமல், நமது கடமைகளை ஒழுங்காக செய்து வர முடிகிறது. கடமையைச் சீராகச் செய்பவர்களிடம் கடவுள் தன்மை வளருகிறது என்பதை அய்யா அவர்களின் அன்றாட வாழ்க்கையில் தெரிந்து கொண்டோம்.

---

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல்.

— *திருக்குறள்*

---

# 25. நகைச்சுவை

உலகில் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்கின்றவர்கள் தான், தன்னலங்கருதாது பிறருக்காக சேவை செய்ய வேண்டுமென்ற பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக விளங்குவார்கள். அத்தகைய சிறந்த தொண்டர்கள் இருப்பதால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

உலகில் செயற்கரிய செய்ய விழையும் பெரியோர்களைச் சார்ந்து பலர் இருப்பார்கள். அப்பெரியோர்கள் தாங்களும், தங்களோடு இருக்கின்ற பலரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென விரும்புவார்கள். மகிழ்ச்சியை அளிக்கக் ,கூடிய குணங்களில் ஒன்று நகைச்சுவையோடு உரையாடி மனம் விட்டுச் சிரித்துச் சிந்திக்க வைப்பதாகும்.

மற்றவர்களை மகிழவைக்கும் நகைச்சுவை, சிரிக்க வைத்துச் சிந்திக்க வைக்கும் நகைச்சுவை, எள்ளி நகையாடல், குற்றங்களை உணர்த்தி மீண்டும் செய்யாத நன்னிலை அடையச் செய்யும் நகைச்சுவை, கள்ளங்கபடமற்ற உள்ளத்திலிருந்து தோன்றும் நகைச்சுவை என நகைச்சுவைகளில் பல விதங்களைப் பார்க்கலாம்.

அய்யா அவர்களின் வாழ்க்கையில் நகைச்சுவை நிறைந்திருந்தது. அவர்கள் தம்மைச் சுற்றியுள்ளவர்களைச் சிரிக்க வைத்துச் சிந்திக்கத் தூண்டுவார்கள். ஒருமுறை அய்யா அவர்களிடம் ''ஒரு வேலையைச் செய்ய முடியவில்லையே'' என வருந்திய பொழுது, நகைச்சுவையுடன் ''அப்படியா அம்மா. அப்படி என்ன பெரிய வேலை?''

என்று சிரிப்புடன் கேட்டார்கள். அந்த நகைச்சுவையுடைய கேள்வியே நாம் விரைவாக செய்து முடிக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொடுத்தது.

சிரிப்பு ஆரோக்கியத்தை வளர்க்கத் தலைசிறந்த மருந்தாகும். அது சீரண சக்தியை அளிக்கிறது. முன் காலத்தில் நம் முன்னோர்கள் விருந்துண்ணும் பொழுது விகடகவியைப் பேசச்செய்து, விருந்தாளிகளை மகிழ்வித்ததன் காரணம், சிரிப்பினால் சீரணசக்தி அதிகமாகும் என்பதாகும். இதனை நன்றாக அறிந்திருந்த அய்யா அவர்கள், விருந்தினர்களை உபசரிக்கும்பொழுது புன்முறுவலோடு வரவேற்று அவர்கள் உணவு உண்ணும்போது சில நகைச்சுவை நிறைந்த அனுபவங்களைக் கூறி சிரிக்கச் செய்து மகிழுவார்கள்.

அய்யா அவர்கள் விடுதி மாணவியரை மாலை பிரார்த்தனைக்குப்பின் சந்திக்கும்போது அவர்களுக்குக் கதைகள் சொல்வார்கள். அவற்றின் மூலம் நல்ல அறிவுரைகள் மனதில் பதியுமாறு கூறி, சிந்திக்கத் தூண்டுவார்கள். தாம் தேசப் பிதா காந்திஜியோடு, கோவை மாவட்டத்தில் பயணம் செய்த போது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியும் கூறுவார்கள். காந்திஜி பிரயாணம் செய்யும் பொழுதுகூட நேரம் தவறாமல் கடமையைச் செய்வார்களாம். ஒருமுறை பயணம் செய்யும் பொழுது, காந்திஜி களைப்போடு தூங்கிக்கொண்டிருந்தார் என்று அய்யா அவர்கள் நினைத்து அவர்களை எழுப்ப வேண்டாம் என்று இருந்துவிட்டார்களாம். காந்திஜி அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் துயிலெழுந்து, அய்யா அவர்களின் சிந்தனையைக் கொல்லெனச் சிரித்து, ''அவினாசி, கடமையைச் செய்வதிலிருந்து தவறக் கூடாது'' என்று கூறினார்களாம்.

அய்யாவின் சிரிப்பு, கள்ளங்கபடமற்ற சிரிப்பு. சாரதாலய வளாகத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரிய

ரல்லாத ஊழியர்கள் ஆகியோரைக் காணும் பொழுதும், அவர்களின் பொறுப்புணர்ச்சியோடு கடமையாற்றும் தன்மையைக் காணும் பொழுதும் நகைச்சுவை பொருந்தப் பாராட்டுவார்கள். தாம் மனம் விட்டுச்சிரிப்பதோடு மற்றவர்களையும் மனம் விட்டுச் சிரிக்க வைப்பார்கள். அவர்களிடம் பணி புரிபவர்களில் யாரேனும் வருத்தத்தோடு சென்றால், வேடிக்கைகளைக் கூறி எளிதாக அவர்கள் துன்பம் நீங்குமாறு செய்து விடுவார்கள்.

அய்யா அவர்களுக்குக் குழந்தைகள் என்றால் மிகப் பிரியம். குழந்தை உள்ளம் கொண்ட அவர்கள், குழந்தைகளுக்குக் கதைகளைக் கூறுவார்கள். இங்ஙனம் அய்யா அவர்கள் வாழ்க்கையில் நகைச்சுவை நிறைந்திருந்தது. அது பலரையும் திருத்துவதற்கும், மகிழ்விப்பதற்கும் ஏதுவாக விளங்குகிறது.

---

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

— *திருக்குறள்*

---

# 26. முன்னேற்றத்தில் தீராத ஆர்வம்

வாழ்க்கையில் தினமும் பலதரப்பட்ட மக்களைப் பார்க்கிறோம். அவர்களின் தொழில், வயது, உடை, தோற்றப் பொலிவு, பழக்க வழக்கங்களில் வித்தியாசங்கள் நிறைய உள்ளன. ஏன் இந்த பேதங்கள் என்று யோசித்துப் பார்த்தோமானால் ஓர் உண்மை விளங்கும். அதாவது, அவரவர்களின் மனநிலையைப் பொறுத்து, ஆர்வங்களின் அடிப்படையில், அவரவர்களின் வாழ்க்கைப் பொலிவும், தரமும் வேறுபாடுகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்குக் காரணம் அவரவர் சிந்தனைகளிலும், அவை உந்தும் ஆர்வங்களிலும் உள்ள வேறுபாடு தான் எனலாம்.

வாழ்க்கையில் மிகச் சிலர் மட்டுமே, உயர்ந்த குறிக்கோள் உள்ளவர்களாகத் திகழ்கின்றனர். வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டும், படிப்பில், செல்வத்தில் உயர வேண்டும். மகத்தான காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர். குறிக்கோளை அடைவதற்காக வாழ்நாள் முழுவதும் கடுமையான உற்சாகத்தோடு உழைத்து, அதனை அடைகின்றனர். இந்த நிலைதான் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைகிறது. இப்படித் தீராத ஆர்வத்தால் செயற்கரியன செய்தவர்கள் அமரர் அய்யா அவர்கள்.

பலர் 'கிடைத்தது போதும், பகவான் அளந்தது இவ்வளவுதான்' என்று பரம திருப்தியுடன், புதிய துறைகளில் ஈடுபட்டுக் கற்கவோ, அல்லது புதிய முயற்சிகளை மேற்

கொள்ளவோ ஆர்வம் இல்லாமல் வாழ்க்கையை ஒரு குறிப் பிட்டத் தேக்க நிலையிலேயே கழித்து விடுகின்றனர். அவர் களது வாழ்க்கை, வேலை முடிந்து விட்டாலும், முடியா விட்டாலும், சினிமா, பேச்சு, ஊர்வம்பு போன்ற ஒரே மாதிரி யான இயத்திரத் தன்மையுடைய வாழ்க்கையாக அமைகிறது. தீராத ஆர்வமும், அது எழுப்பும் மாற்றமும் வளர்ச்சியும் தான் உயிரோட்டத்தின் அறிகுறி. காலத்தின் பரிணாம வளர்ச்சிக் கேற்ப எப்படிப் பொருத்தமான கல்வியை அளிக்கிறோமோ அதுபோல் குறிப்பிட்ட வாழ்க்கை முறையிலேயே, தேய்ந்த பாதையிலேயே சென்று வாழ்நாளைக் கழித்து விடாமல், நாளும் ஒரு மாற்றமும், வளர்ச்சியும் ஏற்றுப் புதுமையுடன் முன்னேற வேண்டும் என்ற ஆழ்ந்த கருத்தை, அய்யா அவர்கள் ஓயாமல் அறிவுறுத்தியுள்ளார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சாக்ரடீஸ் என்ற கிரேக்க அறிஞரின் அறிவாற்றலில் படாத விசயங்களே கிடையாது. அவர் மரண தண்டனைக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த நேரத்திலும், சக கைதியிடம் மாமிச உணவு பற்றிய புதிய சமையல் குறிப்புகளை மிக ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தாராம். அப்போது இன் னொரு கைதி, ''நீரோ சில நாட்களில் சாகப் போகிறீர். எதற்கு இதெல்லாம்?'' என்று பரிகாசித்தானாம். அதற்கு சாக்ரடீஸ், ''சாவதற்கு முன்பு மேலும், ஒருபுதிய விசயத்தைக் கற்க ஆசைப்படுகிறேன்'' என்று விடையளித்தாராம். இப்படி மரணத்தைத் தழுவும் தருவாயில் கூடப் புதிய விசயங்களைத் தெரிந்து கொண்டு அவர் தனது அறிவை வளர்த்துக் கொண்டேயிருந்தார். அதுபோலவே ஆசியாவை வெற்றி கொள்ளப் புறப்பட்ட அலெக்சாண்டர் தனது குரு அரிஸ்டாட்டிலிடம் ஆசி வாங்கியபோது, ''குருவே நான் திரும்பி வரும்போது என்ன கொண்டு வரட்டும்?'' என்று கேட்டாராம். அதற்கு அரிஸ்டாட்டில், ''விலை மதிக்க முடியாத உபநிடதங்கள், பிரம்ம சூத்திரங்கள் போன்ற

புத்தகங்களைக் கொண்டு வா'' என்று சொன்னாராம். அரிஸ்டாட்டில் தன் வாழ்வு முழுவதும் அறிவை வளர்த்துக் கொள்ள தயங்கியதே இல்லை.

அமெரிக்கநாட்டுக் குடியரசுத் தலைவராக இருந்த ஆபிரகாம் லிங்கன் சிறுவனாய் இருந்த போது தன் அறிவை வளர்த்துக் கொள்ளப் பண்ணை வீட்டிற்கு நடந்து சென்று மரம் வெட்டிப் புத்தகங்கள் வாங்கிப் படித்து உயர்ந்தார். இப்படித் தம் வளர்ச்சியில் திருப்திப்படாது பலவகைகளில், தயக்கமின்றி முன்னேறியவர்கள் நம் நாட்டிலும் அநேகர் உண்டு நம் ஊரிலும் உண்டு. தந்தை அளித்த சிறு தொகையைக் கொண்டு, மளிகைக்கடை பல்பொருள் அங்காடி, சிற்றுண்டிச்சாலை என்று நடத்தித் தனது அறிவாற்றலால் வியாபாரத்தைப் பெருக்கித் தற்போது தம் நிறுவனத்தில் கோடிக்கனக்கான வியாபாரம் செய்பவரைப் பார்க்கிறோம் அல்லவா? இது எப்படி சாத்தியமாயிற்று? குறைந்த முதலீட்டில் திருப்தி கொள்ளாது, வியாபாரத்தின் புதிய அணுகுமுறைகளையும் நுணுக்கங்களையும் கற்றுக் கை யாண்டதே ஆகும். கிடைத்தவரை போதும் என்ற மனப் போக்கு, போட்டியுலகில் போராட முடியாமல் வளர்ச்சியைக் குறைக்கச்செய்து, மங்கச் செய்துவிடும் என்ற உண்மையை அவர்கள் உணர்த்துகிறார்கள் அல்லவா?

ஏதோ வேலை பார்க்கிறோம், மாதத்தின் முதல் தேதி சம்பளம் வாங்கினோம் என்ற திருப்தியோடு நின்றுவிடாமல், கிடைக்கும் ஓய்வு நேரத்தில் உருப்படியாக மேலும் படிக்கலாம், சமூக சேவை செய்யலாம், புத்தகங்கள் எழுதலாம், ஆய்வு மேற்கொள்ளலாம். புதிய விசயங்களைத் தெரிந்து கொள் வதால் நாமும் அறிவை விசாலப்படுத்தலாம், குழந்தை களுக்கும் கற்றுக் கொடுக்கலாம் என்ற அடிப்படையில் வாழ்க்கையை நடத்தும் பொழுது வெற்றி கிடைக்கும்.

பெண்களும், சமையல் செய்வது, வீட்டைப் பராமரிப்பது; அடுத்த வீட்டைச் சேர்ந்தவர்களோடு புடவை, கேபிள் படம், சினிமா என்பன பற்றி அரட்டையடிப்பதுமாகக் கழிக்காமல் வாழ்க்கையில், வேறு சுவையான அனுபவங்கள் இருப்பதைக் கற்றுக் கொள்ளத் தீராத ஆவலுடன் இருக்க வேண்டும். சற்றுத் துடிப்பாயிருந்து சுய தொழிலில் இறங்குவது, நிறைய புத்தகம் படிப்பது போன்ற ஆரோக்கியமான செயல்களில் ஈடுபடலாம்.

'அமரர் அய்யா அவர்கள் தம்முடைய மா பெரும் சாதனைகளில் திருப்தியடையாமல், மேலும், மேலும் கல்விப் பயணத்தில் புதுப்புது பாதைகளைக் காணத் தீராத ஆர்வத் துடன் செயல்பட்டார்கள். பெரும்பாலான மக்கள் ஒரு குறிப் பிட்ட கீழ்நிலையிலேயே திருப்தி அடைந்து விடுவதால்தான், ஏழைகளாக வறுமைக் கோட்டுக்கடியில், படிப்பறிவற்ற பாமரர்களாக வாழ்கின்றனர். தங்கள் தலைவிதிப்படி தான் நிலைமை இருக்கும் என்ற திருப்தியுற்று, முயற்சி செய்யாமல் இருந்து விடுகிறார்கள்.

''ஆயிரம் கடவுளர்களை நோக்கி இறைஞ்சலாம். ஆனால் தம் சொந்த முயற்சியினாலேயே தான் நமது இன்னல்களைத் தீர்க்க முடியும்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறியதை நினைவு கூற வேண்டும். 'தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தம் மெய்வருத்தக் கூலி தரும்'. அல்லவா?

பதினாறாம் நூற்றாண்டுக்குப் பின் ஒவ்வொன்றாக வந்த ஐரோப்பிய நாடுகள் மற்ற நாடுகளை ஆண்டன. இன்னமும் ஆளுகின்றன.; ஐரோப்பியர்கள் தம் மட்டில் திருப்தியுறாமல், வர்த்தகத் தொடர்பை வளர்த்து கொள்ளவும்

முயற்சி செய்கின்றனர். இந்தியாவோ தன்னளவில் திருப்திப் பட்டு, முன்னேறும் உலக வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், உழைக்க ஆர்வமற்ற மக்களின் மனப்போக்குதான்.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில், ஒவ்வொரு தனிமனிதனும் மிகுந்த துடிப்புடன் இருக்கிறான். சிறிய வெற்றிகளைக் கண்டு அவர்கள் துள்ளி விடுவதில்லை. தோல்விகளைக் கண்டு துவண்டு விடுவது மில்லை. ஒவ்வொரு நாளையும் புதிய சவாலாகவும், சந்தர்ப்பமுமாகக் கொண்டு பெரிய வெற்றிகளைச் சிறிது சிறிதாக அடைந்து விடுகிறார்கள். அதனால் தான் அவர்களால் விண்வெளியில் பறப்பதற்கும், எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கும், வட, தென் துருவங்களை அடைவதற்கும் முடிகிறது.

இந்திய மக்களோ தூங்குகிறோம். நமது இளைய தலைமுறையினர், திரையுலக முன்னணிநடிகர்களுக்கு மாலை போடுவதிலும், எதிர் முழக்கம் போடுவதிலும், ரசிகர் மன்றங்களை அமைப்பதிலும் தமது ஆற்றலும் துடிப்பும் மிக்க வயதை வீணாக்குகின்றனர். செல்ல வேண்டிய எல்லைகள், அடைய வேண்டிய லட்சியங்கள் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இத்தகைய இளைய தலைமுறையை, எதிர்கால இந்தியாவை வளப்படுத்தும் வல்லுநர்களாக ஆக்க வேண்டுமென்ற தீராத வேட்கையால், மனத்தால் நல்லதை நினைக்க வேண்டும், நல்லதைப் பேச வேண்டும், உடலால் நல்லதைச் செய்ய வேண்டும். நற்காரியங்களைச் செய்யும் போது முழு விருப்பத்துடனும், முழு முயற்சியுடனும் செய்ய வேண்டும். உடலுக்கு உறுதியைத் தருவதும், உள்ளத்துக்கு உறுதியைத் தருவதும், உழைப்புத்தான். ஆகையால் உழைத்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று அய்யா அவர்கள் அடிக்கடி கூறி முன்னேற்றமடைய

வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவார்கள். மனிதகுல வளர்ச்சி அனைத்திற்கும் காரணம் முன்னேற்றத்தில் ஆர்வமாகும். கடலைக் கடக்கவும், வானில் பறக்கவும், வாகனங்களில் பயணம் செய்யவும் மூலகாரணமாக விளங்குவது உழைப்பும், முயற்சியுமேயாகும். இந்தியாவிலுள்ள மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்று 'டாட்டா' நிறுவனம். மிக ஏழையாக இருந்த ஜே. ஆர். டி. டாட்டாவால் மிகப் பெரிய நிறுவனத்தை உருவாக்க, உறுதுணையாய் இருந்தது, அவரின் விடா முயற்சியும், ஆர்வமுமேயாகும்.

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லைவாழிய நிலனே''

என்ற அவ்வையாரின் பாடல், மக்களைப் பொறுத்துத்தான் மண்ணின் வளம் அமையும் என்பதைக் கூறுகிறது.

தங்கக் கோபுரத்தில் இருந்த சர்ச்சிலையும், கதிரவனே மறையாத இங்கிலாந்துப் பேரரசையும், காந்தியடிகளால் வெல்ல முடிந்தது. இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தரவேண்டுமென்ற தீராத வேட்கையோடு முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை' என்ற நம்பிக்கையோடு உழைத்து, வெற்றி பெற்றார். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரது கொள்கைகளைத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்த அய்யா அவர்களும் ஆண்களுக்குக் கல்வி அளிக்க வித்யாலயத்தையும், பெண்களுக்குக் கல்வியளிக்க சாரதாலயத்தையும் நிறுவினார்கள். அய்யா அவர்களின் அயராத ஆர்வத்தினால் தான் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி உலகம் போற்றும் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.

ருஷ்ய மேதை லெனின் நாடு உயர என்ன செய்ய வேண்டுமெனக் கேட்பவரிடம் 'உழைப்பு, கடின உழைப்பு, கூடுதல் உழைப்புதான் வேண்டும்' என்று கூறுவாராம். அயராத உழைப்பு, உரிய பலனை நிச்சயமாகக் கொடுக்கும் எனவே தான் 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்ற தமிழ் வாசகம் எழுந்தது. அய்யா அவர்கள் மாணவியர் களையும், ஆசிரியர்களையும் சந்திக்கும் பொழுது, 'அயராது உழைக்க வேண்டும். உழைத்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

'ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'.

என்னும் திருக்குறளைக் கூறி, எங்களையெல்லாம் ஆர்வமுடன் உழைக்க ஊக்குவார்கள். மிக உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, நாட்டின் உயர்ந்த பதவியை அடைந்த, ஆசியாவின் ஜோதி, மனிதருள் மாணிக்கம் என்றெல்லாம் புகழப்பட்ட ஜவகர்லால் நேரு தனது நிலையை, சாதனைகளை எண்ணி ஒரு போதும் திருப்தியடைந்ததில்லை. தீராத ஆர்வத்தினால், தனது மேசையில் ராபர்ட் பிராஸ்ட் எழுதிய கீழ்க்கண்ட கவிதையைத் தூண்டுகோலாகக் கொண்டு, நாளும் புதிய பாதைகளைக் காணவும், புதிய செயல்களைத் துவங்கவும் ஆர்வமாய் இருந்தார்கள்.

*The woods are lovely, dark and deep*
*But I have promises to keep*
*And miles to go before I sleep*

தாம் பெற்ற வெற்றிகளில் திருப்தியடையாமல் அமரர் அய்யா அவர்கள் தொடர்ந்து 'வெற்றிகளுக்காக முயற்சி செய்து கொண்டே இருந்தார்கள். நாமும் ஊக்கமாய் முயற்சித்தால், வழுவாது உயர்ந்த நிலையை அடையலாம். ஆகவே தீராத ஆர்வத்துடன் புதிய முயற்சிகளைக் காணத் துடிப்பு பெறுவோம்.

# 27. மனிதர்களை மாண்புற உருவாக்குதல்

பாரத நாட்டில் தோன்றிய சான்றோர்கள், முனிவர்கள், மகான்கள் அனைவரும் விலங்கு நிலையிலுள்ள மனிதனை, தெய்வீக மனிதனாக ஆக்குவதற்குப் பாடுபட்டு வந்துள்ளனர். நம் அய்யா அவர்கள் அந்த வரிசையில் 20-ம் நூற்றாண்டின் மேதைகளில், மனிதராக்கும் பணியில் முன்னணியில் இருக்கிறார்கள்.

இவ்வுலகில் கோடானுகோடி மனிதர்கள் உயிர் வாழ்கின்றனர். அவர்கள் பல மொழிகளைப் பேசுகிறவர்கள், பல கலாச்சாரங்களைக் கொண்டவர்கள், பல்வேறு பழக்க வழக்கங்களை உடையவர்கள் என்றாலும் அவர்களில் ஒரு சிலரே மனிதப்பண்புடன் வாழ்கின்றனர்.

'உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே'
என்கிறார் தொல்காப்பியர்.

'அரம்போலும் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்'

என தோற்றத்தில் மனிதர்கள் போன்று இருந்தாலும் மனிதப் பண்பு இல்லாதவர் 'மரம் போல்வர்' என்கிறார் திருவள்ளுவர்.

''மனிதரிலும் விலங்குண்டு, பறவையுண்டு, கல்லுண்டு, மரமுண்டு, மனிதரிலும் நீர்வாழ் சாதியுண்டு; அநேகக் குல மனிதருண்டு. வானவரும் மனிதராகி வருவதுண்டு'' என்கிறார் ஒரு மேதை.

''நமக்கு வேண்டியது மனிதர்களே! மனிதர்களை உருவாக்குங்கள்; மனிதர்கள் எங்கே இருக்கிறார்கள்?' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

''மனிதர்களுள் பெரும்பான்மையினர் விலங்கு மனிதர் களாகவே இருக்கிறார்கள். அத்தகையவர்களை மனித மனிதர்களாக மாற்றித் தெய்வீக மனிதர்களாக உருவாக்கு வதே என் கடமை'' என்கிறார் குருதேவர் சிவானந்தர். இன்றைக்குச் செய்ய வேண்டுவது இந்த முக்கியமான பணிதான்.

''மனிதத் தன்மை, ஆன்மீகம், பெரியாரிணக்கம் இந்த மூன்றும் தெய்வானுக்கிரகத்தினால் கிட்டுகின்றவை'' என்கி றார் ஆதிசங்கரர்.

மனிதரை மனிதராக்கும் பணிக்காக சுவாமி விவே கானந்தர் ராமகிருஷ்ண மடத்தை ஏற்படுத்தினார். மகாத்மா காந்தியின் தலைமையில் உருவாக்கியுள்ள, சர்வோதயா சங்கமும் இதற்காகத் தான் அமைக்கப்பட்டுள்ளது. அய்யா அவர்கள் வித்யாலயத்தையும், சாரதாலயத்தையும் இந்த நற்பணிக்காக அமைத்து வளர்த்தார்கள்.

மனிதன், முழு மனிதனாவதற்கு முதன் முதலாக தன்னிடத் திலுள்ள மிருகப் பண்புகளை அகற்றியாக வேண்டும். அதன் பிறகு தான் அவனிடம் மனிதப் பண்புகள் வளர முடியும். மனிதப்பண்புகள் வளர வளரத்தான் தெய்வீகப் பண்புகள் தோன்றத் தொடங்கும். இறுதியில் மனிதன் தெய்வீக மனிதனாகவே மாற வழி பிறக்கும்.

இன்றைக்கு நாட்டு மக்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்? உலகமே வியந்து பாராட்டிய முனிவர்களும், ரிஷிகளும், தத்துவ ஞானிகளும் தோன்றிய பாரத நாட்டிலா இன்று வன்முறை தவறான வாழ்க்கையைப் புகுத்தி அவல நிலையை ஏற்படுத்தி உள்ளது என்பதை எண்ணும் பொழுது மனம் வேதனைப்படுகிறது. ஏன் இந்த அவல நிலை? 'பெரியவர்கள்', 'தலைவர்கள்' என்று இருப்பவர்கள் உண்மையிலேயே பெரியவர்களாக இல்லாத காரணம்தான். சாதியாலோ, மதத்தினாலோ, பதவியினாலோ, உயர்ந்து விட்டோம் என்பதனாலோ, பட்டங்களைப் பெற்றதனாலோ, பணத்தைக் கோடி கோடியாகச் சேர்த்திருப்பதாலோ யாரும் மேலோனாக முடியாது.

''மேலிருந்தும் மேலல்லார்'' என்கிறார், திருவள்ளுவர். தலைவனிடத்திலே மேன்மைக்குரிய பண்புகள் இல்லை என்றால், அவனை மேலோன் என்று எப்படிக் கூறுவது? திருக்குறளின் அறத்துப்பால், பெரிய மனிதர் என்று சொல்வோரிடம் என்ன என்ன பண்புகள் இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

சொல்லும் செயலும் ஒன்றியிருப்பது தான் பெரியோரின் அழகு. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்கிறார் வள்ளலார். 'அத்தகைய தீயவர்களைக் காண்பதும் தீதே' என்கிறார் ஔவைப்பிராட்டியார். அத்தகையோர் சொல் கேட்பது அதைவிடத் தீமையைத்தரும்.

எனவேதான் 'மனிதர்களை உருவாக்குங்கள்' என்கிறார் சுவாமி விவேகானந்தர். இன்றைக்குப் பாரதநாடு வேண்டுவது மனிதர்களே.

வன்முறைக் கலாச்சாரம் வளர்ந்து வரும் இந்தக் காலத்தில், திடீர் திடீர் என்று மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படும் இந்தக் காலத்தில், மக்கள் மிருகங்களாக மாறி வரும் இந்தக் காலத்தில், 'மனிதர்களை உருவாக்குவோம்', என்ற அரிய சேவையில் அய்யா அவர்கள் நம்மை ஈடு படுத்தினார்கள்.

இளைஞர்களிடையே உயர்ந்த பண்புகளை அறிவுறுத்தி அவர்கள் சிறந்த மனிதர்களாக வளர்ச்சிப் பெற நாம் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று நமது தாய்மார்கள் சிறந்த அன்னைகளாகத் திகழ வழி செய்ய வேண்டும்.

'அன்பின் வழிய துயிர்நிலை' என்ற அரிய எண்ணம் அனைவருடைய உள்ளத்திலும் தோன்ற வகை செய்ய வேண்டும். சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் நேசிக்கும் பான்மை வளரவேண்டும். இந்த நேசம் நிலவினால் பின்னர், திருட்டு, கொள்ளை, ஏமாற்றல் போன்ற மோசமான இயல்புகள் நாட்டில் நிலவாது. கள்ளக் கடத்தல், கலப்படம், வரி ஏய்ப்பு, கொள்ளை லாபம் போன்ற அநியாயங்கள் இருக்க முடியாது. மனிதன் மனிதனாக வாழ வேண்டும். மனிதன் தெய்வமாக மாற வேண்டும். 'மனிதர்' உருவாக வில்லை என்றால் நமது பண்டையப் பெருமையெல்லாம் சூரியன்முன் பனிபோல மறைந்துவிடும். அப்பெருமையைக் காக்கும் முயற்சியில் சான்றோர் பாடுபடவேண்டும்.

---

நலம்வேண்டின் நாண்உடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு

— *திருக்குறள்*

---

# 28. மனிதரை மதித்தல்

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன். இறைவனின் அடி பணிந்து போற்றுகின்ற அன்பர்கள் தம்மையே மகேசன் சேவைக்கு அர்ப்பணித்து அவன் பணியில் ஈடுபடுகின்றனர். மதியாதார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியாம் இறைப்பணியில் ஈடுபடும் அடியார்கள், அவன் அருளைப் பெற்றுப், பிறர் வாழத் தாம் வாழ்ந்து மங்காப் புகழ் பெறுகின்றனர்.

'ஆண்டவன் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்' என்ற நோக்க முடன் வாழ்ந்து வழிகாட்டிய அய்யா அவர்கள் மதியா தாரையும் மதிக்கும் பண்பாளராய்த் திகழ்ந்தார்கள். சமூக சேவையில் அர்ப்பணிக்கும் பொழுது ஏற்படும் இன்னல்களை மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கூறுவார்கள்.

அன்பும் மதிப்பும் நிறைந்திருந்த அய்யா அவர்களை, நடமாடும் தெய்வமென நினைத்து வணங்கி, வாழ்த்துப் பெற்று வாழ்க்கையில் ஒளி பெற்றிருப்பவர்கள் பலர். அவர்களிடம் அய்யா அவர்கள் கூறுவது, ''பக்தி சிரத்தை யோடு உங்கள் கடமைகளைச் செய்து, உங்களை விரும்பாத வர்களையும் விரும்பச் செய்கின்ற தன்மை உடையவர்களாக, அவர்களை மதித்து வளருங்கள்'' என்பதே.

அய்யா தவறு செய்கின்றவர்களைக் கூப்பிட்டுத் திருத்தும் பொழுது யாராவது தன்னை மதிக்கவில்லை என்று

முறையிட்டால், அதற்காக 'மதிக்கவில்லை' யெனக் கவலைப்பட மாட்டார்கள். 'ஒரு நாள் புரிந்து கொள்ளு வார்கள்' என்று பாசத்தோடு யோசனை சொல்லுவார்கள். எனவே தான் மதிக்காதவர்களையும் மதிக்கும் மாண்புடைய அய்யா அவர்களைப் பாராட்டிப் பெருமை அடைகிறோம்.

மாணவிகளுக்கு அறிவுரைகளை வழங்கும்போதும் அய்யா அவர்கள், ''பிறரை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்பார்கள். ''நம்முடைய பண்பாடு பெரியோர் களைக் கால் தொட்டு வணங்கி கையெடுத்துக் கும்பிட்டு, வாழ்த்து பெறுவதேயாகும். அந்நிலையிலிருந்து ஒருபோதும் தவறக்கூடாது படிக்கும் பிள்ளைகளாகிய நீங்கள் ஒருவரை யொருவர் மதித்து நடக்க வேண்டும்'' என்பார்கள்.

எந்தவித சந்தேகமுமில்லாமல் அனைவரையும் ஒன்றாகக் கருதப் பழகிக் கொள்ளவேண்டும். கருத்து வேற்றுமைகள் ஏற்படும் பொழுது, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் மதித்து ஒழுக வேண்டும். அதனையும் மீறி, அவர்கள் மதிக்காமல் சென்று விடுவார்களேயானால், அதற்காக வருந்தக் கூடாது. மாறாக, இன்னா செய்தார்க்கும் இனியவை செய்து 'மதிக்க வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது, தவறு செய்தவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து மீண்டும் அத்தகைய தவறு களைச் செய்யாத நிலையை அடைவார்கள்.

பணி செய்கிறவர்களில், யாரேனும் ஒருவர், பெரியவர் களை மதிக்கவில்லையென்றால், அய்யா அவர்களிடம் ''அவர் பெரிய தவறு செய்து விட்டார், என்றுகூறினால், உடனே அவருக்கு உரிய தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் அய்யா அவர்களோ, கூறுகின்ற

குற்றச்சாட்டுகளையெல்லாம் பொறுமையுடன் கேட்டுவிட்டு காந்திஜியைப் போன்று 'கொல்' லென்று சிரிப்பார்கள். எங்களுக்கோ நாம்தான் ஏதோ தவறு செய்து விட்டோமோ என்று எண்ணத்தோன்றும். அய்யா அவர்களோ அதனை எளிதாக எடுத்துக்கொண்டு ''இதெல்லாம் என்னம்மா? அவர்களை நீங்கள் மரியாதையோடு நடத்துங்கள். அவர்கள் உங்களிடம் மரியாதையோடு நடப்பார்கள்'' என்று யோசனை கூறுவார்கள்,

அய்யா அவர்கள் அரசியலில் ஈடுபட்டிருந்த பொழுதும் பொது வாழ்க்கையில் தன்னை அர்ப்பணித்த பொழுதும், கல்விப்பணியில் முழுமூச்சுடன் செயல்பட்டக் காலத்திலும், தங்களைப் பாராட்டியவர்களையும், வசைபாடியவர்களையும் ஒன்றாகவே நினைக்கும் பண்பினைப் பெற்றிருந்தார்கள். தம்மை இகழ்வோரையும் புகழ்வோரையும் ஒரே நோக்குடன் நடத்திய அய்யா அவர்கள் மதியாதாரையும் மதித்த மாண்புடையவர்கள்.

எனவேதான் அனைவரும் அவர்களை ''அய்யா'' என்று அன்புடன் அழைத்துப் பெருமைப்படுகிறோம். இத் தகைய பண்பில் நிலைத்த அய்யா அவர்கள் வானுறையும் தெய்வமாய் வைத்தெண்ணப்படும் சீலம் நிறைந்தவர் களாய்த் திகழ்கிறார்கள்.

# 29. பாராட்டும் பண்பு

ஒவ்வொருவரிடமும் பாராட்டுவதற்கேற்ற ஏதாவது நல்ல தன்மை இருக்கிறது. அதைக் கண்டு பாராட்டுவது அழியாதச் செல்வத்தைச் சேமிப்பது போலாகும். நற்பண்பை அடையாளம் தெரிந்து மனமாரப் போற்றும் போது, உறவு அன்பில் மலரும். அப்பொழுது நண்பர் பலர் கிடைப்பார்கள். மாறாத அன்பும் வளரும்.

பாராட்டும்பொழுது உற்சாகம் ஏற்படுகிறது. அமரர் அய்யா அவர்கள் சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் மனமாரப் பாராட்டுவார்கள். ''நீங்கள் தங்கமான பிள்ளைகள், கெட்டிக்காரப்பிள்ளைகள்'' என்று அடிக்கடி மாணவியரிடம் கூறி அவர்கள் செய்யும் பஜனை, விருந்து உபசரிக்கும் முறைகள், துப்புரவு அனைத்தையும் பாராட்டுவார்கள். அது குழந்தைகளுக்கு ஒரு 'டானிக்' போல் ஆர்வத்தைத் தூண்டும். இப்படி உற்சாகப்படுத்தக் கூடிய பாராட்டை அய்யா அவர்கள் தருவார்கள் என்று உணர்ந்த குழந்தைகள் அவர்களிடம் ஓடிவந்து நிறையப் பாராட்டுகளைப் பெறுவார்கள். அய்யா அவர்கள் வாகனம் எப்பொழுது வரும், எப்பொழுது வாகனத்தை விட்டு இறங்குவார்கள் என்று ஆரம்பப்பள்ளிக் குழந்தைகள் காத்திருப்பார்கள்.

நம் நாட்டில், புலவர்கள் அரசர்களையும், அரசர்கள் புலவர்களையும், புலவர்கள் ஒருவருக்கொருவரையும் பாராட்டும் பண்புடையவர்களாகத் திகழ்ந்தார்கள். மோசிகீரனாரை ''மோசி பாடிய ஆய்'' என்று பெருஞ்சித்தரனார் பாராட்ட, 'நல்லிசைக் கபிலன்' எனப் பெருங்குன்றூர்க்

கிழாரும், ''வெறுத்த விளங்கு புகழ்க் கபிலன்'' என கபிலரை மாநோக்கத்து நப்பசலையாரும் பாராட்டியுள்ளனர்.

தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்,

''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக''

என்று மாங்குடி மருதனாரைப் பாராட்டியுள்ளார். அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார், அவனுடைய போர்த் திறனைப் புகழ்ந்து கூறிப் பாராட்டி ஊக்கப்படுத்தியுள்ளார்.

''இரு நில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முனரோ நீகளம் புகினே''

என்பன ஆன்றோர் உறவு நிலைகளைப் படம்பிடித்துக் காட்டும் இலக்கியக் காட்சிகள். அய்யா அவர்களும் எவரொருவர் எந்த ஒரு சிறு செயலைச் செவ்வனே செய்தாலும் மனதாரப் பாராட்டுவார்கள். பாராட்டப்படும் பொழுதுதான் நாம் செய்வதை இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது அல்லவா?

ஒவ்வொரு நாளும், ஆயிரக்கணக்கான உள்ளங்கள் ஒரு சிறு பாராட்டுதலுக்காக ஏங்கி நிற்கின்றன. அப்படிப் பட்டவர்களுக்கு ஒரு சிறு புகழ்ச்சி பெரும் ஊக்கத்தைக் கொடுக்கும். மக்களைப் போற்றுவதால் பாராட்டுபவருடைய செல்வாக்கும், கவரும் ஆக்க சக்தியும், தன்னம்பிக்கையும் பெருகுவதை அய்யா அவர்கள் வாழ்க்கையில் கண்டிருக் கிறோம். கலை விழாவின் போது அய்யா அவர்கள் மிகவும் விரும்பிப் பார்ப்பது மலர் அலங்காரம். இயற்கை அன்னை அளித்த மலர்களை மாணவியர் தம் கலைத் திறத்தினால் அலங்கரித்து வைத்திருப்பார்கள். அவர்களின் கலையாற் றலைக்கண்டு களித்து மனதாரப் பாராட்டுவார்கள். பல்வேறு

போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவிகளைப் பாராட்டு வார்கள். படிப்பில் முதலிடம் வகிக்கும் மாணவிகளை மிகவும் பாராட்டுவார்கள்.

''மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்''

என்னும் திருக்குறள்படியும்,

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்''

என்னும் திருக்குறளுக்கேற்றார்ப்போல் அத்தகைய மனப் பாங்கோடு உள்ளம் மகிழ்ச்சிகொண்டு பாராட்டுப் பெருமை கொள்ளுவார்கள். பெருமை கொள்ளச்செய்வார்கள்.

அனுமன் கடலைத் தாண்டிச் சென்று இலங்கையை அடைய வேண்டும். ஜாம்பவானுடைய பாராட்டுக்களைக் கேட்ட பிறகுதான், அனுமனுக்கு தன்னால் கடலைத் தாண்ட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அனுமனுக்குச் சஞ்சீவி மலையைப் பெயர்த்தெடுத்து வருவதற்கு ஜாம்பவானுடைய பாராட்டுரைகள் வலிமை அளித்தன. அய்யா அவர்கள் தமிழகத்தின் முதல் கல்வி அமைச்சராக இருந்தவர்கள். மிகவும் பெரியவர்கள். அவர்களிடம் சென்று அய்யா இப்படிச் செய்தால் நன்றாக இருக்குமே என்று கூறினால், உடனே அவர்கள் சிறியவராக இருந்தாலும், சொல்லுகின்ற கருத்து பலருக்கு நன்மையை நல்குமானால் உடனே அதனை ஏற்றுக் கொள்ளுவதோடு, பாராட்டுவார்கள். குழந்தைகளைப் பாராட்டும்போது பெற்றோர் அடையும் பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையே கிடையாது. நன்றி தெரிவிப்பதும் ஒருவகை பாராட்டுதான். பாராட்டுவதில் முக்கிய நோக்கம் மனிதரை உயர்த்துவது தான். பிறர் மனதில் நாம் உயருவதே பாராட்டுதான்.

பாராட்டுவதற்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. ஒவ்வொரு செயலைச் செய்து முடித்தவுடன் பாராட்ட வேண்டும். குழந்தை முதல் பெரியவர்வரைப் பாராட்டை விரும்புவார்கள். பிறர் பாராட்டும்பொழுது செய்யும் செயலின் தன்மை அதிகரிக்கிறது. அய்யா அவர்கள் 'பாராட்டுவதே ஒரு கலை' என்று கூறுவார்கள். பாராட்டுவது எப்பொழுது, யாரை, எந்த செயலுக்காக என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அய்யா அவர்கள் மழலைப்பள்ளி குழந்தைகள் முதல் பல்கலைக்கழக பேராசிரியர்கள் வரை அனைவரையும் அவர்களின் செயலறிந்து ஊக்குவித்து, அதனைச் செய்து முடித்தபின் பாராட்டுவார்கள். அந்த பாராட்டே நம் கடமைகளை இன்னும் அதிகமான கருத்தோடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும்.

அய்யா அவர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டி, பண்போடு, பாசத்தோடு வாழ்ந்து காட்டி, மற்றவர்களும் அவ் வழியில் வாழ வேண்டுமென விரும்பிய மகான்.

---

நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு.

— *திருக்குறள்*

---

# 30. எச்செயலிலும் சமத்துவம்

மனிதர், குறிக்கோளோடு வாழும்பொழுது, அவ் வாழ்க்கைக்குப் பொருள் இருக்கும். இப்படித்தான் வாழ வேண்டுமென்று வரையறுத்துக் கொண்டு, அதன் வழி வாழ முயற்சி செய்கின்றவர்களுடைய வாழ்க்கை பயனுள்ள வாழ்க்கையாகும். பிறர் வாழத் தான் வாழவேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டு வாழ்ந்த அய்யா அவர்கள் எச் செயலையும் சமமாகப் பாவிக்கும் உயரிய பண்பு கொண்டிருந்தவர்கள்.

எங்கள் பல்கலைக்கழகம், பலருக்கும் பயன் அளிக்கும் பல்கலைக்கழகமாக வளர வேண்டுமென்று விரும்பினார்கள். இங்கு பயிலும் மாணவியர் நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்களாய்த் தம் காலிலேயே நிற்கும் ஆற்றல் கொண்டவர்களாய் வளர வேண்டுமென்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டு கண்மணிபோலக் காத்து வளர்த்து வந்தார்கள்.

எங்கள் பல்கலைக்கழக வளாகத்திற்கு வரும் பொழு தெல்லாம், வளாகம் சுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்புவார்கள். அவர்கள் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும்பொழுதோ அல்லது வேறு நிகழ்ச்சிகளுக்கு வரும் பொழுதோ, தரையில் கிழிந்த தாள்கள் கிடக்குமேயானால் தானே அவற்றை எடுத்து அருகிலிருக்கும் குப்பைத்தொட்டி யில் போடுவார்கள். அதனைப் பார்க்கும் எங்களுக்கு நாம் முதலிலேயே செய்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றும். மீண்டும் அத்தவறு செய்யக்கூடாதென்று சபதம் எடுத்துக் கொள்வோம்.

உலக நன்மைக்காக சொல், செயல், சிந்தனை முழுவதையும் தியாகம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தவர்கள் அய்யா அவர்கள். ''ஏழை, மூர்க்கன், அஞ்ஞானி, துன்பப்படுகின்றவன் ஆகியோரும் தெய்வங்களாகட்டும்'' என்று கூறுவார்கள். நம்நாட்டின் ஆதாரமான முதுகெலும்பு போன்று உண்ண உணவளிக்கும் விவசாயிகள், உடுக்க உடை அளிக்கும் நெசவுத் தொழிலாளிகள், இருக்க இடமளிக்கும் கட்டிடத் தொழிலாளிகள், சுற்றுப்புறத்தைத் தூய்மைப் படுத்தும் தோட்டிகள் ஆகியோரைச் சமமாக நினைக்க வேண்டும் என்பார்கள்.

நன்மை தரும் செயலை செய்வதில் தயக்கம் காட்டாது, தான் பெரியவர் என்று நினைக்காது, தன்கையே தனக்கு உதவும் என்று செயல்படுவார்கள். அய்யா அவர்கள் இரு பெரும் நிறுவனங்களுக்குத் தலைவராக இருந்தும், தாம் உயர்ந்தவர் என எண்ணாது தம் பணிகளைத் தாமே செய்து வந்தார்கள். சுற்றுப்புறங்களையும், குளியல் அறை, கழிப்பிடம் போன்றவற்றைச் சுத்தம் செய்கின்றவர்களைக் காணும் பொழுது, அவர்களை ஆசீர்வதிப்பதோடு, எங்களிடம் ''இப்படிப்பட்டவர்களை (தோட்டி) இங்கு வேலை செய்ய வைக்கக்கூடாது. அவர்களுக்கு வேறு வேலை தரவேண்டும். நாம் தான் கழிப்பிடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும்'' என்பார்கள். ''அவர்களும் ஆண்டவனின் பிள்ளைகள் அப்பா'' என்று கூறுவார்கள்.

செய்யத்தக்க செயலைச் செய்ய வேண்டிய நேரத்தில், பெரிய செயலாக இருந்தாலும், சிறு செயலாக இருந்தாலும் செய்து முடிப்பவர்களே சிறந்த செயல்வீரர்களாவார்கள். அய்யா அவர்கள் வாழ்க்கையில் செயல்வீரம் நிறைந்திருந்தது. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது, தமிழுக்ாகச்செய்த தொண்டு, கலைக்களஞ்சியம் கண்டது, கல்வி

அமைச்சராக இருந்து பணிபுரிந்தது ஆகிய அனைத்தும் அவர்களது செயல்பாட்டில் ஒளி நிறைந்த பகுதிகள். எங்கள் பல்கலைக்கழகத்திற்கு வரும்போதெல்லாம் யார் யார் எந்த எந்த செயல் செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டிருப்பார்களோ அந்தசெயலைக் குறிப்பிட்டக் காலக் கட்டத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்று கூறி அதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார்கள். பெருஞ்செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது போன்றே, அன்றாடம் நடக்கும் சிறு செயல்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

---

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஆற்றும் கொல்லோ உலகு.

— *திருக்குறள்*

---

# 31. சான்றாண்மை

சான்றோர் என்பவர் நடுநிலை நோக்கு உடைய வராய் எல்லா உயிர்களிடத்தும் தாம் இருப்பதையும், எல்லா உயிர்களும் தம்முள் இருப்பதையும் காண்கிறார்கள். எந்த உயிரையும் எப்பொருளையும் விருப்பு, வெறுப்பின்றி காணு கின்ற சான்றோருக்குச் சென்றயிடமெல்லாம் சிறப்பு உண்டு. பெருந்தன்மையுள்ள சான்றோர், எவரையும் நண்பராக்கிக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவர்கள். அய்யா அவர்கள் சான்றோரின் சான்றோரகத் திகழ்ந்தார்கள். நல்ல குண முள்ளவர்களாயும், சுகத்துக்கங்களைச் சமமாகக் கருது கின்றவர்களாயும் இருந்தார்கள்.

உலகிற்கு மருந்து போன்றவர்கள் இன்புறினும், துன்புறினும் சிறுப்பதில்லை. சந்திரன் வளர்ந்தாலும், தேய்ந் தாலும் விண்மீன் ஆவதில்லை. பசுவுக்குப் புல் கொடுத்தால் பால் தருவது போல, மரத்திற்கு நீர் ஊற்றினால் கனி தருவது போல், செடிக்கு நீர் கொடுத்தால் மணம் தரும் மலர்களைத் தருவதுபோலச் சான்றோர் பிறருக்கு உதவிக் கொண்டே யிருப்பார்கள். அய்யா அவர்கள் வாழ்க்கை பிறருக்கு உதவிக் கொண்டேயிருந்ததால் ஒப்பற்ற வாழ்க்கையாக அமைந் திருந்தது அவர்களுடைய சிந்தனை, செயல், எண்ணம் அனைத்தும் சாரதாலயாவைப் பற்றியதாகவும், வித்யா லயத்தைப் பற்றியதாகவுமே இருந்தது.

சான்றோருடன் நண்பராக ஆசை, பிறர் நற்குணங் களை எடுத்துரைப்பதில் மகிழ்ச்சி, பெரியவர்களிடத்தில் அன்பு, அக்கறை, கல்வியில் ஊக்கம், தீமையைக் கண்டு அஞ்சுதல், கடவுளிடத்தில் எல்லையற்ற பக்தி, அவை

அடக்கம் இப்படிப்பட்ட சிறந்த குணங்களைக் கொண்டிருந்தார்கள். அய்யா அவர்களின் கல்வி நிலையங்களில் பணி புரியும் ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவரும் ஒரு சிறிய செயலைச் செய்தாலும் அவர்களை அன்போடு பாராட்டித் தூண்டுவார்கள். அவர்களின் வாழ்த்துக்கள் சான்றோராக்கும் வல்லமையுள்ளதாக இருந்தன.

செல்வத்தில் தியாகம், பதவியில் பொறுமை, துன்பம் வந்த போதும் துவளாத தன்மை, நன்னடத்தையில் பணிவு, மனத்தில் தூய்மை, நல்லோரிடத்து நட்பு, இன்சொல் இயம்புதல், எளியோர்க்கு ஈதல் ஆகிய சிறந்த குணங்களில் சிகரமாகத் திகழ்ந்தவர்கள் அய்யா அவர்கள். சந்தன மரம் வளர்வது பிறரைக் குளிர்ச்சிவிப்பதற்காகத்தான். தூது போன்றே சான்றோர்களும் பிறர் நன்மைக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொள்ளுகிறார்கள். அய்யா அவர்களின் வாழ்க்கை, பிறர் நலமுடன் வாழ வாழ்ந்த வாழ்க்கையாகும்.

நறுமணமுள்ள மலர்க்கொத்துக்கள் எல்லோருக்கும் மணம் பரப்பி, மகிழ்ச்சி அளிப்பது போல, பெருந்தன்மை கொண்ட அய்யா அவர்கள் எப்பொழுதும் பிறர் மகிழ்ச்சியோடு வாழ வழி வகுத்துக் கொண்டேயிருந்தார்கள். கற்பூரம் எரிந்து நறுமணம் கொடுப்பது போலத் தம்முடைய வாழ்க்கையைப் பெண் கல்விக்காக அர்ப்பணித்துக் கொடுத்தார்கள்.

மேகங்கள் உப்பு நீரை உறிஞ்சிப் பின் இனிய நீராக மழையைப் பொழிந்து நல்லோர்க்கும் தீயோர்க்கும் பயன் அளிக்கின்றன. சான்றோராய்த் திகழ்ந்த அய்யா அவர்கள், யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவர்களுக்கும் நல்லதே செய்தார்கள். அவர்களின் உதவியைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் பலர்.

சான்றோர்களின் அன்பு உயிருள்ளவரை நிலைத்திருக்கும். அவர்களின் கோபமோ கணநேரத்தில் மறைந்து விடும். அவர்களின் செயல்கள் அனைத்தும் தன்னலமற்றவை. நாங்கள் தவறு செய்கின்றபொழுது கோபங் கொண்டு, தவறைத் திருத்தும் அய்யா அவர்கள், மறு கணமே எங்களிடம் அன்பு காட்டுவார்கள். அவர்களின் அன்பில் நனைந்து அதனைத் துய்த்தவர்கள் நாங்கள்.

அய்யா அவர்களிடம், சத்தியம், நேர்மை, தன்னடக்கம் அறிவு, ஆற்றல், விவேகம், அஞ்சாமை, வீரம், அறம், உண்மை, நடுவு நிலைமை தவறாமை, தம் கருமத்தில் கண்ணாய் இருத்தல் போன்ற எண்ணற்றக் குணங்கள் இருந்தன. அவர்கள் வாழ்க்கையே புத்தகமாக விளங்கியது. வாழ்க்கையில் ஒளிபெற வேண்டும் என்று நினைப்பவர்கள் அய்யா அவர்களின் வாழ்க்கையைப் படித்துப் பயன்பெற வேண்டும்.

பூமியைப் போன்ற பொறையுடனும், வீட்டுநிலை போன்ற உறுதியுடனும், சேறில்லாமல் தெளிந்த நீர்நிலை போன்ற தூய்மையுடனும் இருப்பவர்களுக்குப் பிறப்பும், இறப்பும் இல்லை. அய்யா அவர்கள் இன்று தெய்வத்தோடு தெய்வமாய் இருந்து நாங்கள் செய்யும் பணிகளைப் பார்த்துப் பரவசமடைகிறார்கள் என்றுதான் எண்ணுகிறோம்.

அய்யா அவர்களின் வாழ்க்கை, தியாகம் நிறைந்த வாழ்க்கை. ''எவருடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிகிக்கிறதோ அவரையே நான் மகாத்மா என்பேன்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர். அன்னையின் அருளைப் பெற்று, இராமகிருஷ்ணரின் பக்தியில் நனைந்து, சுவாமி விவேகானந்தரின் போதனைகளில் தம்மை முழுமையாக்கிக் கொண்ட அய்யா அவர்கள் இதயம் ஏழைகளுக்காக இரக்கம்

கொண்டது. ஏழைகளின் துயர் துடைக்க அரும்பாடுபட்டார்கள். சாரதாலயக் குழந்தைகளிடம் ஏழைமக்களுக்காக உதவி செய்ய வேண்டுமென்று அறைகூவல் விடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

இயேசு, புத்தர், முகமது நபி, குருநானக், கபீர், இராமகிருஷ்ணர் ஆகியோர் கோடிக்கணக்கான மக்களை உருவாக்கியவர்கள். தங்களுடைய வாழ்வால் மற்றவர்களின் வாழ்வைச் சிறப்படையச் செய்தவர்கள். இராமகிருஷ்ணரிடம் எல்லையற்ற பக்தி கொண்ட அய்யா அவர்கள், மக்களின் வாழ்க்கையை உருவாக்கப் பாடுபட்டார்கள். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் பரம்பரையில் வந்த அய்யா அவர்கள் பிறருக்காகப் பாடுபடும் தொண்டுள்ளம் கொண்டிருந்தார்கள்.

அய்யா அவர்கள் வாழ்க்கை, உள்ளும் புறமும் இறையச்சம் கொள்ளுவதாய், கோபத்திலும், மகிழ்ச்சியிலும் நேர்மையான சொற்களைப் பேசுவதாய், வறுமையிலும் செல்வத்திலும் நடுவு நிலைமை தவறாததாய், தன்னைப் பகைத்துக் கொண்டவர்களுக்கும் உதவி செய்வதாய், நியாயமாய் நடக்கும்படி பிறரைத் தூண்டுவதாய் அமைந்திருந்தது.

அய்யா அவர்கள் எங்களுக்கு அறிவுரை கூறும்பொழுது,

'துன்பத்திலும் முகமலர்ச்சி கொள்பவனை
துயரத்தினின்றும் சக்தியைச் சேகரிப்பவனை
யோசனையில் துணிவு கொள்ளுபவனை'
நான் அன்புடன் பாராட்டுகிறேன்'

என்பார்கள். சான்றோனுக்கு அனைத்துலகும் தாய் நாடே. சாந்தமான மனத்திற்கு எந்த இடமும் அரண்மனையே, அப்படிப்பட்ட உள்ளம் உடையவர்களாக அய்யா அவர்கள் திகழ்ந்தார்கள்.

எவனொருவன் வாழ்க்கையை மேற்கொண்டு, தனிமையில் இனிமையும் அமைதியும் கண்டு, மனச்சுயேச்சையின்படி, திடச்சித்தத்தின்படி நடக்கிறானோ, அவனே மனிதருள் மனிதன்; மகாத்மா. அய்யா அவர்களின் வாழ்க்கை இப்படிப்பட்ட சிறந்த வாழ்க்கையாக அமைந்திருந்தது.

எல்லோரையும் நேசித்து யாவராலும் நேசிக்கப்பட்டு, உலகத்திலுள்ளனவெல்லாம் அருமை உள்ளனவென்று நினைத்து, தம் பெருமையைத் தம் பெருந்தன்மையால் பிறருக்கு அளித்து, பிறர்வாழ தாம் வாழ்ந்து இறைவனோடு இரண்டறக் கலந்து விட்ட அய்யா அவர்களின் வாழ்க்கை நம்மை உற்சாகப்படுத்துவதாக!

---

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ**
**டைந்துசால் பூன்றிய தூண்.**

— *திருக்குறள்*

---

# 32. உயர்ந்த எண்ணங்கள்

மனிதன் சமுதாயத்தில் உயர்ந்த நிலை அடைந்து தெய்வீக நிலையைப் பெறவேண்டுமென்றால் அவன் எண்ணங்கள் உயர்ந்தனவாக அமைய வேண்டும். ஒருவனுடைய வாழ்க்கையைச் சீர்செய்வது அவனுடைய எண்ணங்கள்தான். எண்ணங்கள் உயரும் போது, தனது குணங்களைச் செப்பம் செய்யும் சிற்பியாக, சூழ்நிலையை உருவாக்கும் ஓவியனாக, விதியை நிர்ணயிக்கும் திறமையாளனாக, ஒப்பற்றத் தலைவனாக விளங்குகிறான்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்கிறது திருக்குறள். எண்ணங்கள் மனிதனை ஆட்டிப் படைக்கிறதால், 'நல்லவே எண்ணல் வேண்டும்' என்கிறார் பாரதியார். மனிதன் எதை எண்ணுகிறானோ அவ்வாறே உண்மையில் ஆகிறான். அவன் எண்ணங்களின் மொத்தத் தொகுப்பே அவனது ஒழுக்கமாகும். நல்ல மனம் உடையவர்கள்தான் நல்ல சிந்தனைகளையும் எண்ணங்களையும் கொண்டவர்களாக விளங்குவர். அமரர் அய்யா அவர்களின் எண்ணங்களின் பிரதிபலிப்பே, வானளாவ உயர்ந்து நிற்கும் கல்வி நிலையங்களான வித்யாலயமும், அவினாசிலிங்கம் பல்கலைக் கழகம் உட்பட அதைச்சார்ந்த மற்ற நிறுவனங்களும்.

தமிழன்னைப் பெற்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒப்பற்றவர் அய்யா அவர்கள். நாட்டுப்பற்றும், தாய்மொழிப் பற்றும், பொதுநலத்தொண்டுள்ளமும் கொண்ட உயர்ந்த எண்ணங்களின் பிறப்பிடமாகத் திகழ்ந்தார்கள். ''நல்லவராக இருங்கள்; தூய்மையோடு, பக்தியோடு, சிரத்தையோடு பாடுபடுங்கள்; தன்னலமற்ற சேவை செய்யுங்கள்'' என்று கூறியதோடு இந்தச் செயல்களை வாழ்ந்தும் காட்டினார்கள்.

மக்கள் உயர்ந்த ஆன்மீக வாழ்க்கை வாழ வழிகாட்டிய வர்கள் அமரர் அய்யா அவர்கள். தாம் நிறுவிய கல்வி நிறுவனங்களில் காலை, மாலை இரு வேளைகளிலும் சமய ஒற்றுமையை வளர்க்கும் வண்ணமும், ஆன்மீக நெறியில் செல்லும் வண்ணமும் பிரார்த்தனைகளும், ஞாயிறு தோறும் சர்வோதயப் பிரார்த்தனையும் நடப்பதற்கு வழி காட்டிய வர்கள். வித்யாலயத்தில் நடைபெறும் பிரார்த்தனைகளில் அய்யா அவர்கள் நாள்தோறும் கலந்து கொள்வார்கள். சாரதாலயம் வரும் பொழுதெல்லாம் அங்கு நடக்கும் பிரார்த் தனையிலும் தவறாது கலந்துகொள்வார்கள். அதுமட்டுமல் லாமல், எந்தக் கூட்டமாக இருப்பினும் இறைவணக்கத்துடன் தான் ஆரம்பிக்க வேண்டுமென்ற நல்ல முறையையும் உண்டாக்கித் தந்தார்கள்.

எல்லோரிடமும் அன்போடு பழக வேண்டும், பாமர மக்களை உயர்த்துவதற்குப் பாடுபடவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள் அய்யா அவர்கள். ''மக்கள் சேவையில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வீர்களாக. விலை மதிப்பற்ற செல்வம் நிறைந்த பொக்கிஷமாகிய உழைப்பைத் தருவீர்களானால் இந்த வாழ்க்கையில் உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை'' எனச் சுவாமி விவேகானந்தர் கூறியிருப்பது அய்யா அவர் களுக்கு முற்றிலும் பொருந்தும். பிறருக்காக உழைக்க வேண்டுமென்ற மிக உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தவர்கள். ''உங்களில் சில பேராவது நாட்டுக்காக உழைக்க உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்'' என்ற தமது தீராத ஆர்வத்தை அடிக்கடிக் கூறுவார்கள்.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்கின்றவர்களே உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள். அய்யா அவர்கள் எப்பொழுதும் நாட்டைப் பற்றியும் சமுதாயத்தைப் பற்றியும், ஏழை எளிய மக்களுக்கு எப்படி உதவுவது என்பது பற்றியுமே

எண்ணிக் கொண்டிருப்பார்கள். அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை ஆரம்பித்தபொழுது அது ஏனைய கல்லூரிகளைப் போன்று ஏட்டுக் கல்வியைக் கற்றுக்கொடுக்கும் ஒரு சாதாரண கல்லூரியாக அமையாமல், சமுதாய சேவை செய்யும் கல்லூரியாகத் திகழ வேண்டுமென பெருநோக்கத்தோடு தான் ஆரம்பித்தார்கள். அவர்கள் நினைத்தது போன்றே அவினாசிலிங்கம் மகளிர் கல்வி நிறுவனங்கள் சமுதாய சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளன.

அய்யா அவர்களிடம் ''நாங்கள் பல விருதுகள் பெற்றிருக்கிறோம்'' என்று சொல்லும் பொழுது ஏற்படும் மகிழ்ச்சியைக் காட்டிலும், ''கிராமங்களுக்குச் சென்று சேவை செய்தோம்'' என்று கூறும்பொழுது அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. அத்தகைய உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தவர்கள் அய்யா அவர்கள்.

பல வேலைகளைச் செய்யும் பொழுது சோர்வடைந்து அய்யா அவர்களிடம் சென்று ''என்னால் இதனைச் செய்ய முடியவில்லையே'' என்று கூறினால் உடனே அவர்கள் ''உங்களால் முடியுமம்மா; நிச்சயமாக நீங்கள் செய்வீர்கள்'' என்று உற்சாகப்படுத்தி அதனைச் செய்து முடிக்கும் வரை தினமும் கேட்டுத் தைரியப் படுத்தாமல் இருக்கமாட்டார்கள்.

''தாம்இன் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்''

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர்கள் அய்யா அவர்கள்.

அய்யா அவர்கள் 'தான் ஓர் இந்தியன்' என்பதில் பெருமை கொள்ளுவார்கள். ''நான் ஓர் இந்தியன்; இந்தியர்கள் அனைவரும் என் உடன் பிறந்தவர்களே என்று

பெருமையோடு பறைசாற்றுவீர்கள்'' என்ற சுவாமி விவேகானந்தர் கூற்றின்படி நடந்தவர்கள்.

நோயுற்றோருக்கு உதவுதல், பசியுற்றோருக்கு உணவு அளித்தல், அறியாமையில் தவிப்பவர்களுக்கு முடிந்த வரையில் அறிவினைக் கொடுத்தல் போன்ற உன்னத எண்ணங்களைக் கொண்டிருந்தவர்கள். சாரதாலயத்தில் பணி புரிவோர் யாராக இருந்தாலும் அவர்கள், அய்யா அவர்களிடம் உதவி கேட்கும்பொழுது உடனே செய்வார்கள்.

எல்லோரும் இன்பமாக வாழவேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள். ''இறைவனைத் தேடி நீ எங்கு செல்லு கின்றாய்? உன்னோடு வாழ்கின்ற, ஒரு வேளை சோற்றுக்கும் வழி இல்லாமல் வாடுகின்ற மக்கள்தான் தெய்வம்; அவர் களுக்கு உதவி செய்வது ஆண்டவனுக்குச் செய்யும் உதவி யல்லவா?'' என்ற சுவாமி விவேகானந்தரின் கேள்விகளை எடுத்துக்காட்டிப் பணிசெய்யப் பணிப்பார்கள். ''குன்றென நிமிர்ந்து நில்லுங்கள்; நல்லதைத் துணிந்து சொல்லுங்கள்; சொன்னதைத் தொடர்ந்து செய்யுங்கள்'' என்று கூறிக் கொண்டேயிருப்பார்கள். இந்திய நாட்டு மக்கள் எப்பொழுதும் உயர்ந்த இலட்சியங்களில் ஊறி நிற்பவர்கள் என்ற எண்ணம் கொண்டிருந்தவர்கள்.

'தளராத மன உறுதி, அழியாத ஊக்கம், அமைதி, திருப்தி, அன்பு, பொறுமையோடு கூடிய இடைவிடாத உழைப்பு, நெருக்கடியான காலங்களில் சிங்கத்தைப்போன்ற பலம் ஆகியன கொண்டவர்களாக விளங்க வேண்டும்' என் பார்கள். திக்கற்றவர்கள், ஏழை எளியவர்கள், எழுத்தறி வற்றவர்கள் ஆகியோருக்குச் சேவை செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்பார்கள். ''எண்ணங்கள் வலிமை வாய்ந்தவை. அவை நீண்ட தூரம் பயணம்

செய்வன'' என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கினை மனத்தில் கொண்டு வாழ்ந்த அய்யா அவர்களின் எண்ணங்கள், செயல்கள் அனைத்தும் மக்களுக்குப் பயன் அளிப்பனவாய் இருந்தன.

வாழ்க்கையை உருவாக்கக்கூடிய, மனிதனை மனிதனாக்கக்கூடிய கல்வியைத் தான் அளிக்க வேண்டு மென்ற உயர்ந்த எண்ணம் கொண்ட அய்யா அவர்கள் வாழ்க்கைக்குப் பயன் அளிக்கும் கல்வியே நாட்டுக்குத் தேவை என்பதை மனதில் கொண்டு கல்வி அமைச்சராக இருந்த போதும், சேவை நிறுவனங்களின் தலைவராக இருந்த போதும் அத்தகைய கல்வியையே அளித்தார்கள்.

''எந்தவித சுயநோக்கமும் இல்லாமல் பணம், புகழ், வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப் பாகப் பணியாற்றுகிறான்'' என்று அடிக்கடிக் கூறி உற்சாகப் படுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

மனிதனை மனிதனாக்கித் தெய்வநிலை அடையச் செய்வதும், மனிதனை விலங்காக்கி இழிநிலை அடையச் செய்வதும் அவனுடைய சிந்தனைகளே. தூய்மையான சிந்தனை ஏற்படத் தெய்வபக்தி வேண்டும். அய்யா அவர் களின் எண்ணங்கள், செயல்கள், சிந்தனைகள் அனைத்தும் தூய்மை நிறைந்தன. தன்னைச் சார்ந்தோர் அனைவரையும் தூய்மையுடையோராக இருக்கச் செய்தார்கள்.

'தூய்மையுறுக தூய்மையுறுக
வாய் மன யாக்கை தூய்மையுறுக'

என்ற பாடலைப் பாடி, மாணவியர், ஆசிரியர்களின் மனத்தில் தூய்மையான எண்ணங்கள் உருவாக வழி வகுத்தார்கள்.

கூட்டங்களில் பேசும்பொழுதும், மாணவியர், ஆசிரியப் பெருமக்களோடு உரையாடும் பொழுதும், சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பார்கள். மாலை நேரங்களில் சாரதாலயா வ்ளாகத்திற்கு வருவார்கள். கட்டிடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்குச் செல்லும்பொழுது ஆங்காங்கே விளையாடிக் கொண்டும், அமர்ந்து உரையாடிக் கொண்டும் இருக்கும் மாணவிகளைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். மாலைப் பிரார்த்தனையி ல்கலந்துகொண்டு அறிவுரைகளை அள்ளி அள்ளி வழங்கிச் சிந்திக்கத் தூண்டு வார்கள். மாணவிகளை வாழ்த்தும் பொழுது 'சிந்திக்கும் பிள்ளைகள்' என்று மனதார வாழ்த்தி நல்ல சிந்தனை உடைய பிள்ளைகளாக, எதிர்கால இந்தியாவை உருவாக்கும் பிள்ளைகளாக ஆசீர்வதிப்பார்கள்.

சிறந்த சிந்தனையாளர்கள் இவ்வுலகில் இருப்பது அரிதாகி விட்டது. அய்யா அவர்கள் எப்பொழுதும் செய லாற்றிக் கொண்டேயிருப்பார்கள். ''நெஞ்சில் நல்ல எண்ணங்கள் அரும்ப வேண்டும்; பிறரையும் தன்னைப்போல் நினைக்க வேண்டும். அதுவே நமக்கு இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தருபவை'' என்று கூறிக்கொண்டே இருப் பார்கள். கருத்துக்களை கொடுக்கக் கொடுக்கத்தான் ஒருவரின் மனம் அதனை ஏற்றுக் கொள்ளும் பக்குவமடையும். உயிரினங்களுள் சிறந்த மனிதனுக்குச் சிறப்பைத் தருவது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக்கொள்ளுவதே அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல் என்பதை அய்யா அவர்கள் உணர்த்திக் கொண்டே யிருப்பார்கள்.

''எண்ணம் மலரைப் போன்றது. மொழி அதன் மொட்டாகும். செயல் பழுத்த கனியாகும். நாம் எதை எண்ணுகிறோமோ, எனதச் சிந்திக்கிறோமோ அதுவாகவே

ஆகிவிடுகிறோம். எனவே நம்முடைய எண்ணங்கள் நல்லனவாக இருக்க வேண்டும்'' என்று அய்யா அவர்கள் கூறுவார்கள்.

அய்யா அவர்களின் சிந்தனை, செயல் யாவும் உயர்ந்தனவாக இருந்தன. அவர்களின் உயர்ந்த சிந்தனை நாட்டைப் பற்றியதாகவும், ஏழை எளியவர்களைப் பற்றியதாகவும் இருந்தது.

பரந்த மனம் கொண்ட அய்யா அவர்கள் உலக மக்களெல்லாம் ஒன்றே என்று நினைக்கும் உள்ளம் கொண்டிருந்தவர்கள். அறிவிலே தெளிவும், நெஞ்சில் உறுதியும், அகத்தில் அன்பும், பொறிகளை வெல்லும் தன்மையும், எப்பொழுதும் இறைவனை நினைக்கும் எண்ணமும், கரும யோகத்தில் நிலைக்கும் தன்மையும் ஒருங்கே கொண்டிருந்தவர்கள்.

'பக்கத் திருப்பவர் துன்பம் தனைப்
பார்க்கப் பெறாதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத் திருத்தி உலகோர் நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி'

என்பதற்கிணங்க உலகெலாம் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டிருந்தவர் அய்யா அவர்கள்,

---

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

— *திருக்குறள்*

---

# 33 வெற்றியைச் சாதிக்கும் பாங்கு

சமுதாயத்தில் யார் யார் வெற்றியுடன் நிமிர்ந்து வாழ்கிறார்களோ அவர்களுக்குத் தான் அதிக மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது. ஆனால் அத்தகைய வெற்றி நிலையை அடைவது எளிதல்ல. கடுமையான உழைப்பின் மூலம் தான் வெற்றி பெற முடியும். வாழ்க்கையில், நல்ல குறிக்கோளைக் கொண்டு, அந்தக் குறிக்கோள் நிறைவேறு மாயின், அதுவே வெற்றியாகும்.

அனைவரும் நம்மை மதிக்க வேண்டும். அறிமுகமில் லாமலேயே நம்மை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் விரும்புகிறோம். அத்தகைய நிலையை அடைய வெகுதூரம், நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டும். ஒருவர், எல்லோருடைய மதிப்பையும், அன்பையும், பாராட்டையும் பெறவேண்டு மென்றால், அவர் மிகவும் கடினமாக உழைக்க வேண்டும். பிறர் நலம் பேண வேண்டும்.

வெற்றி பெற்றுள்ள ஒருவர் எல்லாக் காரியங்களிலும் முழுமை பெற்றவராக இருப்பார். அவர் தமது வாழ்க்கையில் செயல்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்துவார். தான் மேற்கொண்டுள்ள பணிகள் அனைத்திலும் தன்னம்பிக்கை யுடன் பாடுபடுவார். தன் நற்குண நற்செயல்களினால் அனைவரையும் கவருவார். சமுதாயம் அவர்களிடம் தான் ஆலோசனைகளை எதிர்பார்க்கும். சமுதாயத்திலுள்ள அனைவரும் அவரை முன் மாதிரியாகக் கொண்டு பின்பற்று வார்கள். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அய்யா அவினாசிலிங்கம் ஆகியோர் இந்த வகை மனிதர்கள்.

அய்யா அவர்கள் வாழ்க்கையில் மகத்தான வெற்றியைப் பெற்றவர்கள். எப்படி இத்தனைப் பெரிய வெற்றிக்கு ஆளானார்கள்? அவர்களுக்கு என்னென்ன குணாதிசயங்கள் இருந்தன என்று தெரிந்து கொள்ளுவது அனைவருக்கும் பயன் அளிக்கும். வாழ்க்கையில் எங்கு, எப்படி செல்வோம் என்ற உறுதியான உணர்வு இருந்தது. அப்பாதையில் தொடர்ந்து செல்லும் மனவலிமையும் இருந்தது. அய்யா அவர்கள் இத்தகைய மன வலிமையை நிறையப் பெற்றிருந்தார்கள். அவர்கள் இளைஞராக இருந்த போது அரிசன மாணவர்கள் கல்வி கற்பதற்கென்று பள்ளிக்கூடம் ஒன்று நடத்த வேண்டுமென்று நினைத்துச் செயல்பட்டார்கள். ஆரம்ப கட்டத்தில் அவர்களுக்குப் பல இடையூறுகள், எதிர்ப்புகள், தடைகள் இருந்தன. அவற்றை மனவலிமையோடு எதிர்கொண்டு, பள்ளியை ஆரம்பித்து, வளர்த்ததால் இன்று இராமகிருஷ்ண வித்யாலயமும் சாரதாலயமும் பல நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டு புகழ் பெற்று விளங்குகின்றன.

அய்யா அவர்களிடம், ''அய்யா நான் இந்த முயற்சியை மேற்கொள்ளப் போகிறேன்'' என்று சொன்னால், உடனே அவர்கள் மகிழ்ந்து, ''நீங்கள் நன்றாக செய்யுங்கள்; ஆண்டவன் அருள் உங்களோடு இருக்கும். நீங்கள் மேற்கொள்ளும் காரியம் உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும்'' என்று வாழ்த்தி அனுப்புவார்கள். பலன் எதிர்பாராமலும் தன்னலம் கருதாமலும் செய்யும் செயல் வெற்றியைக் கொடுக்கும் என்பது அய்யா அவர்கள் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் தாம் எடுத்துக் கொண்ட குறிக்கோளைக் கடைப்பிடிக்க எந்தத் துன்பம் நேரிடினும் அசையாமல் இருக்க முடியும். தங்களுக்குக் கிடைத்த மரியாதை மதிப்புக்களால் தடம் பிறழாமல், தங்கள் பணியில் கண்ணுங்கருத்துமாய் இருப்பார்கள். அய்யா

அவர்கள் கவனம் முழுவதையும், கல்விக்கு அளித்தார்கள். ஏட்டுக்கல்வி மாத்திரமல்லாமல், பரந்த மனப்பான்மை அளிக்கும் அனைத்துக் கல்வியும் பெற்றுக் கல்வி கேள்விகளில் வல்லுநர்களானார்கள். தமது குறிக்கோளை அடைவதற்குத் திட்டமிட்டு, அதன்படி வாழ்ந்தார்கள். கடுமையான உழைப்புடன், தாம் மேற்கொண்டதை அடைய, எந்த முயற்சியையும் கைவிட்டதில்லை.

வெற்றி பெற்றுத் தலைமைப் பதவிக்கு வந்திருப்பவர்கள், வந்தவர்கள் அனைவருக்கும் பொதுவான சிறப்பு என்னவெனில் மேற்கூறிய தன்மைகள் அனைத்தும் ஒருங்கே இணைந்திருப்பதாகும். மற்றவர்களோடு அன்போடு கூடிய உறவு, சுயமாக சிந்தித்துச் செயல்படும் ஆற்றல், தெய்வ அருள் முதலியன அய்யா அவர்களிடம் இருந்த பண்புகள் ஆகும்.

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்ற திருக்குறள் பண்பாடு உள்ளவர்களாலே இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்கிறது. அய்யா அவர்கள் இதற்கு இலக்கணமாய்ப் பல பண்புகளை வெளிப்படுத்தித் திகழ்ந்தார்கள்.

சமயோசிதம்

சாதாரண செயல்களில் கூட, விவேகம் நிறைந்து நடைமுறையில் பயன் தரும் முடிவுகளை எடுக்கும் தூரப் பார்வை நிறைந்த திறன் பெரும் அளவில் பெற்றிருந்தார்கள். இத்திறமை பிறப்பால் வருவதல்ல. தாம் செய்யும் செயலால், கடுமையான உழைப்பால், ஆழ்ந்த சிந்தனையால், எல்லாக்

காரியங்களையும் அலசிப்பார்த்து நன்மையான முடிவுக்கு வருவதால் கிடைப்பதாகும். த ம து, மற்றவர்களுடைய தவறுகள் மூலமாகப் படிப்பினைகளைப் பெறுவது இந்தத் திறமையை அதிகரிக்கச் செய்யும்.

தமது துறையில் நிறைந்த அறிவு

தன்னை உணர்ந்து தனது புலமை உணர்ந்து, தொடந்து அறிவை வளர்த்துக் கொள்வதால் நிறைந்த அறிவைப் பெற முடியும். தனது திறமைகளைத் தனி உடைமை என்று எண்ணாது மனித நலத்திற்காகப் பயன்படுத்துவது என்று உணரும் போது ஆழ்ந்த அறிவும் வளருகிறது. விருத்தியா கிறது. அய்யா அவர்கள் தினமும் புத்தகம், புதிய செய்திகள் கொண்ட பத்திரிக்கைகள், இதழ்கள், நூல்கள் ஆகியவற்றை ஓயாது படித்துக் கொண்டேயிருப்பார்கள்.

> ''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு'.

என்ற திருக்குறளுக்கேற்ப நாள்தோறும் நயம் தரும் நூல் களைப் படித்து வந்தார்கள். காலையில் வெற்றிக்கு அறிகுறி யாக தியானம் செய்து திருக்குறள், கீதை படித்து மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வார்கள். படித்தவற்றில் காணும் கருத்துக்களை வல்லுநர்களுடன் விவாதிப்பார்கள்.

> ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்று குறட்பாவை உண்மையாக்கினார்கள்.

அனைவரும் நாட்டில் அன்றாடம் நடக்கும் செய்தி களை அறிந்து கொள்ள வேண்டுமென்று கூறுவார்கள்,

விடுதி மாணவிகளிடம் பிரார்த்தனைக்குப் பின் பேசும்பொழுது அவர்கள் தாம் கற்ற நூல்களிலிருந்து, மாணவிகளை மாட்சியுடையவர்களாக்கும் கருத்துக்கள் மிக்க செய்திகளைக் கூறி, அவர்களும் பண்புடையவர்களாகத் திகழ வேண்டுமென்று வாழ்த்துவார்கள்.

தன்னிறைவு

வெற்றி காணும் மக்கள் தம் ஆற்றல்களை, சம்பத்துக்களைச் சார்ந்தே வாழ்கிறார்கள். ஒருவர் எவ்வளவு நல்லவர் அல்லது தம்மைப்பற்றி எவ்வளவு நல்லவர் என்று பிறர் கணிப்பதுடன், முக்கிய சந்தர்ப்பங்களில் தாமாகவே தீர்மானங்கள் செய்யத் தைரியம் இருக்கிறதா என்று கணிப்பதும் தன்னிறைவாகும். அதாவது, தான் அடைய வேண்டிய குறிக்கோள்கள் எவை என்று தெரிந்து அதை அடைந்தே தீருவேன் என்ற மன உறுதியுடன் இருப்பதாகும். அய்யா அவர்களின் வாழ்க்கையில் இத்தகைய தன்னிறைவு, தன்சார்பு மலர்ந்திருந்தது. எத்தகைய இடர் வந்தபோதும், அவர்கள் தமக்கென இளமையிலேயே வகுத்துக் கொண்ட பாதையை விட்டு அகலாமல் மாபெரும் மனத்தைரியத்துடன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மூலம்,

'எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனினும் வெற்றி'

என்ற பாரதியாரின் கூற்றுப்படி அனைத்திலும் வெற்றி வாகை சூடினார்கள்.

பொது அறிவு

ஒரு பிரச்சினையில் சிக்கலான அம்சங்களை விரைவில் புரிந்து கொண்டு, அவற்றைத் தெளிவுடன் திண்மையாக

நீக்கும் வலிமைதான் பொது அறிவு என்பது. இதற்கு எப்பொழுதும் ஆய்வு செய்து கொண்டிருக்கும் உள்ளமும், பரந்த விருப்பமும் தேவை. அமரர் அய்யா அவர்கள் பிரச்சினைகளை மற்றவர்களுடன் கலந்து பேசி, விரைவில் காரணங்களைக் கண்டுபிடித்து விலக்குவார்கள். எங்கள் கல்லூரி தன்னாட்சி உயர்வைப் பெற்றபோதும், பல்கலைக்கழகமாக உயர்ந்தபோதும் ஆங்காங்கே எழுந்த சிக்கல்களைக் கலந்தாலோசித்து அறிவுரை வழங்கினார்கள். அய்யா அவர்களிடம் பிரச்சினைகளைக் கொண்டு சென்றால், 'இதுதானாம்மா? இப்பொழுதே தீர்ந்து விடும்; இதற்குத்தானா இவ்வளவு வருத்தம்?' என்று சொல்லி ஆலோசனை கொடுத்து, மறுமுறை பார்க்கும்பொழுது அச்செயலைக் குறித்து அன்போடு விசாரிப்பார்கள்.

### திட்டங்களை அமுலாக்கும் திறன்

திட்டங்கள் தீட்டுவது எளிது. ஆனால் அவற்றைச் செயலாக்குவது அரிது.

> 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்
> சொல்லிய வண்ணம் செயல்'

என்னும் திருக்குறளும் இதனையே வலியுறுத்துகிறது. அய்யா அவர்களின் சொல்லும், செயலும் ஒன்றாகவே இருந்தன. சொல்லியதைச் செய்தார்கள். செய்தவற்றைச் சொன்னார்கள் தாம் மேற்கொண்ட பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கும் வலிமை மகத்தானது. அதற்கு, தாமாகவே சிந்தித்துச் செயலாக்கும் திறன், வேலை செய்யும் பழக்கம், அறிவு ஆகியவை தேவை. எச்செயலையும் உடன் செய்வோரோடு கலந்துகொண்டு திட்டமிடாமல் தொடரமாட்டார்கள். தீட்டிய திட்டத்தை மீண்டும் படித்துப் பார்த்து, அதன் செயலாக்கத்தையும் தொடர்ந்து கவனித்து, அது முழுவதும் முற்றுமாக

முடியும்படி வழிசெய்வார்கள். கட்டடம் கட்டுவதாக இருந்தாலும், கருத்தரங்குகள் கூட்டுவதானாலும், புது கருத்துக்களைப் பாடத்திட்டத்தில் புகுத்துவதானாலும் திட்டமிட்டே செயல்படுவார்கள்.

மனதில் உறுதியும், நினைவு நல்லதும் கொண்டு எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறவும், எங்கு நோக்கினும் வெற்றி பெறவும் சிறந்த பண்புகளைப் பெற வேண்டும். அதற்கு அய்யா அவர்களின் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

---

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

— *திருக்குறள்*

---

# 34. நிலைத்த புகழ்

வானாகி, மண்ணாகி, ஊனாகி, ஒளியாகி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறைவனால் படைக்கப்பட்ட பொருள்களுள் ஆறறிவு மிக்க மனித குலமே சிறந்தது. மற்றவர்களுக்காகச் சேவை செய்பவர்களே யாவராலும் மதிக்கப்படுகின்றனர். மனிதனாய்ப் பிறந்து, மனிதனாய் வாழ்ந்து இறை நிலையை அடைகின்றவர்களே நிலைத்த புகழ் பெற முடியும்.

மனிதன் வாழும் நாளில் குறிக்கோளுடன் வாழ வேண்டும். இவ்வுலகில் பிறந்த நோக்கத்தை உணர்ந்து செயல்பட வேண்டும்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று'

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்து தெய்வ நிலையை அடைந்தவர்கள் அய்யா அவர்கள். அவர்களின் வாழ்க்கை, மக்கள் உய்த்துணர வழி வகுக்கிறது.

நிலைத்த புகழ் பெற வேண்டுமானால் ஆண்டவனை அனுதினமும் வாழ்த்தி வணங்க வேண்டும். அய்யா அவர்கள், 'பிரார்த்தனை என்பது காலையில் திறவுகோல்; மாலையில் தாழ்ப்பாள், என்றறிந்து காலை, மாலை இருவேளைகளிலும் இறைவன் அடிபணிய தவறியதே இல்லை. இறைவனை வேண்டிய பின் தம் கடமைகளைச் செய்வார்கள். அவர்களுடைய புகழ் என்றும் எல்லோராலும் போற்றப்படும்.

நிலைத்த புகழ் பெற வேண்டுமானால் 'ஈத்துவக்கும் இன்பம் உடையவர்களாக' விளங்கவேண்டும். தனக்குத்

தனக்கு என்று நினைக்காது, எல்லோருக்கும் கொடுத்து மகிழ்ச்சி அடைய வேண்டும். அய்யா அவர்கள், பொன்னை கொடுத்தார்கள். பொருளைக் கொடுத்தார்கள். இவற்றிற் கெல்லாம் மேலாகத் தம் வாழ்க்கையையே அர்ப் பணித்தார்கள்

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு

என்ற திருக்குறள் வழி நின்று வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளல். பிறர்வாழ வழிவகுத்த செந்தமிழ்ச் செம்மல். அவர்கள் அரும் பாடு பட்டு வளர்த்தக் கல்வி நிலையங்கள் அவர்களின் புகழைப் பாடிக் கொண்டே, அவர்களுடைய பெருமையைச் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

மற்றவர்கள் தன்னைத் தூற்றும் போது தலைநிமிர்ந்து நிற்கின்றவர்கள், தன்னம்பிக்கையோடு செயல்படுகின்ற வர்கள், பொறுமையோடு இருப்பவர்கள், வெற்றித் தோல்வி களைச் சமமாக எண்ணுகின்றவர்கள், சாதாரண மக்களிடம் நட்புரிமையோடு பழகுகின்றவர்கள், எண்ணிய எண்ணி யாங்கு எய்துகின்றவர்கள். ஒவ்வொரு துளி நேரத்தையும் பயனுள்ள முறையில் செலவிடுகின்றவர்கள், பிறரால் பாராட்டப்படுவார்கள். நிலைத்தப் புகழ் பெறுவார்கள், அய்யா அவர்கள் எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார்கள். அனைவரையும் சமநோக்குடன் காண்பார்கள்.

'ஒன்றா உலகத் துயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

என்ற திருக்குறள்படி உயர்ந்த புகழ் அய்யா அவர்களைத் தேடிச் சென்றது.

ஆன்மாவின் தூய்மையுடன் வாழுகின்றவர்களே நிலைத்த புகழ் பெறமுடியும். அறத்தின் வழி நின்று லட்சியமெல்லாம் தேசத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து, தன்னை அர்ப்பணிக்கின்றவர்களே நிலைத்த புகழைப் பெறுவார்கள்.

இரக்கமுள்ள நெஞ்சில் அன்பு பிறக்கும். நாணயம் உள்ள நெஞ்சில் அறம் பிறக்கும். நன்மை தீமை தெரியும் நெஞ்சில் மெய்யுணர்வு பிறக்கும். ஆணவமில்லாத நெஞ்சில் மரியாதை பிறக்கும். ஒவ்வொருவரும் செய்கின்ற செயல்களின் மூலமாகவே அறியப்படுகிறார்கள். நல்லவற்றைக் காணக் கண்களும், நல்லவற்றைப் பேச வாயும், நல்லவற்றைக் கேட்கச் செவிகளும், நல்லவற்றைச் செய்யக் கைகளும் ஆண்டவனால் கொடுக்கப்பட்டிருக்கின்றன, என்று யார் நினைக்கிறார்களோ அவர்களே சிறப்பினை அடைவார்கள்.

அய்யா அவர்கள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலும் பிறருக்கு நன்மை செய்யக்கூடியதாக இருக்கின்றதா என்று ஆய்ந்து பார்த்தே செயல்படுவார்கள். அவர்கள் செய்த செயல்கள் யாவும் நன்மை பயக்கக் கூடியதாகவே இருந்தன. 'எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுவதேயல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்ற நோக்கத்தோடு அய்யா அவர்கள் வாழ்ந்து வழிகாட்டினார்கள். நிலைத்த புகழைப் பெற்றார்கள்.

''வறியவர்கள் வாழ, உய்ய நீங்கள் பாடுபட வேண்டும். உங்கள் கல்வி அமையவேண்டும்'' என்பார்கள், ''அவர்கள் வாழ்வு வளம்பெற யார் தம்மை சேவைக்கு

அர்ப்பணிக்கிறார்களோ அவர்கள் ஆண்டவனின் குழந்தைகள்'' என்று அடிக்கடிக் கூறுவார்கள்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நீஇ தாமாய்ந்தனரே

என்ற புறநானூற்றுப் பாடலுக்கேற்ப அய்யா அவர்கள் நிலைத்த புகழ் பெற்றுள்ளார்கள். அவர்களால் உருவாக்கப் பட்ட எங்கள் கல்வி நிலையங்கள் அவர்களின் புகழை என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

(DEEMED UNIVERSITY)
108914
LIBRARY
T4·44136 AVIW
3INS

---

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்

---

எங்கு மனம் பயமற்று விளங்குகிறதோ,

எங்கு தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ,

எங்கு அறிவு சுதந்திரத்துடன் பொலிகிறதோ,

எங்கு இன மதப்பிரிவுகளால் உலகம் பிளவுபடாமல் உருப்பெற்றிருக்கிறதோ,

எங்கு உண்மையில் ஆழத்தினின்று சொற்கள் உதயமாகின்றனவோ,

எங்கு தளரா முயற்சி பரிபூரணத்தை நோக்கி கைகளைப் பரப்புகிறதோ,

எங்கு மாண்ட பழக்கத்தின் பயங்கரமான இருண்ட பாலைவன மணலில், பகுத்தறிவெனும் ஆறு வழிதப்பாது செல்கின்றதோ,

எங்கு விரிந்த சிந்தனையிலும் செயலிலும் எனது மனத்தை நினது அருள் இழுத்துச் செல்கின்றதோ,

அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில், என் அப்பனே, எனது நாடு விழித்தெழுக.

—இரவீந்திரநாத் தாகூர்

# அய்யா அவர்களின் அன்புக்குரல்

செல்வமும், அதிகாரமும் ஒருவனிடம் இருந்து அவனிடம் ஊக்கமும், உழைப்பும் இல்லாமற் போனால் அவன் அரும்பெரும் காரியங்களைச் செய்யச் சக்தியற்றவனாக இருப்பான். ஆதலால் எல்லாத் துறைகளிலும் மகத்தான காரியங்களைச் செய்வதற்கு கடுமையான உழைப்பு அவசியம்.

எல்லையற்ற பலம், நம்பிக்கை, சக்தி, அனைவரிடத்தும் அன்பு, எளிமை, வினயம், ஆண்டவனிடமும் தேசத்தினிடமும் பக்தி, தியாக புத்த, சேவை உணர்ச்சி, சகோதரத்துவ மனப்பான்மை இவைகளே நம் குழந்தைகளின் இலட்சியமாய் இருக்க வேண்டும்.

பதவி, அதிகாரம், பணம், கல்வித் தகுதி ஆகியவற்றைக் கொண்டு ஒருவருடைய பெருமையை நாம் எடை போடக்கூடாது. மாறாக நேர்மை, பக்தி ஆகியவையே ஒருவருடைய பெருமைக்கு அடிப்படைகளாகும்.

எந்த [illegible] இருந்தபோதிலும், தங்கள் வேலையில் ஊக்கம் இருப்பவர்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி இருக்கும். அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவார்கள். அவர்கள் வாழ்க்கையே இன்பமாக இருக்கும். அத்தகையவர்கள்தாம் பெரிய காரியங்களைச் சாதிக்கு சக்தியைப் பெறுவார்கள். மற்றவர்களுக்கு அவர்களிடத்தில் நம்பிக்கை உண்டாகும்.

T4
3